**ANGLO ASIAN MINI MART**
513 High Road
Wembley,
Middx
Hao 4 ag
Tel: 0181-900 2451
தரமான இலங்கை Groceries
கடலுணவு வகைகள், மரக்கறி
வகைகள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.
Pub.

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு

பிரித்தானியா

Eelamurasu Weekly


முரசு: 7 22 – 28 மார்ச் 2001 முழக்கம்: 323

**FORWARD CONSULTANTS**
CONSULTING FOR PEOPLE,
WE PROVIDE !!!!
*** ANY PURPOSE LOAN ***
*** BUSINESS LOAN ***
*** RESIDENTIAL MORTGAGES ***
CALL US ON 020 8900 9052
1 LANCELOT PARADE, LANCELOT ROAD, WEMBLEY, MIDDX HAO 2 AJ, UK
info@forwardconsultants.co.uk
www.forwardconsultants.co.uk
Pub.

ஜேர்மனியில் ஜனாதிபதி சந்திரிகா



ஜோர்ஜ் பெர்னாண்டஸ்



மரணமடைந்த மாணவி கஜனி





வெற்றிக் களிப்பில்
பாரிஸ் நகரபிதா
பெர்த்திரோன் திலனுவா
*(Bertrand Delanoë)*

மசிடோனியா –
யுத்தத்தை நோக்கி



## நெதர்லாந்து நீதிமன்றத்தில் சந்திரிகா மீது வழக்கு ! 03

தமிழ்ப் பகுதிகளில்
## இராணுவ ஆக்கிரமிப்பாளரின் பண்பாட்டுச் சீரழிப்பு ! 24

ஜேர்மனி
## நீச்சல் பயிற்சியின்போது தமிழ் மாணவி பலி ! 03

## இந்தியாவை உலுக்கிய ஆயுத பேர ஊழல் ! 32

## பேச்சுவார்த்தையும் இராணுவச் சமநிலையும் 23
டி.சிவராம்

## 5வது பல்க்கன் யுத்தத்திற்கு மசிடோனியா வழிவகுக்குமா? 15

**தமிழினி**
**TAMILINI**
பல்பொருள் அங்காடி
*Cash and Carry*
195-197 The Broadway, Southall, Middx Ub1 1LZ
Tel: 0181-606 9900 Fax: 0208-813 8269
* எமக்கு லண்டனில் வேறு எப் பகுதியிலும் கிளைகள் எதுவும் கிடையாது!

- MD JAM - 99 P
- KIST JAM - 99P
- MD CORDIAL - £1.99P (இரண்டு வாங்கினால் மூன்றாவது இலவசம்)
- KIST CORDIAL - £1.99 P (இரண்டு வாங்கினால் மூன்றாவது இலவசம்)
- LARICH மோர்மிளகாய் (ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம்)
- ROSE SYRUP - £1.99
- RED BULL (Imp) - £12.00 Case (24x 250 Ml)
- பனங்களி - £1.79P



ஈழமுரசு

Eelamurasu Weekly

"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"


# விகாரமாதேவியின் மசக்கையும் தமிழனின் இரத்தமும்

தமது ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தோடு விடுதலைப் புலிகள் சமாதானத்திற்கான பாதையில் செல்லச் செல்ல சிறீலங்கா அரசோ தனது கோர யுத்தத்தைத் தொடர்ந்தபடி பயங்கரவாத ஒழிப்பு என்ற கோஷத்துடன் உள்நாட்டு அரசியலிலும் சர்வதேச அரசியலிலும் தனது செப்படி வித்தைகளை நடத்திக்காட்டுகின்றது. இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது என்பது சிறீலங்கா அரசினைப் பொறுத்தவரை தமிழினத்தை அடிமைப்படுத்தும் ஒரு தீர்வாகக் கொடுப்பதையே திட்டமாகக்கொண்டிருப்பதால்; தமிழினத்தின் சுயநிர்ணய உரிமைக்காக போராடிவரும் விடுதலைப் புலிகளை சர்வதேச அழுத்தத்திற்குள் உட்படுத்தி அவர்களை தமிழ் மக்களில் இருந்து ஓரங்கட்டிவிடலாம் எனவும் சிறீலங்கா மனப்பால் குடிக்கின்றது. எல்லோரையும் எல்லா நேரத்திலும் ஏமாற்றமுடியாது என்பதையே இவ்வேளை சிறீலங்கா அரசு ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அரச தலைமையோ தான் சமாதான தீர்வில் நாட்டம் கொண்டிருப்பதாக சர்வதேசத்திற்கு போக்குக்காட்டி அங்கிருந்து நிதியினை கறந்துகொள்ள முயற்சிகளை எடுக்க அந்தத் தலைமையில் பங்கேற்கும் பேரினவாதக் குஞ்சுகளோ தமிழ் மக்களுக்கெதிரான பேரினவாதச் சிந்தனைகளை சிங்களதேசம் எங்கும் பரப்பி வருக்கின்றது. அண்மையில் கூட அமைச்சரவையில் இருக்கும் அமைச்சர் ஒருவர் தான் பிரதமருக்கு எந்தவகையிலும் சளைத்தவர் அல்ல எனக் காட்டி இனவாதத்தினை அள்ளி வீசியுள்ளார்.

சிங்கள சரித்திர வீராங்கனையாகக் கருதப்படும் விகாரமாதேவிக்கு கர்ப்பகால மசக்கை ஏற்பட்டபோது அவளுக்கு தமிழன் ஒருவனின் இரத்தத்தினை ருசிபார்க்கும் ஆசை எழுந்ததாகவும் அந்த ஆசையினை விகாரமாதேவியின் வீரன் ஒருவன் நிறைவேற்றும் பொருட்டு அநுராதபுர எல்லைப்புறத்திற்குச் சென்று தமிழன் ஒருவனின் கழுத்தினை வெட்டி, வெட்டிய அந்த வாளினை விகாரமாதேவியிடம் கொடுத்து அதனை ருசி பார்க்கக் கொடுத்தான் எனவும் சிங்கள வீரர்கள் அன்று தமிழ் மன்னனான எல்லாளனை தோற்கடித்தார்கள். அதனைப் போன்று இன்றும் சிங்கள இளைஞர்கள் ஒன்று சேர்ந்து விடுதலைப் புலிகளை ஒழிப்பதற்கு முன்வரவேண்டுமென அந்த அமைச்சர் பகிரங்கமாகவே பொதுக்கூட்டமொன்றில் பேரினவாதக் கூச்சலை விடுத்துள்ளார். ஆனால் இவ்வாறான அரச பங்கரவாதிகளின் பேரினவாத கூச்சல்களெல்லாம் சர்வதேசத்தின் காதுகளில் விழுந்ததாகத் தெரியவில்லை. அவர்களுக்கு ஒரு இனத்தின் சுய நிர்ணய உரிமைப் போராட்டம் பயங்கரவாதமாகத் தெரிவது இன்றைய காலத்தின் கோலம்.

திரிக்கப்பட்ட வரலாற்று ஆதாரங்களை தமது பேரினவாத சிந்தனைகளுக்கு பக்கத்துணை தேடியபடி சிங்கள அரசியல் தலைமைகள் தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதத்தைக் கக்கிக்கொண்டிருக்க மறுபுறத்தே தான் சமாதானத்தை முன்னெடுக்கப்போவதாக சிறீலங்காவின் அரச தலைவர் படியேறித் திரிவதுதான் வேடிக்கையான விடையம்.




# பார்வை

## சந்திரிகாவின் ஐரோப்பியப் பயணமும் – வலுப்பெறும் பிரபாகரனின் வேண்டுதலும் !

சிறீலங்காவின் சனாதிபதியாக மட்டுமல்ல நிதி அமைச்சராகவும் செயற்படும் சந்திரிகா பண்டாரநாயக்க பாராளுமன்றத்தில் 2001ம் ஆண்டுக்கான பட்ஜெட்டை தாக்கல் செய்துவிட்டு ஐரோப்பிய பயணம் மேற்கொள்வது, பிரதான எதிர்க்கட்சிகளின் கண்டனத்தையும், விமர்சகர்களின் கண்டனங்களையும் பெற்றுள்ளது. பாராளுமன்றத்தில் நிதிநிலவர அறிக்கைகளை சமர்ப்பித்து - எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டிய சனநாயகப் பொறுப்பை கைவிட்டுவிட்டு, ஏன் சந்திரிகா 5 நாடுகளுக்கான பயணத்தை மேற்கொண்டுள்ளார்?

இந்தக் கேள்விக்கு இரு பதில்கள் வழங்கப்படுகின்றன. புலிகளின் மீது பிரித்தானிய அரசு விதித்த தடையைத் தொடர்ந்து, பிற நாடுகளிடமும் தடையை விதிக்குமாறு நெருக்கடி கொடுக்கவே அம்மையார் பயணம் செய்கின்றார் என சந்திரிகாவின் ஆதரவாளர்கள் கொழும்பு ஊடகங்களில் எழுதுகின்றனர். மேலும், புலிகளுக்கும் - தமக்கும் இடையே இடம்பெறும் பேச்சுக்களைப் பற்றிய விபரங்களை 5 நாடுகளின் தலைவர்களுக்கும் தெளிவுபடுத்தவே இந்தப் பயணம் என்றும் அவர்கள் 'கூடுதல்(?) விபரம்' தருகின்றனர். இரண்டாவது தரப்பினர் இதனை மறுக்கின்றனர். பெரும் பொருளாதார நெருக்குவாரத்தில் அகப்பட்டுள்ள சிங்களத்திற்கு உதவுமாறு 'நேரடியாக பிச்சை கேட்கவே' இந்த அவசரப் பயணம் என்கின்றனர். தனக்குத் தெரிந்த அனைத்து வித்தைகளையும் வெளிக்காட்டி அதன் மூலம் ஜேர்மனி போன்ற நாடுகளின் தலைவர்களை கவர்ந்து பெரும் பொருளாதார உதவிகளைப் பெறவே சந்திரிகா முனைகின்றார் என்கின்றனர் அவர்கள். இதனால்தான் கொழும்பில் பட்ஜெட் விவாதங்கள் பாராளுமன்றத்தில் இடம்பெறுகையில் கூட, ஐரோப்பாவில் அம்மையார் பயணம் தொடர்கின்றார் என கூறப்படுகின்றது.

சிங்களத்தின் பொருளாதாரம் பெரும் ஆட்டம் கண்டுள்ளது என்பதை அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர். சிறீலங்காவின் வரவுக்கும் செலவுக்கும் இடையே சுமார் 25 தொடக்கம் 30 வீத இடைவெளி இருப்பதாகவும், அதனை நிரப்புவது முடியாத காரியம் எனவும் கூறப்படுகின்றது. உலக வங்கி போன்றன 'ஒரு எல்லைவரை' உதவிகளை வழங்கும் என்றாலும் உலக நாடுகளின் உண்மையான உதவிகள்(?) மூலம் மட்டுமே பொருளாதாரத்தைக் காப்பாற்றலாம் என்கின்ற நிலையை நோக்கி சிறீலங்கா விரைந்து வருகின்றது.

**சந்திரிகாவைப் பொறுத்தவரை, புலிகளை பயங்கரவாதிகள் எனப் பட்டம் சூட்டி அவர்களை அழிப்பதற்கான உதவி என்கின்ற பெயரில் பெருமளவிலான உலக உதவிகளை பெறலாம் என நம்பியே செயற்பட்டார். ஆனால், தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனின் அரசியல் காய்நகர்த்தல் அந்த திட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது. தொடர்ச்சியான போர்நிறுத்தம், மக்களின் அரசியல் எழுச்சி என்பன உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்து சிங்களத்தின் மீது நெருக்கடிகளை தோற்றுவித்துள்ளது. பொருளாதார உதவிகளே உலகநாடுகளின் கைகளில் உள்ள துருப்புச் சீட்டு. தலைவர் பிரபாகரன் தனது 2000ம் ஆண்டுக்கான மாவீரர் நாள் உரையில் இதனை கோடிட்டுக் காட்டினார்.**

தற்போது புலிகளுடனான பேச்சுக்களின் வெற்றியைப் பொறுத்தே உதவிகள் தீர்மானிக்கப்படும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் பகிரங்கமாகவும், நேரடியாகவும் சந்திரிகாவுக்கு அறிவுறுத்தியுள்ளார் என ஐரோப்பிய ஊடகங்கள் கூறுகின்றன. ஜேர்மனியும் இதனையே கூறுகின்றது. பிரித்தானியா, புலிகள் மீது தடை உத்தரவுகளைப் பிரயோகித்தாலும், கூட்டு ஐரோப்பிய தீர்மானத்தை ஆதரிக்கின்றது என்பதை வலியுறுத்துகின்றது.

தான் நம்பி வந்த உதவிகள் பகிரங்கமாக கிட்டாத நிலையில், தனது குரலின் தொனியை மாற்றி, நோர்வே பேச்சுக்களின் மீது தனக்கு தீராத கரிசனை உள்ளது போன்று சந்திரிகா செவ்விகள் வழங்குகின்றார். முன்பு கொழும்பில் நோர்வே தூதுவரை சந்திக்க நேரம் ஒதுக்காத அவர், ஆயுத வியாபாரிகளுக்கு நேரத்தை ஒதுக்கியமையை உலகம் கண்டிருந்தது. இப்போது நோர்வே தூதுவருக்கு புகழாரம் சூட்டி(!) தன்னை உருமாற்ற(!) புறப்பட்டுள்ளார்.

**முடிவில், தமிழீழ தேசியத் தலைவர் பொருளாதார உதவிகள் தொடர்பாக முன்வைத்தொரு விடயத்தை ஐரோப்பிய சமூகம் புதிய வடிவத்தில் அமுல்படுத்த முயல்வது தமிழர்களுக்குக் கிடைத்த வெற்றி எனலாம். தனது ஐரோப்பியப் பயணத்தில் சந்திரிகா இதனை கண்டிருப்பார் !**

★ ★ ★

## ஆப்கான் புத்தர் சிலை: கொழும்பிற்கு மற்றுமொரு துருப்புச்சீட்டு

சிங்களத்தின் இணையத்தளம் ஒன்று புலிகள் தலீபான்களின் புத்த சிலைத் தகர்ப்பை வரவேற்கின்றனர் எனப் பரபரப்பு செய்தியொன்றை வெளியிட்டுள்ளது. இணையத்தளத்தில் உள்ள ஒரு தமிழ் இணையத்தில் ஆப்கானிஸ்தானில் புத்த சிலையை உடைப்பதை நியாயப்படுத்தி ஒரு முஸ்லீம் எழுத்தாளர் எழுதிய கட்டுரையை இதற்கு ஆதாரமாக சிங்கள இணையத்தளம் கூறுகின்றது. புலிகளுடன் தொடர்பற்ற ஒரு தமிழ் இணையத் தளத்தை புலிகளுடன் தொடர்புபடுத்திக் கூறுவது வழமையான சிங்கள நச்சுத்தனம் எனினும், ஆப்கானிஸ்தானில் உடைக்கப்படும் புத்த சிலைக்காக சிறீலங்கா வடிக்கும் கண்ணீரை பல தரப்பும் வேடிக்கையாகப் பார்ப்பதை சிறீலங்கா அறிந்து வைத்துள்ளது.

பல்லாயிரம் கோவில்களை இடித்து தமிழின அழிப்பை மேற்கொள்ளும் சிறீலங்கா, பெரிய பௌத்த நாடுகளை முந்திக்கொண்டு அந்த புத்த சிலையை காப்பாற்ற முனைவது வேடிக்கையானது. இந்த முயற்சியில் வெறும் பௌத்த - சிங்கள இனவெறியே உள்ளது என்பதும், தனது பௌத்த - சிங்கள இனவெறித்தளத்தைக் காப்பாற்றவே சந்திரிகாவின் அரசு தலைகீழாக நிற்கின்றது என்பதும் அனைவராலும் அறியப்பட்டது.

கொழும்பில் ஒரு தமிழ் ஆய்வாளர் ஆங்கில ஏட்டில் கொழும்பின் இந்த இரட்டை வேடம் பற்றிக் கேள்வி எழுப்பினார். பல தமிழ் இணையத் தளங்கள் சிறீலங்காவால் இடிக்கப்பட்ட கோவில்களைப் பட்டியலிட்டன. இது கொழும்பு சிங்கள பேரினவாதிகளுக்கு எரிச்சலூட்டியது. இவ்வாறு கேள்வி எழுப்புபவர்களை பயங்கரவாத சட்டத்தின் கீழ் உள்ளே தள்ள ஒரு முத்திரை குத்தல் தேவைப்பட்டது. இப்போது புலி முத்திரையை சிங்கள இணையத்தளம் குத்திவிட்டது. 'இது சிறீலங்காவின் பௌத்த கரிசனை மீது கேள்வி எழுப்பும் அனைவருக்கும்' விடுக்கப்பட்ட எச்சரிக்கை.

ஆயினும், ஆப்கான் தலீபான்கள் புத்தர் சிலையை உடைத்துவிட்டதாக அறிவிக்கப்படுகின்றது. முதலில் இவ்விவகாரத்தை கைகளில் எடுக்க முற்பட்ட இந்தியா பின்னர் அமைதி காத்தது. ஒரு கலாச்சார அழிப்பு என்கின்ற மட்டத்தில் பல நாடுகள் கண்டனங்களை தொடுக்க, சிறீலங்கா பிரதமர் மட்டும் பாக்கிஸ்தான் சென்று உடைக்கப்பட்ட சிலையை கொழும்பு கொண்டு சென்று மீளக்கட்டப் போவதாகவும், அதற்கு நிதி ஒதுக்கப்போவுதாகவும் கூறுகின்றார். எப்படியாயினும், இவ்விவகாரத்தை துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தி தன்னை ஒரு பௌத்தத்திற்காக துடிக்கும் நாடு என உலக பௌத்த நாடுகளிற்குக் காட்டிட சிறீலங்கா முயன்றுள்ளது. தனது இராஜதந்திர தேவைகளுக்காக கிழக்காசிய நாடுகளை அணுகும் போது இந்த சிலை விவகாரத்தை சிறீலங்கா 'வெளிச்சம்' போட்டுக்காட்டும்.

- ராஜா

# நெதர்லாந்து நீதிமன்றத்தில் சந்திரிகா மீது வழக்கு

(19.03.01)

மூன்று வாரகால ஐரோப்பிய சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா மீது, நெதர்லாந்தில் உள்ள சர்வதேச நீதிமன்றத்தில் போர்க் குற்றம் புரிந்ததாக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. நெதர்லாந்தின் பிரபல்ய வழக்கறிஞர் திரு. ஸ்கோல் அவர்கள், தமிழ் மக்கள் மீதான உரிமை மீறல் சம்பந்தமாக சிறீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு எதிராக இவ் வழக்கைத் தொடுத்துள்ளார். இவ் வழக்கில் ஜனாதிபதியை கைது செய்து அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை



எடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளதுடன், இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு நிகழும் கொடூரமான கொடுமைகளுக்கும் துன்புறுத்தல்களுக்கும் இவர் உடந்தையாக உள்ளார் எனவும் தனது மனுவில் அவர் குறிப்பட்டுள்ளார்.

நெதர்லாந்தில் வாழும் இரு அகதிகளின் சார்பிலேயே இவ் வழக்கறிஞர் இவ் வழக்கினை தாக்கல் செய்துள்ளார். இவ் வழக்குத் தாக்கல் பற்றி செய்தி வெளியிட்ட நெதர்லாதந்தின் செய்தி நிறுவனம் ஒன்று, சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவை கைது செய்வதற்கான போதிய ஆதாரங்கள் உள்ளதாகவும், இதன் அடிப்படையில் அவரை எந்தவேளையிலும் கைது செய்யலாம் எனவும் அச் செய்தியூடகம் தெரிவித்திருந்தது.

எனினும் நெதர்லாந்தின் நீதியமைச்சின் வட்டாரங்கள் இவருக்கு எதிரான வழக்குகளை ஆராய்ந்தன் பின்னர், சிறீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட மனித உரிமை மீறல் தொடர்பாக திருஸ்கோல் அவர்கள் தகுந்த ஆதாரங்களை சமர்ப்பிக்க தவறியதால், அவர் தாக்கல் செய்த மனுவை ஏற்க மறுத்துள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இருந்தபோதிலும், சந்திரிகா குமாரதுங்கா மீது தொடரப்பட்டுள்ள இந்த வழக்கானது, தமிழீழப் பகுதியெங்கும் சிறீலங்கா

(☞ 4ம் பக்கம்)

## தேசியத் தலைவர் முன்னிலையில் உறுதிப்பிரமாணம்

(19.03.01)

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் முன்னிலையில் தமிழீழ நீதியாளர், சட்டவாளர்களுக்கான உறுதிப் பிரமாணம் எடுக்கும் நிகழ்வுகள் நேற்று 18.03.01 ஞாயிறன்று மாலை 7 மணியளவில் இடம்பெற்றுள்ளன. நீதி, நிர்வாத்துறைப் பொறு-ப்பாளர் திரு.பரா அவர்களால் அகவணக்கத்துடன் உறுதிப்பிரமாண நிகழ்வுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

முதலில் உச்ச நீதிமன்ற நீதியாளர்களுக்காக மதிவர்மன், சுடர், ஒப்பிலான் ஆகியோர் உறுதிப்பிரமாணம் எடுத்தனர். தொடர்ந்து மேன்முறையீட்டு நீதியாளர்கள், மேல் நீதியாளர்கள், மாவட்ட நீதியாளர்கள், சட்டவாளர்கள் ஆகியோர் தேசியத் தலைவர் முன்னிலையில் உறுதிப்பிரமாணம் எடுத்தனர்.

தொடர்ந்து தேசியத் தலைவர் அவர்கள் கருத்துரை வழங்கும்போது, வல்லவன் வகுத்ததே சட்டம் என்பதே தற்போதைய நடைமுறை. ஆனால் நாம் அப்படி இல்லாது, எமது மக்களின் பாதுகாப்பிற்கும் நலன்களுக்கும் உகந்ததாக எமது நீதி இருக்க வேண்டும். நாம் உணர்வுகளுக்கும், உணர்ச்சிகளுக்கும், உறவுகளுக்கும் முதலிடம் கொடுக்காமல், உண்மையான நீதிக்கும் அதன் அடிப்படையில் உருவா

(☞ 4ம் பக்கம்)

## கொழும்பு வரும் ஆயுத தளவாடங்கள்

### இராணுவத்துக்கு மேலும் 8 பல்குழல் எறிகணைச் செலுத்திகள்

(19.03.01)

விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களுக்கான நல்லெண்ண அடிப்படையில் போர் நிறுத்தத்தை மேற்கொண்டு வரும் நிலையில், போர் நிறுத்தம் மேற்கொள்ள மறுப்புத் தெரிவித்துவரும் சிறீலங்கா அரசு, பெரும் போர் நடவடிக்கைகளுக்கான பாரிய ஆயுதக் கொள்வனவுகளை அவசர அவசரமாக மேற்கொண்டுவருகின்றது. கடந்தவாரம் செக் குடியரசிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட பெருந்தொகை ஆயுத தளபாடங்கள் கொழும்புக்கு எடுத்து வரப்படுவதாக இராணுவ வட்டாரங்களை ஆதாரம்காட்டி கொழும்பு ஆங்கில வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது. புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்டுள்ள ஆயுத தளவாடங்களில் எட்டுப் பல்குழல் எறிகணை செலுத்திகள் (மல்ரி பரல்கள்), 12 ரீ—55 ரக டாங்கிகள் உட்பட ஏராளமான இராணுவ தளவாடங்கள் கொழும்புத் துறைமுகம் நோக்கி வந்துகொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


இதேவேளை, போரை முன்னெடுத்துச் செல்ல இராணுவத்துக்கு ஆள் சேர்க்கும் நடவடிக்கையை தீவிரப்படுத்தியுள்ள சிறீலங்கா இராணுவ தரப்பு, தப்பியோடிய படையினர் சரணடையும் பட்சத்தில் அவர்களை மீண்டும் தப்பியோடாது தடுப்பதற்கு, தண்டனை எதுவு

(☞ 4ம் பக்கம்)

## பல நூற்றுக்கணக்கானோர் மத்தியில் மாமனிதர் எலியேசரின் இறுதி நிகழ்வுகள்

(18.03.01)

பேராசியர் மாமனிதர் எலியேசர் அவர்களின் பூதவுடல் கடந்த 13ம் திகதி செவ்வாய்க்கிழமை தகனம் செய்யப்பட்டது. மாலை 7 மணியில் இருந்து 9 மணிவரை மக்களின் பார்வைக்காக Heidelberg நகர மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த போது ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் திரண்டு வந்து கண்ணீர் மல்க தமது இறுதி அஞ்சலிகளை செலுத்தினர். இதன் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் அவுஸ்திரேலியப் பிரநிதி மற்றும் தமிழூர் நலனில் அக்கறையுடன்



செயல்படும் வணக்கத்துக்குரிய றிச்சட் வூட்டன் (Richard Wootan) போன்றோர் உரையாற்றினர். அவுஸ்திரேலியப் பிரநிதி அவர்கள் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள் அனுப்பி வைத்த செய்தியை வாசித்தது

(☞ 4ம் பக்கம்)

## 130 வருடங்களின் பின் பாரிஸ் இடதுசாரிகளிடம்

(19.03.01)

1871ம் ஆண்டின் பின், அதாவது 130 வருடங்களின் பின்னர் நேற்று நடைபெற்ற தேர்தலில் பிரான்சின் பாரிஸ் நகரை முதல் தடவையாக இடதுசாரிகள் வெற்றி பெற்றுள்ளனர். 1871ல் நடந்த பிராங்கோ புருசியன் யுத்தத்தின் பின்னர், வேர்சையிலை மையமாகக்கொண்டு இயங்கிய பூர்குவாஸ் துருப்புக்கள் பாரிஸ் மாநகர கட்டமைப்பை இல்லாது ஒழித்தன. இதன் பின்னர் 1977 வரை பாரிஸ் மேயரைத் தெரிவு செய்யும் உரிமையும் மக்களுக்கு இருக்கவில்லை. பிரெஞ்சு தேசிய அரசமைப்பு அவ் உரிமையை ஏற்றுக்கொள்ளவில்லை. 1977ல் பாரிஸ் மாநகர சபை ஏற்

(☞ 4ம் பக்கம்)

## ஜேர்மனியில் நீச்சல் பயிற்சியின்போது தமிழ் மாணவி மரணம்

(19.03.01)

ஜேர்மன் பிறேமன் நகரில் 13 வயது தமிழ் மாணவி ஒருவர் பயிற்சியின்போது நீருள் மூழ்கி மரணமாகியுள்ளார். பிறேமன் குக்டிவ் பகுதியில் வசிக்கும் தேவராஜா தம்பதிகளின் புதல்வி கஜனி என்பவரே இம் மாணவி யாவார். இரண்டாவது நாளாக கடந்த 16ம் திகதி வெள்ளியன்று நீச்சல் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போதே இம் மரணம் சம்பவித்துள்ளது.

பயிற்சியளிக்கும் ஆசிரியை மற்றும் ஏனைய ஜேர்மன் மாணவிகளும் இருந்த நீச்சல் தடாகத்திலேயே இம் மரணம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. மாணவி திடீரென மயங்கி நீச்சல் தடாகத்தில் விழுந்தத

(☞ 4ம் பக்கம்)



இசைமுரசு 2001

21ம் நூற்றாண்டின் முதலாவது இசைமுரசு

காலம்: 13.05.2001

தொடர்புகளுக்கு:

Tel: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

EELAMURASU S.A.R.L
22 Rue Perdonnet, 75010 Paris

E.Mail-eelamurasu@noos.fr
Web side: www.eelamurasu.com

ஈழமுரசு வருடாந்தம் நடாத்தும் இசைமுரசு சிறந்த பாடகர் தெரிவுப்போட்டி கடந்த வருடம் தவிர்க்க முடியாத சில காரணங்களால் நடைபெறவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris, France.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:** P. Sivaguru
**Impression:**
IMPRIMERIE MEAULLE
27 BERNAY, FRANCE.

நிர்வாகி: ப. வேலுப்பிள்ளை
நிறுவக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்
ஆசிரியர்: பி.சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France
E.Mail-eelamurasu@noos.fr
Web side: www.eelamurasu.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பிரான்ஸ்:
TeL: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
AMUTHASURABI
Rheinische Str-55, 44137 Dortmund.
அமுதசுரபி: 02311206692
அமரன்: 01734242356

டென்மார்க்: அ.ஜெயராகவன்
Sprotoflen - 53 - ST - TH
5800 Nyborg, Denmark.
Tel: 24422634 - Fax: 65302588

சுவிஸ்: தபாற்தொடர்பு
EELA MURASU
Postfach 238, 4313 Möhlin, Swiss.
Natel: 079 635 02 16

பிரித்தானியா:
தபாற்தொடர்பு:
EELAMURASU
5, Saxony Parade,
Hayes, UB3 2TQ.
Fax/Tel: 0208-56 16 877
ஜெயந்தன்: - Tel: 07956908145
கண்ணன் - Tel: 07884051522
பாஸ்கரன் - Tel: 07811040188

இத்தாலி: மக்கள்கடை
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD - Tel: 22425527

நெதர்லாந்து: த.லிங்கரட்ணம்
Tel: 076 5425804

அவுஸ்திரேலியா: 'EELAMURASU'
P.O Box S-109, Homebush South
N.S.W 2140, Australia.
Tel: (02) 9649 5795
Fax: (02) 9649 5164
Mobil: 0403095073
E-Mail:tccsydney@one.net.au

கனடா:
Shoppers World Postal Outlet
3003 Danforth Ave., P.O.Box 93618
Toronto, ON., M4C 5R4
Tel: (416) 686-3041
Fax: (416) 686-3041



குறிப்பு:
இவ் இதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.


(3ம் பக்கத் தொடர்ச்சி)

## நெதர்லாந்து...

அரசு மேற்கொண்ட உயிரழிப்பு, சொத்தழிப்பு, மனித உரிமை மீறல்கள் போன்ற நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட எவரும் சர்வதேச சட்டத்திற்கு முன்பு வழக்குத் தொடரவும், நியாயம் கேட்கவும் வாய்ப்பளித்திருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, சிறீலங்கா ஜனாதிபதியின் ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் இவ்வேளையில், அவர் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த வழக்கு அவரது போலி முகத்தை சர்வதேச மட்டத்தில் அம்பலப்படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

## ஜேர்மனியில்...

னால் அல்லது, ஏற்கனவே இரு-ந்த ஆஸ்மா நோயின் காரணமாக அல்லது ஆசிரியையின் கவனயீனம் காரணமாக இம் மரணம் சம்பவித்திருக்கலாம் என பில்ட், வெசர் கொரியர் ஆகிய பத்திரிகைகளில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. இருப்பினும் பாடசாலையினால் நடாத்தப்பட்ட நீச்சல் பயிற்சியின்போது இம் மாணவி மரணமடைந்ததற்கான சரியான காரணம் இது வரை தெரிவிக்கப்படவில்லை. பொலிசார் விசாரணைகளை செய்து வருகின்றனர். மேற்படி தமிழ் மாணவி நீருள் மூழ்கிய போது ஆபத்துக்கோரி கைகளை அசைத்ததை சக மாணவிகள் அவதானித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை, இம் மாணவியின் இறுதிக் கிரிகைகள் எதிர்வரும் 25ம் திகதி ஞாயிறன்று நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

## கொழும்பு வரும்...

மின்றி சாதாரண படையினரை நடத்துவது போன்றே நடத்துமாறும் இராணுவத் தளபதிகளுக்கு உத்தரவிட்டுள்ளது. இவ் உத்தரவினை சிறீலங்கா இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல அதிகாரிகளுக்குப் பணித்துள்ளதாகவும் அச் செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

# பயங்கரவாதத் தடைச்சட்டம் ஐரோப்பிய விதிகளுக்கு அமைவானது - ஜக் ஸ்ரோ

(19.03.01)

பிரித்தானிய பயங்கரவாதத் தடைச்சட்டம் 2000 ஐரோப்பிய சமூகத்தின் மனித உரிமை பார்வைக்கு அமைவாக இயற்றப்பட்டதென பிரித்தானிய உள்விவகார அமைச்சரும் இப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பிரகடனப்படுத்தியவருமான ஜக் ஸ்ரோ தெரிவித்திருக்கின்றார். மேற்படி பயங்கரவாதத் தடைச்சட்டம் குறித்து ஐரோப்பிய மனித உரிமைகள் அமைப்புக்கள் சில தொடர்ந்தும் கவலையினை வெளிப்படுத்திவரும் வேளையில் பிரித்தானிய அமைச்சர் இத் தடைச் சட்டத்தின் அமுலாக்கம் குறித்து தனது நியாயப்பாட்டினை தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றார். இத் தடைச்சட்டமூலம் இன்னும் சில நாட்களில் பிரித்தானியா மேல் சபையில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னரே இறுதி அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள இருக்கின்றது.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

## 130 வருடங்களின்...

படுத்தப்பட்டபோது தற்போது பிரான்சின் ஜனாதிபதியாக உள்ள ஜக் சிராக் பாரிஸ் மேயராக வெற்றிபெற்று 1995 வரை பதவி வகித்து வந்தார். அவரைத் தொடர்ந்து அவரது உதவியாளரான ஜோன் திவேரி மேயர் பதவியை வகித்தார்.

இந்நிலையில் நேற்று நடைபெற்ற இரண்டாம் கட்ட தேர்தலின் முடிவில் பாரிஸ் மாநகர சபை மேயராக 50 வயதான சோசலிசக் கட்சியின் பேர்த்ரோன் டெலோயோவே வெற்றி பெற்றுள்ளார்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

## தேசியத் தலைவர்...

கிய சட்டத்திற்கும் இடம் கொடு-க்க வேண்டும். நீதி செலுத்தும் போது எப்போதும் நீதியின் பக்கமே நின்று, பக்கம் சாராது கடமையைச் செய்யவேண்டும். சட்டங்கள் யாவும் முன்னர் ஒவ்வொரு நாடுகளும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்தவே உருவாக்கின. ஆனால் நாம் அப்படியில்லாது மக்களின் நலனுக்கு உகந்ததாக, காலத்திற்கு உகந்த வகையில் சட்டத்தை உருவாக்க வேண்டும். அதேபோன்று அச் சட்டத்திற்கு ஏற்றவாறு நீதியையும் செலுத்தவேண்டும் என்று கூறினார்.

இந் நிகழ்வில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

## பல நூற்றுக்கண...

டன், பேராசிரியர் தமிழீழ விடுதலைக்காக அவுஸ்திரேலியாவில் இருந்த வண்ணம் எப்படித் தனது பங்களிப்பினை வழங்கினார் என்பதையும் எடுத்துக் கூறினார்.

இறுதி அஞ்சலி நிகழ்வுகள் இரவு ஒன்பது மணியளவில் நிறைவுற்றது. தமிழீழ தேசியக் கொடி போர்க்கப்பட்ட மாமனிதரின் பூதவுடல் அவரது வீட்டில் இருந்து சுமார் 10 மணியளவில் எடுக்கப்பட்டு மாயானத்திற்கு சரியாக 11 மணிக்கு வந்து சேர்ந்தது. அவரால் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் விடுதலைப் புலிகளின் அவுஸ்திரேலியப் பிரதிநிதி போன்றோர் முதலில் அவரது உடலத்தை சுமந்து வந்தனர். மத வழிபாடுகள் ஆரம்பமாவதற்கு முன், தமிழீழத்தில் இருந்து தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் அனுப்பி வைத்த அனுதாபச் செய்தி வாசிக்கப்பட்டது. மாமனிதரின் உடலம் தீயில் சங்கமித்த வேளையில் அங்கு கூடியிருந்தோர் கண்களிலே கண்ணீர் பெருக்கெடுத்தோடியது. குடும்பத்தவர்களுடனும் பேராசிரியரின் அன்பு மனைவி ராணி எலியேசர் அவர்களுடனும் இறுதி வணக்கத்தை செலுத்த வந்த மக்கள் தமது துயரைப்பகிர்ந்து கொண்டனர்.


## வன்னி சர்வதேச தொலை தொடர்பு சேவையின் ஓர் மகிழ்வான செய்தி

இதுவரை காலமும் புதுக்குடியிருப்பிலும், ஸ்கந்தபுரத்திலும் தனது தொடர்புச் சேவையினை புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களுக்கு வழங்கிவந்த தொலைத் தொடர்பு சேவை, எதிர்வரும் பங்குனி 25ம் திகதி(25.03.01) முதல் 24 மணிநேர தனது சேவையினை மல்லாவியிலும் கிளை பரப்ப உள்ளதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றது.

**நீங்கள் மல்லாவி தொலைபேசியில் தொடர்புகொள்ள அழைக்கவேண்டிய இலக்கம்:**
தொலைபேசி **(TP): 00873762600290**
தொலை நகல்**(Fax): 00873762600291**

**புதுக்குடியிருப்பு தொலபேசியில் தொடர்புகொள்ள அழைக்கவேண்டிய இலக்கம்**
தொலைபேசி (TP): 00873762077512 / 00873762077524
தொலை நகல்(Fax): 00873762077514 / 00873762077526

**ஸ்கந்தபுர தொலைபேசியில் தொடர்புகொள்ள அழைக்கவேண்டிய இலக்கம்:**
தொலைபேசி (TP): 00873762077966
தொலை நகல்(Fax): 00873762077968

**'உங்கள் உறவுகளுக்கு பாலமிடும் உன்னத சேவை'**
*- ஆளுகை சர்வதேச தொலைத்தொடர்பு சேவை.*



## நித்தி வாகன சேவை

*உங்களின் வீட்டுத் தளபாடங்களை பெரிய 20M³ வாகனத்தில் பாதுகாப்பாக ஒரே தரத்தில் ஏற்றி இறக்கவும் மற்றும் லோர்த், ஐரோப்பிய நாடுகளுக்குமான வாகன தேவைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்.*



Pub Fr

**நித்தி:**
0148050214 / 0613342518
0607348051 / 0148385825



## வீடு விற்பனைக்கு

**Galle Road Mount Lavinia**
**Watapola Rode Land Side**
3 அறைகள், பெரிய சலூன், சமையல் அறை, மலசலகூடம், குளிக்கும் அறை, வாகனம் நிறுத்தும் வசதியுடன்
தொடர்புகளுக்கு: Mr. Salah
0033 06 11 09 18 43 / 0033 01 46 82 95 71



# ERRANCES TRAVELS

**Tel: 01 42 09 70 00**
Fax: 01 42 09 53 39
55, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,400 Frs. |
| Colombo | - | 3,900 Frs. |
| Singapour | - | 3,950 Frs. |
| Madras | - | 4,800 Frs. |
| Londres | - | 790 Frs. |
| New york | - | 2,300 Frs. |
| Montreal | - | 2,800 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,800 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது
Li: 075 95 01 37
(ADV)

# புலிகள் பலமாக இருந்தே போர் நிறுத்தத்தை கடைப்பிடிக்கின்றனர் நல்லெண்ணத்தை பலவீனமாகக் கருதவேண்டாம்

**- ஜோசப் பரராஜசிங்கம் -**

(17.03.01)

விடுதலைப் புலிகள் பலமான நிலையில் இருந்தும் கூட, வட கிழக்கு தமிழ் மக்களின் துன்பங்கள் துயரங்கள் மேலும் தொடரக் கூடாது என்ற நல்லெண்ணத்திலேயே போர் நிறுத்தத்தை தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றனர். அவர்களது நல்லெண்ணத்தை, அவர்களது பலவீனம் என்று யாரும் கருதிவிட வேண்டாம் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பரராஜசிங்கம் கூறியுள்ளார்.

கடந்த திங்களன்று சிறிலங்காவின் வரவு செலவுத் திட்டம் தொடர்பாக பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தின் போதே இவ்வாறு கூறியுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில், விடுதலைப் புலிகள் ஒருதலைப் பட்ச போர் நிறுத்தத்தை அறிவித்துதுடன் கடந்த மூன்று மாத காலமாக பல இழப்புகளுக்கு மத்தியிலும் போர் நிறுத்தத்தை கடைப்பிடித்து வருகின்றனர். அவர்கள் உண்மையான சமாதானத்தை விரும்புகின்றனர். அவர்களது நம்பகத் தன்மையை எவரும் சந்தேகிக்கத் தேவையில்லை. எனவே தற்பொழுது பந்து அரசின் பக்கத்திலுள்ளது. அரசு விடுதலைப் புலிகளின் போர் நிறுத்த அறிவித்தலை ஏற்றுக்கொண்டு தாமும் போர்நிறுத்தத்தை அறிவிக்கவேண்டும். நோர்வே நாட்டின் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு காப்பாற்றப்படல் வேண்டும். அரசபடைகளின் இராணுவ ஆக்கிரமிப்பு தொடரும் நிலையில் விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை மேலும் நீடிக்க வேண்டும் என்று எதிர் பார்ப்பது நேர்மையற்றதும் ஏற்றுக் கொள்ளமுடியாததுமாகும் எனவும் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

# 22ம் திகதி தண்ணீர் குடிக்க வேண்டாம்

**- சரத் கருணாரட்ண -**

(17.03.01)

ஆனையிறவுத் தளம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியடைந்த ஏப்ரல் மாதம் 22ம் திகதி சிறிலங்காவின் பிரஜைகளை தண்ணீர் குடிக்க வேண்டாம் என சிறிலங்காவின் இராணுவப் பேச்சாளர் சரத் கருணாரட்ண கேட்டுக்கொண்டுள்ளார். ஆனையிறவுத் தளம் வீழ்ச்சியடைந்த பிற்பகல் ஒரு மணி முதல் மூன்று மணிவரை தண்ணீர் யாரும் அருந்தாது ஆனையிறவில் இறந்த படையினருக்கு தமது மரியாதையை செலுத்த வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆனையிறவுத் தளம் மீது கடந்த வருடம் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஓயாத அலைகள்-3 நடவடிக்கையின் போது, இராணுவத்தின் உயர் தளபதி பேர்ஸி பெர்னாண்டோ உட்பட ஏராளமான படையினர் நீரின்றி உயிரிழந்தது குறிப்பிடத்தக்கது.


SRI RAGHAVENDRA JYOTHISHAALAYA

Astro Palmist Sasthiry

Vanee Building
317, High Street North,
Manor Park, London E12 6SL

Tel: 020 8552 0930
Mobile: 07949706626

தங்கள் கைரேகை அல்லது குடும்பப்பெயர், நட்சத்திரத்திலிருந்து, படிப்பு, உத்தியோகம், வியாபாரம், கல்யாணம், கணவன்-மனைவி சண்டை, விசா பிரச்சினை, யோகமந்திரம், பாலகிரகணம், வேறுதுன்பங்கள் இருந்தால் தீர்க்கப்படும். லக்சுமி பூசை செய்யப்படும்.



இவரை ஒரு முறை வந்து பாருங்கள்!!!

Pub.Lon.


# பொது மன்னிப்பு முடிவடைந்தது மீண்டும் வேட்டை!

(17.03.01)

சிறிலங்காப் படைகளில் இருந்து தப்பியோடிய படையினருக்கு வழங்கப்பட்ட காலம் முடிவடைந்தும் தப்பியோடிய படையினர் இன்னும் சரணடையாது தொடர்ந்து தலைமறைவாகி இருப்பதையடுத்து, தப்பியோடியவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. படையிலிருந்து தலைமறைவாகியுள்ள படையினரை மீண்டும் படையில் இணைவதற்கு வழங்கப்பட்டுள்ள ஒருவாரகால பொதுமன்னிப்புக் காலம் 14ம் திகதியுடன் முடிவடைந்தும் மேலும் இரு நாட்கள் பொது மன்னிப்பு நீடிக்கப்பட்டது. எனினும் எதிர்பார்த்ததுபோல் படையினர் வந்து சரணடையவில்லை. இதனையடுத்தே மீண்டும் தப்பியோடிய படையினரைக் கண்டு பிடிக்கும் வேட்டையில் சிறீலங்கா இராணுவமும், பொலிசும் இறங்கியுள்ளது.

சிறிலங்காப் படையில் இருந்து சிப்பாய்கள் ஆயுதங்களுடன் தப்பியோடுவதும், சிறிலங்கா அரசும் இராணுவமும் பொது மன்னிப்புக்களை வழங்குவதும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. கடந்த மூன்று மாதங்களுக்குள் மாத்திரம் இரு தடவைகள் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. கடந்த வருடத்தில் ஐந்துக்கும் மேற்பட்ட தடவைகள் பொது மன்னிப்பு வழங்கப்பட்டிருந்தன குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மாத்தறை சிறீலங்கா படைமுகாமில் இருந்த சிப்பாய் ஒருவர் தனது ஆயுதங்களுடன் கடந்த 14ம் திகதி தப்பிச் சென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அதிகாரிகளும் மாத்தறை சிறீலங்கா பொலிசாரும் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# போரினால் 10 வீதமானோர் முழுமையான உளப்பாதிப்பில்!

(17.03.01)

சிறிலங்கா அரசு மேற்கொண்டு வரும் தாக்குதல்களால் உயிரிழப்புகள், உடமை இழப்புகள், இடப்பெயர்வுகளை சந்தித்துள்ள மக்களுக்கு உடல் நோய்ப்பாதிப்புடன் உளத்தாக்கமும் ஏற்பட்டுள்ளதாக கிளிநொச்சி மருத்துவமனை ஆய்வுகள் தெரிவித்துள்ளன. அங்கு சிகிச்சை பெறும் நோயாளர்களில் 10 வீதமானவர்கள் போரினால் முழுமையான உளபாதிப்புக்கு உட்பட்டுள்ளார்கள் என வைத்திய அதிகாரி சவிக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். அக்கராயன் அன்னையில்லம் உளவளத்துணை நிலைய 5ஆம் ஆண்டு நிறைவு விழாவில் தலைமை ஏற்று உரை நிகழ்த்திய போதூ இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தனது உரையில், எமது தமிழ்ச் சமுதாயம் மிகுந்த நெருக்கடிகளுக்கு மத்தியில் ஒரு போராட்டத்தின் மத்தியில் நகர்ந்து கொண்டிருக்கின்றது. இந்த பிரதேசத்தில் எங்களுடைய மக்கள் என்றுமே காணாத அளவு மாபெரும் இடப்பெயர்வுகளையும் அதனைத் தொடர்ந்து பல்வேறு நெருக்கடிகளையும் அனுபவிக்கின்றார்கள். இதனால் உள நெருக்கீடுகள் இந்த மக்களிடம் அதிகரித்து காணப்படுகின்றது. கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு வருகின்ற நோயாளர்களில் புள்ளி விபர சேகரிப்பு ஒன்றை நடத்திப் பார்த்த போது, விடுதிகளில் அனுமதிக்கப்படுகின்றவர்களில் சரியாக 10 வீதமானவர்கள் உளவியல் நெருக்கீடுகளால் பாதிக்கப்பட்டவர்களாவர். இதன் பின்னணியிலேயே அவர்கள் நோய்கள் அதிகரித்தவர்களாகி உள்ளனர். வெளிநோயார் சிகிச்சை பிரிவில் இனம் காணப்படாத உள நெருக்கீடு உள்ளவர்கள் அதிகம் இருக்கும் வாய்ப்பும் உள்ளது என வைத்தியகலாநிதி மேலும் தமது உரையில் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்கத் தூதரின் கூற்றை கண்டித்து யாழில் பொங்கு தமிழ்

(17.03.01)

யாழ்.பல்கலைக் கழகத்தில் மீண்டும் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வுகளை நடத்த யாழ்.பல்கலைக்கழக சமூகம் தயாராகி வருகிறது. கடந்த இரு வாரங்களின் முன்னர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்கத் தூதர் அஸ்லி வில்ஸ் தமிழ் மக்களின் தாயகக் கோட்பாடு, சுயநிர்ணய உரிமை தொடர்பாக வெளியிட்ட கருத்துக்களை கண்டித்தும், அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வை விரைவில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகளும், ஏனைய பிரிவுகளின் பிரதிநிதிகளும் கூடி ஆராய்ந்த பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களின் அபிலாசை சுயநிர்ணய உரிமையே என்பதை இந்த எழுச்சி நிகழ்வில் வலியுறுத்துவதெனவும், அரசாங்கம் யுத்தத்தை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் உடனடியாகப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமென வலியுறுத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. சிறிலங்கா இராணுவ மற்றும் அதன் கைக்கூலிகளினதும் பலத்த எச்சரிகைகளுக்கு மத்தியில் கடந்த ஜனவரியில் பல்கலைக்கழக சமூகம் தொடர்ச்சியாக ஒருமாத காலம் பொங்கு தமிழ் நிகழ்ச்சிகளை நடத்தியது தெரிந்ததே.

# பிந்துனுவெவவில் கொல்லப்பட்ட 10 பேரின் உடல்கள் தொடர்ந்தும் சவச்சாலையில்

(17.03.01)

பிந்துனுவெவ புனர்வாழ்வு தடுப்பு முகாமில் வைத்து கடந்த ஒக்டோபர் 25ம் திகதி சிங்கள இனவெறியாளர்களால் படுகொலை செய்யப்பட்ட 27 தமிழ்க் கைதிகளில் 10 பேரின் சடலங்கள் இன்னமும் அடையாளம் காணப்படாத நிலையில் கொழும்பு வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறிலங்காவின் பிரதி பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தை இதனைத் தெரிவித்துள்ளார். படுகொலை செய்யப்பட்டவர்களில் 17 பேரின் சடலங்கள் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டு அவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இச்சம்பவத்தில் பலர் படுகாயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


ஆறே மாதங்களில் கணினியை சரளமாக கையாள

**Senith Computer Institute**

★ சுவிற்சர்லாந்தில் கணினி கல்விநிலையமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.
★ கணினி அறிமுக வகுப்புக்கள் கட்டணமின்றி அமர்வுகளுடன் ஆரம்பமாகி 8 மாதகாலம் தொடர்ந்து நடைபெறும்.
★ மத்தியதர, உயர்தர (9-16 வயது) வகுப்புக்கள்

தொடர்புகளுக்கு:
Senith Computer Institute
Militar str-84, 8004 Zurich.
Tel: 01/242 73 60 Fax: 01/242 73 58
e-mail:senith@bluewin.ch

# தலிபானுக்கு எதிராக பிக்குகள் ஆர்ப்பாட்டம்

(17.03.01)

ஆப்கானிஸ்தானில் புத்தர் சிலைகளைத் தகர்த்துவரும் தலிபான்களின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் கடந்த செவ்வாயன்று பௌத்த பிக்குகளின் தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பௌத்த பிக்குகள் மற்றும் பொது மக்கள் என சுமார் 5000 பேர் வரை கலந்துகொண்டதாக செய்திகள் தெரிவித்தன. பௌத்த மகா சம்மேளனம் ஒழுங்கு செய்திருந்த இவ் ஆர்ப்பாட்டத்தில், கலந்துகொண்டோர் தலிபான்களுக்கு எதிரான சுலோகங்கள் அடங்கிய பதாகைகளை தாங்கியவாறு கோசங்களை எழுப்பியவாறு காணப்பட்டனர்.

# தோட்டத் தொழிலாளரின் போராட்டம் கைவிடப்பட்டது

## 9 ரூபா மட்டுமே அதிகரிப்பு

மலையகத் தோட்டத் தொழிலாளர்களால் கடந்த 23 நாட்களாக மேற்கொள்ளப்பட்டுவந்த சம்பள அதிகரிப்புப் போராட்டம் கடந்தவாரம் கைவிடப்பட்டுள்ளது. புதிய ஒப்பந்தப்படி தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்தச் சம்பளம் 9 ரூபாவினால் மாத்திரேமே அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்களின் அடிப்படைச் சம்பளமான 101 ரூபாவில் எவ்வித மாற்றமும் செய்யப்படாமல் தேயிலை விலையுயர்வுக்கேற்ப சம்பள அதிகரிப்பாகவே இது வழங்கப்படும் எனத் தெரியவருகிறது. புதிய நிலையின்படி ஒரு தோட்டத் தொழிலாளி 116 ரூபாய் மட்டுமே நாளாந்தச் சம்பளமாகப் பெற்றுக்கொள்ளவுள்ளார். சிறீலங்காவின் தொழிலமைச்சில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது இத் தீர்மானம் எடுக்கப்பட்டதையடுத்து, சத்தியாக்கிரகப் போராட்டத்தை கைவிடுவதென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உட்பட்ட அனைத்துத் தொழில் சங்கங்களும் அறிவித்தன.

# பயங்கரவாத அமைப்புக்கள் தடை விவகாரம் பிரித்தானிய மேல்சபையில் அடுத்தவாரம்

விடுதலைப் புலிகள் உட்பட 21 அமைப்புக்களை பயங்கரவாத அமைப்புக்கள் எனத் தடைசெய்வதற்கு அங்கீகாரம் கோரி, பிரித்தானியப் பாராளுமன்றத்தில் அந்நாட்டு உள்விவகார அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை, பாராளுமன்றத்தின் கீழ்ச்சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரேரணை வாக்கெடுப்பிற்கு விடப்பட்ட போது 396 உறுப்பினர்கள் மேற்படி அமைப்புக்கள் தடைசெய்யப்படுவதை ஆதரித்தும் 17 உறுப்பினர்களை எதிர்த்தும் வாக்களித்துள்ளனர். தற்பொழுது பாராளுமன்றத்தின் மேல்சபையின் அங்கீகாரத்திற்காக இது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாரம் மேல்சபையில் இதற்கான அங்கீகாரம் கோரப்படும் எனவும் தெரியவருகிறது.

# பிரித்தானியத் தூதுவரைச் சந்திக்கும் தமிழ் கட்சிகள்

சிறீலங்காவிற்கான பிரித்தானியத் தூதுவர் லிண்டா டுபில்டை கொழும்பு தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் இவ்வாரம் சந்தித்து பேச்சுக்களை நடாத்தவுள்ளதாக் தெரியவருகிறது. 10 தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளே இச் சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளனர். விடுதலைப் புலிகளை பிரித்தானியா தடை செய்தமை குறித்த அபிப்பிராயங்களை விபரிப்பதற்காக பிரித்தானியத் தூதரகம் இக்கட்சிகளுக்கு விடுத்த அழைப்பினைத் தொடர்ந்தே இச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இச் சந்திப்பின் போது விடுதலைப் புலிகளின் மீதான தடையினை பிரித்தானிய அரசு நீக்கவேண்டுமென தாம் வலியுறுத்திக் கூறப்போவதாக மேற்படி தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் தெரிவித்திருக்கின்றனர்.

# பொலிஸ் - பாதாள உலக ·கோஷ்டி மோதல் மூவர் பலி

சிறீலங்காவின் அத்துருகிரியப் பகுதியில் பாதாள உலகக் கோஷ்டியினருக்கும் சிறீலங்காப் பொலிசாருக்குமிடையே ஏற்பட்ட மோதல் சம்பவம் ஒன்றினை அடுத்து பாதாள உலகக் கோஷ்டியின் மூன்று உறுப்பினர்கள் பொலிசாரினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். அத்துருகிரியப் பகுதியில் உள்ள காட்டுப் பகுதியிலேயே இரவுவேளையில் இம் மோதல் இடம்பெற்றுள்ளது. பாதாள உலகக் கோஷ்டியினரை பொலிசார் கைதுசெய்யச்சென்ற வேளையே இரு தரப்பிற்குமிடையே துப்பாக்கி மோதல் வெடித்துள்ளது. பலியான மூவரும் பல வருடங்கள் சிறையில் இருந்தவர்கள் எனவும் அவர்கள் பல கொலை கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்தவர்கள் எனவும் சிறீலங்காப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# செம்மணி வழக்கு மே 15 இற்கு ஒத்திவைப்பு

செம்மணி புதைகுழிகளிலிருந்து தோண்டி எடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மரபணுப் பரிசோதனைகள் இன்னமும் பூர்த்தியடையவில்லை என சிறீலங்காவின் இரகசியப் பொலிசார் கடந்த 13ம் திகதி கொழும்பு பிரதம நீதிமன்றத்தில் தெரிவித்ததையடுத்து இவ்வழக்கு விசாரணைகளை மே மாதம் 15ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது. நீதி மன்றம் கூடியபோது செம்மணிப் புதைகுழிகள் தொடர்பாக கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் ஐவர் மாத்திரம் இரகசியப் பொலிசாரினால் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். ஏற்கனவே யாழ். நீதிமன்றத்தால் பல சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தபோதும் சிறீலங்காவின் மேல்நீதிமன்றம் அச்சந்தேக நபர்களுக்கு பிணை விடுதலையை அளித்ததும், அவர்களில் சிலர் தலைமறைவானதும் தெரிந்ததே.

# வவுனியாவில் அதிகரிக்கும் ஆட்கடத்தல் சம்பவங்கள்

வவுனியாவில் ஆட்களைக் கடத்தும் சம்பவங்கள் மிகத் தீவிரமடைந்துவருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த சில தினங்களுக்கு முன்னர் வெள்ளை வானில் வந்தவர்களால் 8 இளைஞர்கள் கடத்திச் செல்லப்பட்டதை அடுத்து, ஆட்கடத்தல் சம்பவங்கள் தீவிரமடைந்துள்ளன. கடந்த 5ம் திகதி வெள்ளை வான் ஒன்றில் வந்த சீருடை அணிந்தவர்களால் சில இளைஞர்கள் பிடிக்கப்பட்டு அவர்களது கண்கள் கறுப்புத் துணிகளால் கட்டப்பட்டு வாகனத்தில் ஏற்றிச் செல்லப்பட்டனர். இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டவர்களின் நிலைமை என்னவென இதுவரை செய்திகள் ஏதும் வரவில்லை. இவ் ஆட்கடத்தல் சம்ப்வங்களால் வவுனியாப் பகுதி தமிழ் மக்களிடையே பெரும் அச்சம் எழுந்துள்ளது.

# அம்புலன்ஸ்சில் சென்ற தமிழ் முஸ்லிம் பெண் நோயாளிகள் மீது பாலியல் பலாத்காரம்

கண்டியிலிருந்து அம்பாறை தளவைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வண்டிமூலம் எடுத்துச் செல்லப்பட்ட மூன்று முஸ்லீம் பெண் நோயாளிகளையும் இரண்டு தமிழ் பெண் நோயாளிகளையும் அவ் அம்புலன்ஸ் வண்டியைச் செலுத்திய சாரதியே பாலியல் பலாத்காரம் செய்வதற்கு முயற்சி செய்துள்ளார். கண்டியிலிருந்து அம்பாறைக்குச் செல்லும் வழியில் அம்புலன்சின் ரயரில் காற்றுப்போயுள்ளதாகக் கூறிய சாரதி அவ் வண்டியினை நிறுத்தியதன் பின்னர் மேற்படி நோயாளிகள் மீது தனது பாலியல் வல்லுறவு முயற்சியை மேற்கொண்டுள்ளார். மேற்படி சாரதி அளவுக்கதிகமான குடிபோதையில் இருந்ததாகவும் தெரியவருகின்றது.

# தடை வந்தாலும் புலிகளின் போராட்டம் ஓயாது

## – செல்லச்சாமி

விடுதலைப் புலிகளை பிரித்தானியா மட்டுமல்ல, வேறு எந்த நாடுகள் தடைசெய்தாலும் நீங்கள் நினைப்பதுபோன்று போராட்டம் ஓயாது. புலிகள் சந்திர மண்டலத்திற்கும் போவார்கள். உலகில் நவீனம் வளர்ந்துவிட்ட இக் காலத்தில் பிற்போக்கான சிந்தனைகளுக்கு சிங்களமக்கள் இடமளிக்கக்கூடாது. இவ்வாறு ஐ.தே.க.வின் தேசியப்பட்டியல் உறுப்பினர் எம்.எஸ். செல்லச்சாமி சிறீலங்காப் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். வரவு செலவுத் திட்ட விவாத உரையில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்குக் கிழக்கில் அன்று 1000 போராளிகள் இருந்தார்கள். ஆனால் இன்றோ விடுதலைப் புலிகள் மிகப்பெரும் சக்தியாக ஒரு மரபு வழிப்போர் அணியாக வளர்ந்திருக்கின்றார்கள். பேச்சுவார்த்தையை ஆரம்பியுங்கள் என சர்வதேச சமூகம் கூறியும் அரசு பொருட்படுத்தவில்லை. விடுதலைப் புலிகள் 3 முறை தமது ஒருதலைப் பட்சமான யுத்தநிறுத்தத்தை மேற்கொண்டும் அரசு அதற்கு உகந்த பதிலை வழங்கவில்லை. ஆனால் இன்னும் பலரை படையில் இணைத்தால் யுத்தத்தை வெற்றியாக முடித்துவிடலாம் என அரசு கனவு காணுகிறது. ஆயிரம் ஆயிரம் கோடி நன்கொடை கடன்களைப் பெற்று யுத்தத்தை நடாத்தினாலும் அரசு இதில் வெற்றிகாணப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# வீடு பார்க்கச் சென்றவர் காலிழந்தார்

சாவகச்சேரி கல்லடி மூட்டுச் சந்திக்கு அருகில் இருக்கும் தனது வீட்டைப் பார்வையிடச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் இராணுவத்தினர் புதைத்து வைத்திருந்த மிதிவெடியில் சிக்கி தனது கால் ஒன்றினை இழந்துள்ளார். சபாரத்தினம் ஜெயரத்தினம் என்பவருக்கே இந்த அவலம் நிகழ்ந்துள்ளது. தற்பொழுது யாழ். வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றார். இச் சம்பவத்தை அடுத்து சாவகச்சேரிப் பகுதியில் உள்ள தமது வதிவிடங்களை பார்வையிடச் செல்வதற்கு பொது மக்கள் தயங்குகின்றார்கள்.


# தொலைபேசி அட்டை விற்பனையாளர்களுக்கு



Windows NT யில் வேலைசெய்யக்கூடிய Nokia Server விற்பனைக்கு உண்டு!

★ இலகுவாக நீங்களே இயக்கலாம்.
★ தொலைபேசி அட்டைகளை நீங்களே உங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கலாம்.

- மாதம் நீங்கள் 3000 முதல் 5000 வரையிலான தொலைபேசி அட்டைகளை விற்பனைசெய்பவரா?
- பல்வேறு தொலைபேசி அட்டைகளையும் 25% முதல் 30% வரையிலான கழிவில் வாங்கிவிற்பவரா?
- சொந்தமாக உங்கள் பெயரில்; நீங்கள் விரும்பும் படத்துடன் தொலைபேசி அட்டைகளை வெளியிட விரும்புகிறீர்களா?
- நேரடியாக கனேடிய Operator உடன் தொடர்புசெய்து தரப்படும்.
- ஐரோப்பிய நாடெங்கும் இதனை பாவிக்கலாம்.

மேலதிக தொடர்புகளுக்கு: (0033) 0661471017

Pub.Fr.

# பிந்துனுவெவ படுகொலைகள் சந்தேக நபர்கள் 43 பேர் விடுதலை!

கடந்த ஒக்டோபர் மாதம் 25ம் திகதி சிறீலங்காவின் பிந்துனுவெவ தடைமுகாமில் நடைபெற்ற படுகொலைச் சம்பவத்தினை அடுத்து கைதுசெய்யப்பட்ட 43 சந்தேக நபர்களும் பிணை விடுதலையினைப் பெற்றுள்ளனர். சிறீலங்காவின் இரகசியப் பொலிசாரினால் இவர்கள் கைதுசெய்யப்பட்டபோதிலும் தற்பொழுது இவர்களுக்கு பிணை விடுதலை வழங்கப்பட்டிருப்பதானது மனித உரிமை ஆர்வலர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. பிணைவிடுதலை பெற்றவர்களுள் 15 சிறீலங்கா சிப்பாய்களும் அடங்குகின்றனர். பண்டாரவளை நீதிமன்றமே இவர்களுக்கான பிணை உத்தரவினை வழங்கியுள்ளது. மேற்படி சந்தேக நபர்கள் அனைவரும் கூட்டாக பதுளை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தமக்கு பிணைவிடுதலை வழங்கப்படவேண்டும் என மனுச்செய்ததையடுத்தே அதற்கான அனுமதியினை வழங்குமாறு பதுளை மேல்நீதிமன்றம், பண்டாரவளை நீதிமன்றத்தை பணித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

# தீவுப் பகுதிக்குள் நுழைய கடற்படை புதிய கட்டுப்பாடு

யாழ்குடாவின் தீவுப் பகுதிக்குள் கடற்படையின் அனுமதிப் பத்திரம் இல்லாமல் நுழைவது மிகக் கடுமையான தண்டனைக்குரிய குற்றம் என சிறீலங்காவின் கடற்படை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இவ் எச்சரிக்கை குறித்து விளம்பரம் ஒன்றும் சிறீலங்கா கடற்படையின் தீவுப் பகுதிக் கட்டளை அதிகாரியினால் பிரசுரிக்கப்பட்டுள்ளது. புதிய நடைமுறையின்படி கடற்படையினரால் வழங்கப்படும் அடையாள அட்டை அல்லது தற்காலிக அனுமதிப் பத்திரம் உள்ளவர்கள் மாத்திரமே தீவகத்திற்குள் நுழைய முடியும். ஏனையவர்கள் அல்லைப் பிட்டியில் உள்ள சிறீலங்கா கடற்படையின் சோதனைச் சாவடியில் அனுமதிப் பத்திரம் ஒன்றினை பெற்றபின்னரே தீவுப் பகுதிக்குள் பிரவேசிக்க முடியும். அல்லைப்பிட்டிச் சோதனைச் சாவடியில் அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு கடற்படையின் பெரும் கெடுபிடிகளை விதித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

# சிங்கள விவசாயிகள் விடுதலை

தமிழர் தாயகத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதால் 1999ம் ஆண்டு டிசம்பர் மாதம் விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்ட 4 சிங்கள விவசாயிகளும் கடந்த 15ம் திகதியன்று வன்னியில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். சர்வதேச செஞ்சிலுவைக்குழு ஊடாக விடுதலை செய்யப்பட்ட மேற்படி நால்வரும் செஞ்சிலுவைச் சங்கத்தினால் அவர்களது குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். கடந்த ஜனவரி மாதம் மடுவிற்கு விஜயம் செய்த சிறீலங்காவின் சர்வமதக் குழுவினர் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களை சந்தித்துப் பேச்சுக்களை நடாத்தியபோது அவர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமையவே இவ் விவசாயிகளும் விடுவிக்கப்பட்டுள்ளனர். கடந்த 2ம் திகதியும் இரு சிங்கள மீனவர்கள் விடுதலைப் புலிகளால் விடுதலை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# வடக்குக் கிழக்கிற்கு உலக வங்கி ஒதுக்கிய 3000 மில்லியன் ரூபா மீளப் பெறப்படுகிறது!

உலக வங்கியின் நிதியுதவியுடன் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் நீர்ப்பாசன விவசாயத் திட்டங்களின் செயற்பாட்டில் சிறீலங்கா அரசு போட்டுவரும் பல முட்டுக்கட்டைகளை அடுத்து அந்த செயற்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதி மீளப்பெறும் அபாய நிலையை எட்டியுள்ளது. உலக வங்கியின் இச்செயற் திட்டத்தின் அதிகாரியாக சிங்களவர் ஒருவரே இருப்பதால் இந்த நிதியினை மீள எடுப்பதற்கே அவரும் சில நடவடிக்கைகளை எடுத்துவருவதாகவும் தெரியவருகிறது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் இத்திட்டத்தின் செயற்பாடு குறித்து நேரடியாக ஆராய்வதற்காக உலக வங்கிக் குழு மட்டக்களப்பு மாவட்டத்தில் விஜயம் செய்தது. இதுவரை செய்யப்பட்ட வேலைத்திட்டங்கள் பற்றி அக்குழு நேரடியாகப் பார்த்தபோது அதற்கு திருப்தி ஏதும் ஏற்படவில்லை எனவும், தமது அதிருப்தியை உள்ளூர் செய்தியாளர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலின்போது அக்குழு வெளியிட்டதாகவும் தெரியவருகிறது.

# யாழ்.நகர் கரையிலிருந்து கடுமையான எறிகணைவீச்சு

யாழ். நகரின் கரையோரப் பகுதிகளான பாசையூர் மற்றும் அரியாலைப் பகுதிகளிலிருந்து இராணுவத்தினர் கடற்பகுதியை நோக்கி இரவு பகலாக கடுமையான எறிகணை வீச்சுக்களையும் துப்பாக்கித் தாக்குதல்களையும் மேற்கொண்டு வருகின்றனர். இரவுவேளைகளில் பராவெளிச்சக் குண்டுகளின் உதவியுடன் இத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. தொடர்ச்சியாக இராணுவத்தினர் கடற்பகுதியை நோக்கி தாக்குதலை நடாத்துவதால் மீனவர்கள் அச்சம் காரணமாக கடலுக்குள் செல்வதில்லை.

# தெகிவளையில் தொடரும் கைதுகள்

கொழும்புப் புறநகரப் பகுதியான தெகிவளையில் வீடொன்றில் இருந்து தற்கொலைத் தாக்குதல் அங்கி மற்றும் வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டதாக சிறீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்ததையடுத்து தெகிவளைப் பகுதியில் சிறீலங்காப் பொலிசார் தொடர்ச்சியான தமிழர் கைதுகளை மேற்கொண்டு வருகின்றனர். முஸ்லீம்கள் உட்பட பல தமிழர்கள் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 12ம் திகதி வீடொன்றினை தாம் சுற்றிவளைத்ததாகவும் அங்கிருந்தே தற்கொலை அங்கி மற்றும் வெடிபொருட்களை மீட்டதுடன், வீட்டிலிருந்த நான்கு தமிழர்களை தாம் கைதுசெய்ததாகவும் சிறீலங்காப் பொலிசார் அறிவித்துள்ளனர்.


## Naturina® நிறுவனத்திலிருந்து உங்கள் ஆரோக்கியக் காப்பிற்கான ஜேர்மன் தயாரிப்புக்கள்




**அப்பிள் வினிகர் (Apple Vineger):** அளவுக்கதிகமான உடல் எடை எப்போதும் கவலை தருவது. இப்போது வந்துவிட்டது அப்பிள் வினிகர். இது உடலின் மிதமிஞ்சிய கொழுப்பினை அகற்றி, உடல் எடையைக் குறைக்கும் சக்திவாய்ந்தது.




**மெஹா விற்றாலின் (Maca Vitalin):** இயற்கை கனிமங்களால் விளைந்த ஒரு அற்புத நிவாரணம். உடலில் சக்தியையும், வலிமையையும் அதிகரித்து புத்துணர்ச்சியை வழங்கும் இந்த நிவாரணி ஒரு வீரியத்திற்குரிய அற்புத வடிகாலுமாகும். எந்த வயதினருக்கும் ஆண் பெண் இருபாலாருக்கும் இது ஏற்றது.



**வெயின் கிறீம் (Vein Cream):** இது உடலில் ஏற்படும் வலிகளை அகற்றும் ஒரு சக்திவாய்ந்த நிவாரணம். உடலுழைப்பினாலோ அல்லது ஊட்டச் சத்துக் குறைவினாலோ தோன்றும் உடல் வலியினை அகற்றும் சக்திவாய்ந்த இக் களிம்பில் விற்றமின் E யும் அடங்கியுள்ளது.



**யோயின்ற்+மசில் பல்சாம் (Joint+ Muscle Balsam):** உடலில் தோன்றும் வலிகள் உங்கள் நிம்மதியைக் குலைத்துவிடும் அல்லவா? சில மருந்துகள் கூட இந்த வலிகளுக்கு குறுகிய நிவாரணத்தையே அளிக்கின்றன. ஆனால் இந்த நிவாரணி அப்படியல்ல. முதுகு, தோள், கழுத்து ஆகிய பகுதிகளில் தோன்றும் வலிகளிலிருந்து முற்றாக உங்களை விடுவிக்கின்றது.




**புறஸ்ரேற் பம்கின் கப்சூல் (Prostate Pumpkin Capsules):** ஆண் பெண் இருபாலாருக்குமே 40 வயதிலிருந்து சிறுநீர்ப்பைச் சுவர்களின் இயக்கத்தில் தளர்வு ஏற்படும். இத் தளர்வு சிறுநீர் கழிப்பதில் சில சிரமங்களையும் தோற்றுவிக்கும். இப்போது இயற்கை அன்னை இந்த சிக்கலுக்குத் தீர்வு தருகிறார். இந்தக் கூட்டுக் குளிகைகளை சில மாதங்களுக்கு உட்கொண்டு இந்தச் சிக்கலுக்கு தீர்வுகாணுங்கள்.




**நத்துரினா (Naturina):** தலைமுடியின் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வுதரும் ஒரு நிவாரணி. முடியுதிர்தல், கணைவெடித்தல், வறட்சி ஆகியவற்றிலிருந்து காப்பதுடன் இளநரையையும் தடுக்கின்றது.



**பிளீச்சிங் எமல்சன் (Bleaching emulsion):** தோலில் ஏற்படும் வியாதிகளும், சூரிய ஒளித்தாக்கமும், பிரசவத்தின் பின்னான தோல் மாற்றங்களும் தோலின் நிறத்தை மாற்றிவிடுகின்றன. இந்நிலைக்கு இனிக் கவலை வேண்டாம். தீர்வு தருகின்றது இந்த நிவாரணம். தோலின் மிருதுத் தன்மையை மீளளிப்பதோடு நிறத்தினையும் மீட்டுத்தரும். இந்த நிவாரணியை சில மாதங்களுக்கு உபயோகித்துப் பலன் பெறுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:
**Intercare Handels GmbH**
Nassauer str 33-37, 59065 Hamm-Germany
Tel: 0049 2381 915910 / Fax: 0049 2381 91591-21
Internet: www.naturina.de

# புதிய வரவு புதிய வரவு

# GALAXY

## Galaxy Discount Calling Card

**Usa, Canada, Uk, Germany போன்ற நாடுகளில் இரண்டு வருடத்திற்கு மேலாக பல லட்சக்கணக்கான வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்ற**

**இன்று முதல் பிரான்சினுள் சகல தமிழர்களினதும் ஏனையோரதும் தேவைகளை பூர்த்தி செய்ய எல்லாத் தமிழர் வர்த்தக ஸ்தாபனங்களிலும் அறிமுகமாகிறது.**







| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 59 நிமிடம் |
| புதுக்குடியிருப்பு | 6 நிமிடம் |
| ஸ்கந்தபுரம் | 6 நிமிடம் |

## Galaxy *யின் தனித்துவமான சிறப்புக்கள்...*

* பொதுத் தொலைபேசியிலிருந்தோ, வீட்டிலிருந்தோ, கைத்தொலைபேசி மூலமாகவே France இன் எந்தப் பகுதியிலிருந்தும் Local தொலைபேசி கட்டணமின்றி இலவச இலக்கமான (0800 710 ...) மூலம் உலகம் முழுவதும் தொடர்பு கொள்ள முடியும்.
* நீங்கள் உரையாடும் நிமிடங்கள் மட்டுமே அறவிடப்படும். மேலதிக வெட்டுக்கள் இருக்காது.
* தொடர்பானது எவ்வித தடையுமின்றி தொடர்பு கொண்ட அடுத்த விநாடிகளிலேயே கிடைக்கப் பெறும்.

**இலங்கைக்கு இலவச இணைப்பு மூலமாக (0800 710 ...) வடக்கு கிழக்கு உட்பட இலங்கை முழுவதற்கும் அதிக நிமிடங்களாக 58 நிமிடங்கள்**

வியாபார, அலுவலகத் தொடர்புகளுக்கு,
**Goldring Europe**
**137, Bld Voitaire**
**75011 paris**
**France**

(எமது ஐரோப்பிய அலுவலகம்)
தொடர்புகளுக்கு:
00331 43 72 77 77

பிரான்ஸ் முழுவதற்கும் விநியோகஸ்த்தர்கள் உடனடியாக தேவைப்படுகிறார்கள்.

# புதிய வரவு புதிய வரவு




# புலிகள் மீதான தடையை எதிர்த்து பிரிட்டன் பொருள் புறக்கணிப்பு போராட்டம்

விடுதலைப் புலிகள் மீது பிரித்தானிய அரசு விதித்துள்ள தடைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பிரிட்டன் பொருள் புறக்கணிப்பு போராட்டத்தை நடாத்த உள்ளதாக தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கடந்த வாரம் சென்னையில் தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்பு குழுவின் கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

சுபவீரபாண்டியன், இராசேந்திரசோழன், தேனிசை செல்லப்பா, கிதபச்சையப்பன், தியாகு, கு.கலியபெருமாள், பேரா.சரசுவதி, அற்புதம் குயில்தாசன், மு.அந்தாலனார், பேரா.கலியாணி, வாலாசாவல்லவன், புலவர். இறைக்குருவனார். அரங்க குணசேகரன், கதிர்சுமணி, பாவலர் இராமச்சந்திரன், கா.பரந்தாமன், கேசௌந்தரராசன் உள்பட 50 க்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்ட இக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. ஈழத்தமிழ் மக்களின் தேசிய விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் மற்றும் 20 தேசிய விடுதலை இயக்கங்களுக்கும் பிரிட்டிஷ் அரசு தடை விதித்திருப்பதை இக் குழு வன்மையாகக் கண்டனம் செய்கிறது. பிரித்தானிய நாடாளுமன்றமும், பிரபுக்கள் அவையும் இத்தடையை ஏற்கக் கூடாதென்று அந்த அவைகளை இக்குழு வேண்டுகின்றது.

2. பிரிட்டிஷ் அரசு இலங்கையைக் கைப்பற்றுவதற்கு முன்பு ஈழத் தமிழர்களுக்குத் தனியான அரசு இருந்தது. ஆனால் சிங்களவர்- தமிழர் பகுதிகளை இணைத்து ஒரே அரசின் கீழ் பிரிட்டன் கொண்டு வந்தது. 1948 ஆம் ஆண்டு பிரிட்டன் வெளியேறும் போது தமிழர்களின் இறைமையை அவர்களிடம் ஒப்படைத்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யாமல் சிங்களவரிடம் ஆட்சிப்பொறுப்பை ஒப்படைத்து விட்டு பிரிட்டன் வெளியேறியது. ஈழத் தமிழர்களுக்கு இன்று ஏற்பட்டிருக்கிற இன்னல்களுக்கு பிரிட்டனே காரணமாகும்.

3. இலங்கையில் இறப்பர், தேயிலைத் தோட்டங்கள் அமைக்க தமிழ்நாட்டிலிருந்து இலட்சக் கணக்கான தமிழர்களைப் பிரிட்டன் அழைத்துச் சென்றது. தமது கடும் உழைப்பால் இறப்பர், தேயிலைத் தோட்டங்கள் அமைத்து அந்நாட்டை வளப்படுத்திய மலையகத் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு பிரிட்டனுக்கு உண்டு. ஆனால் மலையகத் தமிழர்களின் குடியுரிமையை சிங்கள அரசு பறித்தபோது அதைத் தடுக்க பிரிட்டிஷ் அரசு தவறிவிட்டது. மலையகத் தமிழர்களின் அவலங்களுக்குப் பிரிட்டிஷ் அரசே காரணமாகும்.

4. தற்போது விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு தடைவிதித்ததன் மூலம் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் பிரிட்டிஷ் அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருவதற்குத் தமிழினத்தின் கண்டனத்தைத் தெரிவிக்கும் வகையில் இறக்குமதியாகும் பிரிட்டிஷ் உற்பத்திப் பொருள்களையும் பிரிட்டிஷ் கூட்டுறவுடன் இந்தியாவில் தயாரிக்கப்படும் பொருள்களையும் வாங்காமல் புறக்கணிக்கும்படி தமிழர்களை இக்குழு வேண்டிக்கொள்கிறது.

எனவே மார்ச்- 30ஆம் நாள் சென்னை, மதுரை, கோவை, தஞ்சை, நெல்லை, புதுவை ஆகிய நகரங்களில் பிரிட்டிஷ் உற்பத்திப் பொருள்களை எரிக்கும் இயக்கம் நடத்துவது என இக்குழு முடிவு செய்கிறது.

அத்துடன் தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் 10 ஆம் ஆண்டு நிறைவு விழாவைத் தமிழகமெங்கும் சிறப்பாகக் கொண்டாடுவது என இக்குழு முடிவு செய்கிறது.



தெஹல்கா.கொம் (www.tehelka.com) இணையத்தளத்தில் ஆயுத பேர ஊழல் தொடர்பான செய்தி வெளியாகியவுடன் டெல்லியில் உள்ள பா.ஜ.கவின் தலைமையகம் மீது காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தினர்.

# சந்திரிகாவின் நிர்ப்பந்தத்திற்கு நிதியமைச்சர் பணிந்தாரா?

## - பழ.நெடுமாறன் கேள்வி

சேது சமுத்திர திட்டத்திற்கு நிதி ஒதுக்குவதில் சிறீலங்கா அரசின் நிர்ப்பந்தத்திற்கு நிதி அமைச்சர் பணிந்துவிட்டாரா என தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் கேள்வி எழுப்பியுள்ளார். இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கொளச்சல் துறைமுகத்தை சர்வதேச துறைமுகமாக உயர்த்துவதற்கு 4500 கோடி ரூபாய் திட்டத்திற்கான உடன்பாட்டினை மலேசிய அரசுடன் தமிழக அரசு செய்துகொண்டுள்ளதை நான் வரவேற்கிறேன். கொளச்சல் துறைமுகத்திற்கு அருகில் உள்ள நாங்குநேரியில் சிறப்பு பொருளாதார மண்டலம் அமைக்கும் திட்டத்தை ஏற்கனவே முதலமைச்சர் கருணாநிதி தொடங்கிவைத்துள்ளார்.

1964-ஆம் ஆண்டில் தூத்துக்குடி துறைமுக விரிவாக்கத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆனால் மேற்கண்ட் திட்டங்களில் முழுமையான பயனும் தமிழ்நாட்டுக்குக் கிடைக்க வேண்டுமானால் சேதுக் கால்வாய்த் திட்டம் நிறைவேற்றப்பட்டால் மட்டுமே முடியும். இல்லையென்றால் மேற்கண்ட திட்டங்களில் முதலீடு செய்யப்பட்டிருக்கிற பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்கள் வீணாகும். பிரதமர் நேரு இருந்த காலத்தில் திட்டக்குழுவின் ஒப்புதலும் மத்திய அமைச்சரவையின் ஒப்புதலும் பெற்று எடுத்துக்கொள்ளப்படும் நிலையில் இருந்த சேதுக்கால்வாய்த் திட்டத்தை அப்போதைய சிறீலங்கா பிரதமர் பண்டாரநாயகாவின் வேண்டுகோளின்படி பிரதமர் நேரு கிடப்பில் போட்டார். தொடர்ந்து சிறீலங்காவை திருப்திப்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காகவே காங்கிரஸ் ஆட்சிகள் இந்தத் திட்டத்தை நிறைவேற்றவில்லை.

ஆனால் தேசிய ஜனநாயகக் கூட்டணி பதவிக்கு வந்தபிறகு இத்திட்டம் நிச்சயமாக நிறைவேற்றப்படும் என்ற வாக்குறுதியை பிரதமர் வாஜ்பாய் வழங்கினார். ஆனால் இவ்வாண்டு வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்படவில்லை. சிறீலங்கா அதிபர் சந்திரிகாவின் நிர்ப்பந்தத்திற்கு இந்திய அரசு பணிந்துவிட்டது. எனவேதான் இத்திட்டம் மீண்டும் கிடப்பில் போடப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது.

தமிழக முதலமைச்சர் இது குறித்து பிரதமருக்கு கடிதம் எழுதியிருக்கிறார். மத்திய அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் தமிழக அமைச்சர்கள் அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களை உடன் அழைத்துச் சென்று கூட்டாக பிரதமரிடம் இக்கோரிக்கையை வலியுறுத்தவேண்டும். சேதுக்கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றாமல் குளச்சல் துறைமுகத்தை விரிவாக்குவதும், நாங்குநேரி சிறப்புப் பொருளாதாரத் திட்டத்தை நிறைவேற்றுவதும் போதிய பயனைத் தராது. விரிவாக்கப்பட்ட தூத்துக்குடி துறைமுகம் முடங்கிக் கிடப்பதைப் போல கொளச்சல் துறைமுகமும் முடங்கிப்போகும். வரவு செலவுத் திட்டத்திற்கு நிதியமைச்சர் அளிக்கும் பதில் உரையில் சேதுக் கால்வாய்த் திட்டத்திற்குப் போதுமான நிதி ஒதுக்கப்படவில்லை என்றால் சிங்கள அரசின் நிர்ப்பந்தத்திற்கு பணிந்து தமிழர்களுக்கு இந்திய அரசு துரோகம் செய்திருக்கிறது என்றுதான் தமிழ் மக்கள் கருதவேண்டிய நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# சிறீலங்கா கடற்படை தாக்குதலில் மேலும் ஒரு மீனவர் பலி

தமிழக மீனவர்கள் மீது தொடர்ந்து தாக்குதல்களை நடாத்தி வரும் சிறீலங்கா கடற்படை கடந்த 15ம் திகதி நடாத்திய தாக்குதலில் தமிழக மீனவர் ஒருவர் பலியாகியுள்ளார்.

இந்தியக் கடல் எல்லைக்குள் நுழைந்து கடந்த வியாழன் அதிகாலை இத் தாக்குதலை நடாத்தியுள்ளனர். இதன்போது படகில் இருந்த மூன்று மீனவர்களில் கோபி(26) என்ற நாகபட்டினம் வாணகிரியைச் சேர்ந்த மீனவர் பலியாகியுள்ளார். ஏனைய இரு மீனவர்களும் படகினுள் மறைந்துகொண்டதால் உயிர்தப்பியுள்ளனர்.

சிறீலங்கா கடற்படையினரால் தமிழக மீனவர்கள் பலர் சுட்டுக்கொல்லப்பட்டும் படுகாயங்களுக்கு உள்ளாகியும் வருகின்றனர். இதனைத் தடுத்து நிறுத்துவதாக சிறீலங்கா அரசு இந்திய அரசிற்கு உறுதியளித்திருந்த பின்னரும் மீனவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## அக்னி தயாரிப்பு ஆரம்பம்

இந்தியாவின் தயாரிப்பான நீண்ட தூர ஏவுகணை அக்னி-2 மற்றும் நடுத்தர ஏவுகணைகள் இந்திய இராணுவத்தில் இணைக்க முடிவு செய்யப்பட்டதை அடுத்து, இவ் ஏவுகணைகள் தயாரிக்கும் பணியை தொடங்கியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. தற்போது குறிப்பிடத்தக்க அளவில் உற்பத்தி செய்யப்படும் இவ் ஏவுகணைகள் எந்தெந்தப் படைத்தளங்களில் வைத்திருப்பது என்பது குறித்தும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், அந்தத் தளங்களில் இருந்தே இவை ஏவப்படவேண்டும் எனவும் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

# நடிகர் விவேக்கிற்கு ‘சின்ன கலைவாணர்’ விருது



தமிழக திரைப்பட நகைச்சுவை நடிகர் விவேக்கிற்கு ‘சின்ன கலைவாணர்’ விருது கடந்த 15ம் திகதி வழங்கப்பட்டுள்ளது. மதுரையில் நடைபெற்ற உலக நுகர்வோர் தின விழாவில் தென்னிந்திய நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பு இவ் விருதினை வழங்கி கௌரவித்தது.

அத்துடன் சிறந்த மருத்துவமனைக்கான விருது சென்னை அப்பலோ மருத்துவமனைக்கும், சிறந்த உணவகத்திற்கான விருது தல்லா குளம் அம்மா மெஸ் என்ற உணவகத்திற்கு வழங்கப்பட்டது.

## இவ்வாரச் செய்திகள்

★ நோர்வேயின் இலங்கைக்கான சிறப்புத்தூதர் எரிர் சொல்ஹெய்ம் புதுடெல்லியில் வெளியுறவுச் செயலர் ஜஸ்வந்த் சிங்கை சந்தித்துப்பேச்சுக்களை நடாத்தினார்.

★ பாரதிய ஜனதா கட்சியின் தற்காலிக தலைவராக ஜனா கிருஷ்ணமூர்த்தி நியமிக்கப்பட்டார். ஆயுத பேர ஊழல் தொடர்பான விவகாரத்தை அடுத்து தலைவராக இருந்த பங்காரு இலட்சுமணன் பதவி விலகியதையடுத்து, தற்காலிக தலைவராக இவர் நியமிக்கப்பட்டார்.

★ இலங்கையில் இருந்து மேலும் 12 தமிழ் அகதிகள் தமிழகம் வந்துள்ளனர். அனைவரும் விசாரணைகளின் பின்னர் மண்டபம் முகாமிற்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

★ உத்ராஞ்சல் மாநிலத்தில் நில நடுக்கம் ஏற்பட்டது. அச்சத்தினால் மாடியில் இருந்து குதித்த ஒருவர் உயிரிழந்தார்.

★ இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்த 300 இற்கு மேற்பட்ட பாகிஸ்தான் மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

★ இந்தியாவின் வெளியுறவுச் செயலராக சோகிலா என்ற பெண் பதவியேற்றார். இவர்தான் இப்பதவிக்கு வந்த முதல்ப்பெண் ஆவார்.

★ பீகாரில் போபி கிராமத்தில் தனியார் பேருந்து ஒன்று விபத்துக்குள்ளாகியதில் 14 பேர் கொல்லப்பட்டு 15 பேர் படுகாயம் அடைந்தனர்.

# உலகச் செய்திகள்

## கொங்கோவின் எல்லைப் பகுதிகளில் இருந்து வெளிநாட்டு படைகள் விலகல்

(15.03.01)

மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோ ஜனநாயக குடியரசின் பிரச்சினைக்குரிய எல்லைப்பகுதிகளில் இருந்து தங்களது படைகளை விலக்கிக்கொள்ளும் நடவடிக்கைகளை அண்டைநாடுகள் ஆரம்பித்துள்ளன. அத்துடன் மேற்படி பிராந்தியத்தில் நடவடிக்கைகளை ஐ.நா. அமைதிப் படை மேற்கொள்வதற்கு வசதியாக கொங்கோ இராணுவமும், அவர்களுக்கு எதிராக போரிட்டு வரும் அமைப்புக்களும் தங்களது படைகளை விலக்கிக்கொண்டுள்ளனர்.

உகண்டாவின் இராணுவத்தைச் சேர்ந்த சுமார் 750 இராணுவத்தினர் தங்களது முன்னணி நிலைகளில் இருந்து விலகி உகண்டாவுக்குச் செல்லத் தயாராகினர். உகண்டா தனது படைகளின் 70 விகிதத்தினரை விலக்கிக்கொள்ளவுள்ளதாக கொங்கோவில் உள்ள உகண்டா படைகளின் தளபதி தெரிவித்தார். புதிய அரசின் சமாதான முன்னெடுப்புக்களுக்கு மதிப்பளித்து தாம் விலகிக்கொள்வதாக அவர் பத்திரிகையாளர்களிடம் கூறினார். கடந்தவாரம் ருவண்டா தனது படைகளை கொங்கோ முன்னணி நிலைகளில் இருந்து விலக்கிக்கொண்டது. கொங்கோ விடுதலை முன்னணியினர் தங்களது படைகளை ஏற்கனவே விலக்கிக்கொண்டுள்ளதாக அதன் தலைவர் ஜோன் பியர் பெம்பா கூறியுள்ளார்.

1999ம் ஆண்டு நடுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் ஒன்றின்படி சகல இராணுவங்களும் தங்களது முன்னணி நிலைகளில் இருந்து 15 கிலோமீற்றர் தூரம் வரை விலகிக்கொள்ள வேண்டும் என முடிவெடுக்கப்பட்டது. அதனையடுத்து ஐ.நா. தனது அவதானிப்பாளர்களை யுத்த நிறுத்தப் பகுதிக்கு அனுப்புவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

## ரஷ்ய விமானத்தைக் கடத்தியவர்களை நாடுகடத்த கோரிக்கை

(17.03.01)

செச்சினியர்கள் எனக் கருதப்படும் மூவரால் கடத்தப்பட்ட ரஷ்ய போக்குவரத்து விமானம் சவூதிஅரேபியாவின் மெதீனா விமானநிலையத்தில் வைத்து சவூதி விசேட படையினரால் திடீர் தாக்குதலுக்கு உள்ளாகியது. கடத்தல்காரர்கள் எதிர்பார்த்திராதவேளை விமானத்திற்குள் நுழைந்த படையினர் நடத்திய தாக்குதலினால் ஒரு சிப்பந்தி, துருக்கிய பயணி ஒருவர், கடத்தல்காரர் ஒருவர் என மூவர் கொல்லப்பட்டனர். ஏனைய இரு கடத்தல்காரர்களும் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டனர். மேற்படி நபர்களை தனது நாட்டிற்கு அனுப்பும்படி ரஷ்ய வெளியுறவு அமைச்சு சவூதிஅரேபியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளது. ஆனால் இரு நாடுகளுக்குமிடையே நாடு கடத்தல் ஒப்பந்தம் எதுவும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ரஷ்ய விமான நிறுவனமொன்றிற்குச் சொந்தமான ருப்லோவ் - 154 விமானம் 174 பயணிகளுடன் துருக்கியின் ஸ்தான்புல் விமானநிலையத்தில் இருந்து மொஸ்கோ நோக்கி புதனன்று புறப்பட்டது. சிறிதுவேளையில் 3 செச்சினியர்கள் தாம் விமானத்தை திசைதிருப்புவதாயும் சவூதிஅரேபியாவிற்கு அதனைக் கொண்டுசெல்லுமாறும் விமானிகளிடம் எச்சரிக்கை விடுத்தனர். சவூதிஅரேபியாவிற்கு விமானம் கொண்டுவந்து இறக்கப்பட்டவுடன் கடத்தல்காரர்கள் தங்களது கோரிக்கைகளாக செச்சினியா மீதான ரஷ்யத் தாக்குதல் நிறுத்தப்படவேண்டும் என்றும், ரஷ்யா தனது படைகளை விலக்கிக்கொள்ளவேண்டும் என்றும் கைதிகளை விடுவிக்கவேண்டும் என்றும் கோரினர். சவூதிஅரேபியாவின் அதிகாரிகளுக்கும் கடத்தல்காரர்களுக்குமிடையே பேச்சுக்கள் நடந்தவேளை 46 பயணிகள் விமானத்தில் இருந்து தப்பிக்கொண்டனர். ஏற்கனவே சில பயணிகளை கடத்தல்காரர்கள் விடுவித்திருந்தனர். தங்களது கோரிக்கைகளை விடுத்த அவர்கள், விமானம் ஆப்கானிஸ்தானுக்குச் செல்ல அனுமதிக்க வேண்டும் என்றும் அதற்கான எரிபொருள் நிரப்பப்படவேண்டும் என்றும், அதிகாரிகளிடம் கோரினர். இல்லையேல் தாம் விமானத்தை தகர்க்கப்போவதாகவும் அவர்கள் எச்சரித்திருந்தனர். இதற்கிடையே பணய நாடகம் சவூதி விசேட படையினரின் தலையீட்டினால் முடிவிற்கு வந்தது.

## உக்ரேனிய உள்துறை அமைச்சரை ஜனாதிபதி பதவி நீக்கம் செய்தார்

(18.03.01)

உக்ரேனிய ஜனாதிபதி லியோனிட் குஷ்மா எதிர்பாராத விதமாக தனது உள்துறை அமைச்சர் பதவி நீக்கம் செய்தார். எதிர்க் கட்சிகளும், பொது அமைப்புக்களும் ஜனாதிபதி இராஜினாமா செய்யவேண்டும் என்று கோரி வரும் வேளை உள்துறை அமைச்சரின் பதவி நீங்கம் இடம்பெற்றுள்ளது.

அரசுக்கு எதிரான செய்திகளை வெளியிட்ட பத்திரிகையாளர் ஒருவர் கொல்லப்பட்டார். இவரது சேதமடைந்த உடல் கடந்த நவம்பர் மாதம் பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டது. மேற்படி சம்பவத்துக்கு ஜனாதிபதி மற்றும் உள்துறை அமைச்சர் போன்றோர்கள் பொறுப்பு என்று குற்றம் சாட்டப்பட்டது. இதனையடுத்து மேற்படி இருவரும் பதவிகளில் இருந்து விலக வேண்டும் என்று கோரி எதிர்ப்பு ஊர்வலங்கள் நடத்தப்பட்டன. கடந்த மாதம் உக்ரேனின் பொலிஸ் 'தலைமை அதிகாரி பதவி நீக்கம் செய்யப்பட்டார். பத்திரிகையாளர் கொலை விவகாரத்தில் அவரது தொடர்பும் இருந்ததாக கூறப்பட்டது. இப்போதைய பதவி நீக்கமானது சுதந்திர ஊடக அமைப்பினரின் போராட்டத்துக்கு கிடைத்த வெற்றி எனக் குறிப்பிட்ட அதன் பேச்சாளர் தங்களது போராட்டம் தொடரும் என்றும் குறிப்பிட்டார்.

# ஓராண்டு நினைவஞ்சலி



## திருமதி சிவலோகநாயகி சச்சிதானந்தம்

பிறப்பு: 11.12.1945

இறப்பு: 22.03.2000

தாயே! எமைவிட்டுப் பிரிந்து
ஆண்டொன்று ஓடிவிட்டது
ஆனால் என்றும் எம்முள் – வாழ்ந்து
கொண்டே இருப்பீர்கள்
நாமெல்லாம் கூடி வாழ்ந்த
பசுமை நினைவுகள் எம்மை வாட்டுகிறது
தேடினாலும் கிடைக்காத செல்வமே!
நடமாடும் தெய்வமே! – எம்மை
நடைப்பிணமாக்கி எங்கு சென்றீர்கள்
சென்ற இடம் தெரிந்திருந்தால் ஓடிவந்திருப்போம்
திசை தெரியாது தவிக்கின்றோம் தாயே!
இறந்தும் எம்முன் இறவாமல் வாழும் அன்னையே!
உங்கள் இழப்பால் – நாம்
வாழ்ந்தும் வாழாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்
தாயே! நீங்கள் அறிவீர்களா எம் நெஞ்சுறையும் சோகத்தை!
அன்னையே! அநாதைகளாகத் தவிக்கின்றோம்
அங்கிருந்தே, எம்மை ஆசீர்வதியுங்கள்
வாழும் காலம் யாவும் உங்கள்
நினைவுடனே வாழ்ந்திடுவோம்
உங்கள் ஆத்மா அமைதிக்குக் கைகூப்பித் தொழுகின்றோம்!

– கணவன், பிள்ளைகள், சகோதரர், உறவினர்

தொடர்புகளுக்கு: சுவிஸ் 076/5281390 – 055/2566392

Pub.Sw.

# ஈரானில் ரஷ்ய முதலீடுகளுக்கு அமெரிக்கா கண்டனம்

(17.03.01)

ரஷ்யா கடந்தவாரம் ஈரானுடன் மிகப்பெரும் இராணுவ, பொருளாதர்ர கூட்டு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டது. இதன்மூலம் ரஷ்யா தனது அதிநவீன ஆயுத தளவாடங்களை ஈரானுக்கு விற்பனை செய்யும். அத்துடன் பொருளாதார ரீதியான கூட்டுநடவடிக்கைகளையும் இருநாடுகளும் மேற்கொள்ளும்.

மேற்கண்ட ஒப்பந்தத்தினை அமெரிக்கா கடுமையாகக் கண்டித்துள்ளது. அத்துடன் அந்நாட்டின் இராஜாங்கச் செயலர் ரஷ்யாவிற்கு தனது எச்சரிக்கையையும் விடுத்துள்ளார். புதிய அமெரிக்க இராஜாங்கச் செயலரான கொலின் பவல், ரஷ்யா ஐக்கிய அமெரிக்காவுடனும் மேற்கு நாடுகளுடனும் நெருங்கிய உறவுகளை பேணிக்கொள்ள விரும்பினால் ஈரானுடனான முதலீடுகளை நிறுத்திக்கொள்ளவேண்டும் எனக் கூறினார். இதுபற்றி ரஷ்ய வெளியுறவு அமைச்சர் இகோர் இவானோவுடன் பேசவும் தான் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் கூறினார். ரஷ்யாவின் தற்போதைய நகர்வுகள் 80 களில் சோவியத் யூனியன் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு ஒத்ததாக உள்ளது போன்று தனக்குத் தெரிவதாகவும், இது ஒரு பாரிய எதிர்விளைவினை ரஷ்யாவிற்குக் கொடுக்கக்கூடிய ஒன்று எனத் தான் கருதுவதாக அவர் மேலும் கூறினார்.

இதற்கிடையே ஈரானிய அதிபர் கட்டாமி நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டு ரஷ்யா வந்துசேர்ந்தார். அங்கு அதிபர் விளாடிமீர் புடீன், பிரதமர் மிக்கயில் கசியானோவ், வெளியுறவு அமைச்சர் இகோர் இவானோவ் போன்றவர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இறுதியில் இராணுவ கூட்டு நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தத்தையும் பொருளாதார நகர்வுகளுக்கான ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திட்டார். இருநாடுகளும் 2000 ஆண்டில் 900 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கான வர்த்தகத்தை மேற்கொண்டுள்ளன. புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள ஒப்பந்தங்களினால் மேலும் 7 பில்லியன் டொலர்களை சேமிக்க முடியும் என ஈரானிய அதிபர் கூறியுள்ளார். 1979ம் ஆண்டு நடந்த ஈரானிய புரட்சியின் பின் ரஷ்யாவிற்கு விஜயம் செய்துள்ள முதலாவது அதிபர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சீனக் குண்டு வெடிப்புக்களில் நூற்றுக்கணக்கானோர் பலி

(15.03.2001)

சீனாவின் வடபகுதி நகரமான ஷிஜியாசுவாங்கில் கடந்த வெள்ளியன்று காலை இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புக்களால் கொல்லப்பட்டவர்களது தொகை 108 என தொலைக்காட்சி உத்தியோக பூர்வமாகக் கூறியுள்ளது. ஏற்கனவே கடந்த வாரம் ஜிங்சியாங் பகுதியில் பாடசாலையொன்றில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 40 பாடசாலைச் சிறுவர்கள் கொல்லப்பட்டது அறிந்ததே.

கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களுக்குக் காரணம் என்னவென்பது இன்னமும் கண்டுபிடிக்கப்படாத போதிலும், அவற்றுக்குக் காரணமானவர் என 41 வயதான நபரொருவரை பொலிசார் தேடிவருகின்றனர். பருத்தி ஆலைகளின் தொழிலாளர்களும், தொடருந்துத் தொழிலாளர்களும் வசித்து வந்த கட்டடத்தொகுதிகள் நான்கே குண்டுத்தாக்குதல்கள் மூலம் தகர்ந்து போயின.

கடந்த வருடம் பொது இடங்களில் குண்டு வைத்த குற்றத்துக்காக ஒருவருக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டது. சீனாவில் குற்றச் செயல்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது குறித்து கடந்த வாரம் பாதுகாப்பு தலைவர்கள் கவலை தெரிவித்தனர். அத்துடன் கடுமையான சட்டங்கள் மூலம் குற்றச்செயல்களை ஒடுக்க தாம் தீர்மானித்துள்ளதாக தலைநகரின் பாதுகாப்புத்துறை பொறுப்பாளர் அறிவித்துள்ளார். சந்தைப் பொருளாதாரத்தை நோக்கி நகர்ந்து வரும் சீனாவில் இப்போதே குற்றச் செயல்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படாவிட்டால் எதிர்காலத்தில் மிக மோசமான விளைவுகளை சீனா எதிர்நோக்கும் என்றும் சீன அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

# அமெரிக்காவும், ஜேர்மனியும் தீவிரவாதிகளை கைதுசெய்ய மறுக்கின்றன - மசிடோனியா

(18.03.01)

அமெரிக்கா மற்றும் ஜேர்மனிய படைகள் தங்களது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து தாக்குதல்களை தொடுக்கும் அல்பேனிய தீவிரவாதிகளை கைதுசெய்ய மறுக்கின்றன என்று மசிடோனிய பிரதமர் குற்றம் சாட்டியுள்ளார். லுஜிப்கோ ஜோர்ஜியேவ்ஸ்கி பத்திரிகையாளர்களிடம் பேசுகையில், ஐ.நா.வின் கட்டுப்பாட்டிலுள்ள கொசோவோ பகுதியில் இருந்தே தனது நாட்டின்மேல் தீவிரவாதிகள் தாக்குதல்களை மேற்கொள்கின்றனர். இவர்களை தடைசெய்யவோ கைது செய்யவோ கொசோவோ பாதுகாப்பு படையினர் முயல்வதில்லை எனக் குற்றம் சாட்டினார்.

இதற்கிடையே கொசோவோ பாதுகாப்பு படையின் தளபதி ஞாயிறன்று விடுத்துள்ள எச்சரிக்கையொன்றில், அல்பேனிய தீவிரவாதிகள் தங்களது படைகளை இலக்குவைத்து தாக்கமுயன்றால், அவர்கள் மேல் கடுமையான பதில் தாக்குதல்கள் நடாத்தப்படும் என்றார். கொசோவோவில் நேட்டோ தலைமையில் 37,000 படைகளும் மசிடோனியாவில் 3,000 பேரும் உள்ளனர். சண்டைகள் இடம்பெற்றுவரும் டெட்டோவோ பகுதியில் இருந்து 500 ஜேர்மனிய படைகள் வெள்ளியன்று விலகிக்கொண்டனர். ஞாயிறன்று மசிடோனியப் படைகள், அல்பேனிய தீவிரவாதிகள் நிலைகொண்டுள்ள மலைப்பகுதிகளை நோக்கி கடுமையான எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டன.

# ரஷ்ய வெளியுறவு அமைச்சரின் பல்க்கன் விஜயம்

(18.03.01)

ரஷ்ய வெளியுறவு அமைச்சர் இகோர் இவானோவ் திங்களன்று யுகோஸ்லாவிய, மசிடோனியா போன்ற நாடுகளுக்கு தனது விஜயத்தை ஆரம்பித்தார். அதற்கு முன்பாக பத்திரிகையாளர்களிடம் அவர் பேசியபோது, நவீன ஆயுத தளவாடங்களை முழுமையாக யுகோஸ்லாவியா பெற்றுக்கொள்ள மேற்குநாடுகள் அனுமதி வழங்கவேண்டும் என்றும் அப்போதுதான் தென்பகுதி பல்க்கன் பிராந்தியத்தில் பலச் சமநிலை ஏற்படமுடியும் என்று கூறினார். புதிய யுகோஸ்லாவிய அரசுடன் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்திக்கொள்ளவும் அண்மைக்காலமாக தென் சேர்பியாவிலும் மசிடோனியாவிலும் தோன்றியுள்ள பதட்ட நிலைகள் பற்றி ஆராயவுமே ரஷ்ய வெளியுறவு அமைச்சர் தனது விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

கொசோவோவில் நிலைகொண்டுள்ள சர்வதேச அமைதிப் படையானது எல்லைப் பகுதிகளில் சோதனைகளில் ஈடுபட்டு அல்பேனிய தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த வேண்டும். பிராந்திய நெருக்கடி

(தொடர்ச்சி 31-ம் பக்கம்)

# அங்கோலா விமான விபத்தில் பலர் பலி

(18.03.01)

அங்கோலாவின் தனியார் விமான நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான பயணிகள் விமானமொன்று சனியன்று விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணம் செய்தவர்களில் 16 பேர் கொல்லப்பட்டனர். மேற்படி விபத்தில் விமான சிப்பந்தியொருவர் உயிர் தப்பியுள்ளார்.

தென்பகுதி அங்கோலாவில் லுபாங்கோ நகரப்பகுதியில் மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளது

(தொடர்ச்சி 31-ம் பக்கம்)

## ஐரோப்பா

★ ஸ்பெயினின் வட–கிழக்கு கடற்கரை நகரில் இடம்பெற்ற வாகனக் குண்டுத் தாக்குதலுக்கு பாஸ்க் பிரிவினைவாத அமைப்புக் காரணமாக இருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி குண்டுவெடிப்பினால் ஒரு பொலிசார் கொல்லப்பட்டு சில பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். உல்லாசப் பயணிகள் பெருமளவில் கூடும் பகுதியிலேயே மேற்படி குண்டு வெடித்துள்ளது. இப்பகுதியில் மற்றுமொரு குண்டினை பொலிசார் செயலிழக்கச் செய்துள்ளனர்.

★ பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு வெளியே நிறுத்தப்பட்டிருந்த வாகனம் ஒன்றினை பொலிசார் குண்டுவைத்து தகர்த்தனர். மேற்படி வாகனத்தில் குண்டு பொருத்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்திலேயே பொலிசார் அதனை தகர்த்ததாக அறிவித்துள்ளனர்.

## ஆசியா

★ பங்களாதேசில் கடந்த ஒருமாதமாகத் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டிருந்த மூன்று வெளிநாட்டவர்கள் இராணுவ கொமாண்டோ அணியினரின் திடீர் தாக்குதலினால் மீட்கப்பட்டனர். தென்கிழக்கு சிட்டாகொங் மலைப்பகுதியில் இவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். ஐரோப்பிய கட்டுமான நிறுவனம் ஒன்றிற்காக பொறியியலாளர்களாக மேற்படி மூவரும் பணியாற்றிவந்தனர். இரண்டுபேர் டென்மார்க்கையும் ஒருவர் பிரித்தானியாவையும் சேர்ந்தவர்கள். இவர்களது விடுதலைக்காக 1.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை தீவிரவாதிகள் கோரியிருந்தனர்.

★ பாகிஸ்தானுடன் உடனடி பேச்சுவார்த்தை நடத்த இயலாது என இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சிங் கூறியுள்ளார். ஐ.நா. பொதுச் செயலர் கோபி அனானுடன் நடந்த பேச்சின்போது, பாகிஸ்தான் பேச்சுக்களுக்கு உகந்த சூழ்நிலையொன்றினை தோற்றுவிக்கவேண்டும். அத்துடன் எல்லைதாண்டி தீவிரவாதிகளுக்கு உதவுவதை நிறுத்தவேண்டும் என்று கூறியதுடன், உடனடியான பேச்சின் மூலம் தீர்வெதனையும் கண்டுவிடுவது சாத்தியமற்றது என்றார்.

★ தீவிரவாதிகளில் தாக்குதல்களுக்கு உள்ளாகலாம் என்பதால் இந்தோனேசியா சுமார் மூன்று பட்டாலியன் இராணுவத்தினரை அட்சேய் பகுதியில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு பகுதிகளை நோக்கி அனுப்பி வைத்துள்ளது. இப்பகுதியில் கடந்த சனியன்று அட்சேய் விடுதலை இராணுவத்துக்கும் பொலிசாருக்கும் இடையே நடந்த மோதலில் இருவர் கொல்லப்பட்டு நால்வர் படுகாயமடைந்தனர். அமெரிக்க எக்சன் நிறுவனம் மேற்படி பகுதியில் எண்ணெய் அகழ்வு வேலைகளில் ஈடுபட்டுள்ளது. கடந்தவாரம் மேற்படி நிறுவனம் வேலைகளை இடை நிறுத்தி தனது தொழிலாளர்களை மீளப்பெற்றுக்கொண்டது.

## ஆபிரிக்கா

★ எகிப்திய பிரமிட் பகுதியில் வெளிநாட்டவர்கள் மேல் தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. சனியன்று தலைநகரின் மேற்கில் அமைந்துள்ள ஒரு பகுதியில் பெண்ணொருவர் கத்திக்குத்துக்கு உள்ளானார். இதற்கு திருட்டு முயற்சியே காரணம் என்று சொல்லப்படுகிறது. கடந்த வாரம் நான்கு ஜேர்மனியர்கள் கடத்தப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். மேற்படி தாக்குதல் சம்பவங்களையடுத்து எகிப்திய பொலிசார் பிரமிட் பகுதிகளில் பாதுகாப்பினை அதிகரித்துள்ளனர்.

★ எதியோப்பிய–எரித்திரிய எல்லைப் பகுதியில் ஐ.நா. படைகளின் செயற்பாட்டை தொடர்வதற்கான அங்கீகாரத்தை பாதுகாப்புச்சபை வழங்கியுள்ளது. கடந்த ஜூன் மாதம் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின்படி 4.200 ஐ.நா. படையினர் தற்காலிக பாதுகாப்பு வலையத்தில் செயற்படுத்தப்படுவார்கள் என முடிவாகியது. எதியோப்பிய எரித்திரிய படைகள் மேற்படி பிராந்தியத்தில் இருந்து ஏற்கனவே விலகிக்கொண்டன. இரண்டு நாடுகளுக்கும் இடையேயான சரியான எல்லை குறித்து முடிவுகள் மேற்கொள்ளப்படும் வரை தற்காலிக பாதுகாப்பு வலையத்தில் சர்வதேச இராணுவ நடமாட்டங்கள் இருக்கும் என பாதுகாப்புச்சபை தெரிவித்துள்ளது.

★ செனகல் நாட்டின் தென்பகுதி மாகாணத்தில் கடந்த 18 வருடங்களாக போராடிவரும் கசமான்ச் விடுதலைக்கான இராணுவத்துக்கும் அரசுக்கும் இடையே சமாதான ஒப்பந்தம் ஒன்று கடந்த வெள்ளியன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது. கசமான்ச் பிராந்தியத்துக்கு சுயாட்சி வழங்கப்படவேண்டும் எனக் கோரி போராடும் பெரும்பான்மை அமைப்புக்களின் கூட்டணி, அரசுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளபோதிலும், ஒரு அமைப்பு இதில் இணைந்துகொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மத்திய கிழக்கு

★ இஸ்ரேலின் புதிய பிரதமர் ஆரியல் ஷரோன் பதவியேற்பின் பின் தனது முதலாவது வெளிநாட்டுப் பயணமாக அமெரிக்காவுக்குச் செல்கின்றார். ஜனாதிபதி புஷ் மற்றும் பாதுகாப்புத் துறை உயர் அதிகாரிகள் போன்றோருடன் ஷரோன் பேச்சுக்களை மேற்கொள்ளவுள்ளார். இதற்கிடையே பாலஸ்தீன அதிகாரிகள் மேற்குக்கரை மற்றும் காசாப் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள தடைகளை நீக்க அமெரிக்கா இஸ்ரேலுக்கு அழுத்தம் பிரயோகிக்க வேண்டும் என்று கோரியுள்ளனர்.

★ ஈரானின் பிரதான எதிர்க்கட்சிக் குழுவினரை புரட்சிகர நீதிமன்றம் தடைசெய்தது. இஸ்லாமிய அரசினைக் கவிழ்க்க மேற்படி குழுவினர் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. கடந்த வாரம் சுதந்திர அமைப்பின் 21 உறுப்பினர்கள் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டு ஒன்பது பேர் விடுவிக்கப்பட்டனர். ஏனையோர் தொடர்ந்தும் காவலிலேயே உள்ளனர். இவர்கள் அனைவரும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஈரானின் புரட்சிகர நீதிமன்றம் அந்நாட்டில் வெளியாகும் இரண்டு பத்திரிகைகளையும் கடந்த வாரம் தடைசெய்தது.

இந்தியாவில் வசிக்கும் இலங்கை நாட்டைச் சேர்ந்தவர்களுக்கும், வெளிநாடுகளில் வசிக்கும் அன்பர்களின் நன்மை கருதியும் இராயப்பேட்டை உட்லண்ஸ் தியேட்டர்ஸ் அருகாமையில் இன்டர்நேஷனல் மேட்சிங் பாயிண்ட் அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது.

மணமகன், மணமகள் ஆகியோர் தங்கள் பெயர்களை பதிவு செய்து தங்களுக்கு பொருத்தமான மணமகன், மணமகளை தேர்வு செய்துகொள்ளலாம்.

சட்டரீதியான பதிவுத் திருமணம், திருமணத்திற்கு தேவையான மண்டபங்களையும், தங்கும் விடுதி, வாகனங்களும் ஏற்பாடு செய்து தருவோம்.



தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
9/1, வெஸ்ட்காட்ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
போன்: 841 4851

Pub.Ger.

# கோலாகலமாகத் திறந்துவைக்கப்பட்டது

# மனோ OFF LICENCE

## இல 14, HIGH STREET SOUTHALL

ஏற்கனவே உங்களுக்கு நன்கு அறிமுகமான 'மனோ Photo'
அமைந்துள்ள அதே நிறுவனத்தில் மனோ Off Licence

- ★ மேலதிக கட்டணம் எதுவும் இல்லாமல் ஒரு மணித்தியாலத்தில் உங்கள் புகைப்பட சுருளைக் கழுவிக்கொள்ள (£.2.99 மட்டுமே) நாட வேண்டிய நிறுவனம்!
- ★ உங்கள் வாழ்நாளில் மறக்க முடியாத போட்டோக்கள் கிழிந்துவிட்டனவா அல்லது பழுதடைந்து விட்டனவா கவலை வேண்டாம் வனப்பு மாறாமல் வண்ணம் குறையாமல் மறுபிரதி செய்வதற்கும்,!!
- ★ அகதி விண்ணப்பதாரிகளுக்கு உங்களுக்கு ஏற்பட்ட காயங்கள், காயத் தழும்புகளை மிக துல்லியமாக படம் பிடித்துக்கொள்ள நாடவேண்டிய நிறுவனம்!!!





## மனோ Photo &
## மனோ Offlicence

**N° 14 High St.**
**Southall**
**Middx UB1 3DA**

**T.P: 020 8574 9455**



# பிராந்திய நலன்களும் பேச்சுவார்த்தைகளும் சமாதானப் பல்லவிகளும்

இலங்கைத் தீவில் நடைபெறும் யுத்தம் நிறுத்தப்பட்டு அங்கு சமாதானத்தை தளைக்கச் செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் தாம் விருப்பம்கொண்டிருப்பதாகக் கூறிக்கொள்ளும் சில சக்திகள் நடைமுறையிலே 'பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை' என்ற கதையினையே இன்று வெளிப்படுத்தி வருவது தமிழினத்தை வேதனைக்குள்ளாக்குகின்ற விடயம். தமிழர் தாயகம் பல இழப்புக்களின் எல்லைகளையும் துயரங்களின் ஓரங்களையும் சொல்லொணாத அவலங்களையும் அடைந்து நிற்கின்ற இன்றைய காலகட்டத்திலும், அந்த இன்னல்களையெல்லாம் தாண்டி தமது வாழ்வியல் உரிமைக்காக தொடர்ந்தும் போராட்டத்தினை மேற்கொண்டு வருகின்றார்கள். இந்தப் போராட்டத்தை எத்தகைய சக்திகளினதும் விருப்பத்திற்காக விட்டுக்கொடுத்தோ, அல்லது அடிபணிந்து செல்லவோ தயாராகவும் தமிழினம் இல்லை. இதுவெட்டவெளிச்சமாகத் தெரியும் நிதர்சனம். ஆனால் இந்த நிதர்சனத்தைப் புரிந்துகொள்ளாது, 'சமாதானப் பல்லவி பாடிக்கொண்டே' இந்த சக்திகள் எமது துயரங்களை நாடி பிடித்துப்பார்க்க முற்படுகின்றன.

இந்த வகையில், தற்பொழுது வடக்குக் கிழக்குப் பிரதேசங்களுக்கு வெளிநாட்டின் தூதுவர்களும், தூதுக்குழுக்களும் சுழற்சி முறையில் பயணம் செய்வதும், அங்கு நிலைமைகளை அவதானிப்பதாகக் கூறிக்கொள்வதும், போன இடத்தில் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு எதிராக ஏதாவது உளறிக்கொட்டுவதும் நடந்தேறி வருகின்றது. இந்த நிகழ்வுகள் இவ்வாறு ஒருபுறம் நடந்தேற மறுபுறத்தே சிறீலங்கா அரசும் தனது தூதுக்குழுக்களை சர்வதேச ரீதியில் சுற்றுப்பயணத்திற்கு முடுக்கிவிடுவதும் காணக்கூடியதாக இருக்கின்றது. அரசின் இந்த சுற்றுப் பயணத்தை சமாதானப் பேச்சுக்களுக்கு ஆதரவு தேடும் நோக்கிலானது என ஒரு சாராரும், இல்லை இல்லை அது விடுதலைப் புலிகளை சர்வதேச நாடுகள் தடைசெய்ய வேண்டுமெனக் கோருவதுமென மறு சாராருமாகக் கூறிக்கொள்ளுகின்றனர். இதற்கிடையே சிறீலங்கா அரசு தனது வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது. புதிய வரவுசெலவுத் திட்டத்தில் யுத்த செலவீனத்திற்கென 6339 கோடி ரூபாவை , அதாவது கடந்த ஆண்டினை விட 20 சதவீத அதிகரிப்பில் ஒதுக்கி, 'தனது சமாதான விருப்பத்தையும்' அரசு மிகத் தெளிவாகக் காட்டியிருக்கின்றது. எனினும் விடுதலைப் புலிகளுக்கும் அரசிற்கும் இடையே நோர்வே அரசின் அனுசரணையுடன் விரைவில் பேச்சுக்கள் நடைபெறக்கூடும் என்ற ஊகங்களும் நாளாந்தம் செய்தியூடகங்களில் உலாவருகின்றது. விடுதலைப் புலிகள் தமது ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தினை. பிரகடனப்படுத்தி ஏறத்தாழ மூன்றுமாதங்கள் ஆகின்றன. எதிர்வரும் 24ம் திகதியுடன் அவர்களது இந்த யுத்த நிறுத்தம் முடிவடைகின்ற போதிலும், மீண்டுமொருமுறை அது நீடிக்கப்படலாம் என ஊகங்கள் எழுப்பப்பட்டுவரும் இவ்வேளை, சிறீலங்கா அரசோ தொடர்ந்தும் தமிழர் தாயகத்தின் இந்தப் பண்பினை துச்சமென மதித்து, மேலும் தனது போர் வெறியினை வெளிக்காட்டுகின்றது. 'எரிகின்ற நெருப்பில் எண்ணை ஊற்றுவதுபோல' சில

## பேம்பி

சர்வதேச நாடுகளும் சிறீலங்கா அரசின் இந்த தமிழின விரோதப் போக்கிற்கு ஆதரவாகவும் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு எதிராகவும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. அதாவது, ஏறத்தாழ இவ்வாறான நாடுகளின் நோக்கம் சிறீலங்கா அரசின் சமாதானத்திற்கான யுத்தத்தினை ஆதரிப்பது போன்றதே. பேச்சுவார்த்தைக்கு சாதகமான சூழ்நிலைகளை தோற்றுவிக்க வேண்டும் என்ற ஒரு கொள்கையின் அடிப்படையிலேயே தமிழர் தாயகம் இந்த யுத்தநிறுத்தப் பிரகடனத்தை வெளியிட்டது. ஆனால் சிறீலங்கா அரசோ இதற்கு மறுதலையாக யுத்தத்தை நடத்திக்கொண்டே பேச்சுக்களை ஆரம்பிக்கலாம் என்ற புதிய விதியினை பிரகடனப்படுத்தியுள்ளது. இந்த மக்கள் விரோத விதியினையும் யுத்த ஆதரவுக் கொள்கையினையும் இதுவரை எந்த சர்வதேச நாடுகளும் வெளிப்படையாக கண்டித்து சிறீலங்காவிற்கு ஒரு குட்டு வைத்ததாகவும் தெரியவில்லை.

ஆனால் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற பல்லவி பாடப்படுவதிலும் குறைவேதும் இல்லை.

ஒரு கதைக்காக விடுதலைப் புலிகளும் சிறீலங்கா அரசும் பேச்சுக்களில் ஈடுபட்டாலும் சிறீலங்கா அரசு அங்கு என்ன செய்யும்? அந்தப் பேச்சுக்களுக்கு என்ன முடிவு ஏற்படும் என்பதை தலையைக் கசக்கி மூளையைப் பிழிந்து அறிந்துகொள்ளவேண்டிய அவசியமும் ஏறக்குறைய இருக்காது. கடந்த காலங்களில் தமிழர் தாயகத்தை சிறீலங்கா அரசுகள் பேச்சுவார்த்தையெனக் கூறி 'எவ்வாறு' ஏமாற்றியது என்ற வரலாற்றினை அறிந்தவர்களுக்கு, சிறீலங்காவின் இன்றைய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு மீளவும் என்னசெய்துவிடும் என்பது புரியாததல்ல. தமிழர் தாயகத்தை ஏய்ப்பதற்கான வியூகங்களையும் இந்த அரசு ஏற்கனவே தயார்ப்படுத்திவிட்டது. குறிப்பாக அதிகாரப் பகிர்வு ஆலோசனைகளை பேச்சுக்களுக்கான அடிப்படையாகக் கொள்ளலாம் என அரச தரப்பு அறிவித்ததும் இந்த யுக்தியில்தான். தமிழர் தாயகத்தின் அபிலாசையோ, சமாதானமொன்று ஏற்படவேண்டுமானால் அது சுயநிர்ணய உரிமையின் அடிப்படைத் தளத்திலேயே பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதுதான். சிறீலங்கா அரசிற்கு இந்த சுயநிர்ணய உரிமை என்கின்ற பதம் எட்டிக்காயாகக் கசப்பதில் இருந்தே, 'அது தமிழ் மக்களுக்குத் தருவதற்காக வைத்திருக்கும் தீர்வு' புலனாகின்றது.

பொதுவாக சுயநிர்ணய உரிமை என்கின்ற அலகு பிரிவினையா இல்லையா என்பதைத் தீர்மானிப்பது அந்த உரிமையைக் கொண்டிருக்கும் மக்களேயன்றி வேறொருவரும் இல்லை. இந்த சுயநிர்ணய உரிமையின் கீழ் இனங்கள் இணைந்துவாழ்கின்ற நாடுகளும் இருக்கின்றன. ஆனால் தமிழர்களும் சிங்களவர்களும் இவ்வாறாக இணைந்து வாழ்வதற்கான ஒரு சூழ்நிலையை, சிறீலங்கா என்ற தேசம் தமிழர் தாயகத்தின்மீது கட்டவிழ்த்துவிட்ட கோர வெறியாட்டங்கள், என்றோ சிதைத்துவிட்டன. இன்று உள்ள சமகால நிலைமையின்படி இந்த சுயநிர்ணய உரிமையின் கீழ் தமிழ் மக்கள் எதைத் தேர்ந்தெடுப்பார்கள் என்பது ஒன்றும் சிதம்பர இரகசியமல்ல. பல தசாப்தங்களுக்கு முன்னரே தமிழர் தாயகம் இலங்கைத் தீவில் சிங்கள தேசத்துடன் நட்புறவாக, தாமும் கௌரவமாக வாழவே தலைப்பட்டனர். ஆனால் சிங்கள தேசம் அவ்வாறான சூழ்நிலைக்கு அனுமதித்ததா? இல்லவே இல்லை. தமிழ் மக்களின் சார்பில் எழுப்பப்பட்ட மிகச் சிறிய கோரிக்கைகளுக்குக்கூட, அந்த தேசம் அராஜகத்தையே தீர்வாகக் கட்டவிழ்த்து விட்டது. அது விதைத்த வினைகள்தான் இன்று அத்தேசத்தை சுட்டெரிக்கும் தீயாக பயமுறுத்துகின்றன. ஆகவே வரலாற்றுத் தவறுகளை விட்டவர்களும் ஒடுக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டவர்களும் தமிழின ஒழிப்பினை மேற்கொண்டவர்களும் சிங்களத் தலைவர்களேதான். தமிழர் தரப்பிலும் அன்று குறைகள் இல்லாமல் இல்லை. தமது மேட்டுக்குடித்தனமான பார்வையுடன் இனத்தின் எதிர்காலம் பற்றிய தூர நோக்கு எதுவும் இல்லாமல் சில தமிழ்த் தலைவர்கள் அன்று குலத்தைக்கெடுக்கும் கோடரிக் காம்புகளாக முளைத்ததும் உண்டு. இவ்வாறு முளைத்த காம்புகள்தான் இன்று கதிர்காமர், டக்ளஸ் வகையறாக்களாக ஆங்காங்கே காணப்படுகின்றன.

> சுயநிர்ணய உரிமை என்கின்ற அலகு பிரிவினையா இல்லையா என்பதைத் தீர்மானிப்பது அந்த உரிமையைக் கொண்டிருக்கும் மக்களேயன்றி வேறொருவரும் இல்லை.

இது ஒருபுறம் இருக்கட்டும். கடந்தவார அரசியல் நிகழ்வுகளின் பக்கம் ஒரு பார்வை செலுத்தலாம். குறிப்பாக சிறீலங்கா அதிபர் சந்திரிகாவின் ஐரோப்பிய விஜயம் நோர்வேயின் விசேட தூதர் எரிக் சொல்ஹெய்மின் புதுடெல்லி விஜயம் பற்றியது.

சிறீலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான தனது முயற்சிகளை மேற்கொர்ண்டுவரும் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தனது முயற்சியின் தற்போதைய நிலைவரங்கள் குறித்து இந்திய அரசிற்கு விளக்கிக் கூறுவதற்காக புதுடெல்லி சென்றார் எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த விஜயத்தின் நோக்கம் என்னவென்று, இந்திய வெளியுறவு அமைச்சு பேச்சாளரிடம் செய்தியாளர்கள் வினவியபோது; சமாதான முயற்சிகள் தொடர்பான இந்திய அரசின் பற்று உறுதியை அரசு, நோர்வே தூதரிடம் மீள வலியுறுத்தி இருப்பதாக அதற்குப் பதிலிறுக்கப்பட்டது. உண்மையில் எரிக்சொல்ஹெய்ம்மை அழைத்து இந்திய அரசு என்ன கூறியது என்பது இருதரப்பினருக்குமே தெரியும். ஆனால் இங்கு மனதை நெருடும் ஒரு விடயம் என்னவென்றால், இந்திய அரசு தனக்கு சமாதான முயற்சிகளில் பற்றுறுதி இருப்பதாகத் தெரிவித்திருப்பதுதான். இந்திய அரசிற்கு 'இருக்கும் இந்தப் பற்றுறுதி குறித்து' தமிழ் மக்களுக்கு விளக்கம் 'குறைவாக' இல்லை. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தனது மேலாதிக்கத்தை தக்கவைக்க இந்தியா முயல்வதும், வடக்குக் கிழக்கில் சிறீலங்கா அரசு மேற்கொண்டுவரும் இனப் படுகொலையை கண்டுகொள்ளாமலும், மாறாக அந்தப் படுகொலைகளைப் புரிபவர்களுக்கு ஆயுத பண உதவிகளை வழங்கி தட்டிக்கொடுத்து வருவதும் கண்கூடாகத் தெரிந்த விடயங்கள். தற்பொழுதுகூட நோர்வேயின் அனுசரணை குறித்து இந்தியா விசனம்கொண்டிருப்பதாகவும் நோர்வேயின் சில சமாதான முயற்சிகளுக்கு அது சில தடைகளை விதிப்பதாகவும் செய்தி ஆய்வாளர்கள் சிலர் சுட்டிக்காட்டுகின்றனர். எது எப்படியோ இந்த செப்படி வித்தைகளுக்கு ஈழத்தமிழினம் பணிந்து விடப்போவதில்லை என்பதே உண்மை.

வோல்த்தம்ஸ் ரோவில் புதிய நகைமாளிகை

ATN Jewellery

37, Palmerston Road, Walthamstow E17 6PR

Tel: 02085219767

வாரம் ஏழு நாட்களும் காலை 11.30 முதல் மாலை 7 மணி வரை திறந்திருக்கும்



தமிழர் தங்க நகைத் தேவைகளையும் உயர் ரக வேலைப்பாடுகளுடன் எண்ணம்போல் தெரிவு செய்ய நாடவேண்டிய இடம் ATN Jewellery. இங்கு உலக தரத்தின் சின்னமான 916 ATN பொறிக்கப்பட்ட உத்தரவாத தங்க நகைகள் கிடைக்கும். என்றும் உங்கள் எண்ணம்போல் தெரிவு செய்ய நாடவேண்டிய நிறுவனம் ATN!!

Pub.Lon.

# புலிகளின் சமாதானக் குரல் - சிறீலங்காவின் தடைக் கோரிக்கை சர்வதேசத்தின் முரண்பாடுகள்

**வவுனியாவில் இருந்து பி.மாணிக்கவாசகம்**

நோர்வேயின் சமாதான முயற்சிகள் சரிவருமா - சரிவராதா? சமாதான முயற்சிகள் சர்வதேச மயப்பட்டுள்ள நிலையில் விடுதலைப் புலிகளுக்கும், சிறீலங்கா அரசுக்கும் இடையே ஏன் இன்னும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவில்லை? சமாதான முயற்சிகளின் முன்னேற்றத்தில் முட்டுக்கட்டைகள் ஏற்பட்டிருப்பது தெளிவாகவே தெரிகின்றது. எல்லோருமே சமாதானத்தை விரும்பும்போது, இந்த முட்டுக்கட்டைகளை நீக்குவதற்குரிய சூட்சுமம் எங்கே இருக்கின்றது? எல்லாம் ஒரே குழப்பமாகத்தான் இருக்கின்றது.

சிறீலங்காவின் சுதந்திரதினக் கொண்டாட்டத்தின்போது இராணுவ நடவடிககைகள் தொடரப்பட வேண்டும் என்பதையும், விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாக பலவீனப்படுத்தப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்திய சந்திரிகா, புலிகளின் போர் நிறுத்தத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள மாட்டாது என்பதையும் வலியுறுத்தயிருந்தார். அத்துடன், சிறீலங்கா விமானப்படை தினம் கடந்த 10ம் திகதி கொண்டாடப்பட்டபோது, அங்கு உரையாற்றிய சந்திரிகா, புலிகளுக்கு எதிரான தமது யுத்த நடவடிக்கையில் விமானப் படையினர் தமது வலுவான பங்களிப்பை நல்குவார்கள் என நம்பிக்கையும் தெரிவித்திருந்தார். சிறீலங்காவின் இரண்டு முக்கிய வைபவங்களிலும் நாட்டின் ஜனாதிபதி என்ற ரீதியில் அவர் தெரிவித்துள்ள கருத்துக்கள் மிக முக்கியமானவையாக விளங்குகின்றன. அதுவும் சமாதான முயற்சிகள் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் அவருடைய கருத்துக்கள், அரசாங்கத்தின் இராணுவ அணுகுமுறையைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டப் போதுமானதாக அமைந்திருக்கின்றன.

விடுதலைப் புலிகள் சமாதானத்தில் நாட்டமில்லாதவர்களாக இருக்கின்றார்கள். அவர்களைப் பேச்சுவார்த்தைக்கு வருமாறு தூண்ட வேண்டும் என்று சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவேண்டிக்கொண்டதை அடுத்தே, நோர்வே இந்த சமாதான முயற்சிகளில் ஈடுபட்டது. விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டு, அவர்களை பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்குச் சம்மதிக்கச் செய்தது. சிறீலங்காவில் தொடர்ந்து கொண்டிருக்கின்ற யுத்த நிலைமைகளுக்கு ஒரு முடிவு காணப்பட வேண்டும் என்ற நோக்கில் நோர்வேயினால் மேற்கொள்ளப்படுகின்ற முயற்சிகளை ஐரோப்பிய ஒன்றியமும் ஏனைய முக்கிய நாடுகளும் ஆதரிக்கின்றன.

இதேவேளை, அண்மையில் யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்த சிறீலங்காவுக்கான அமெரிக்க தூதர் அஸ்லி வில்ஸ், விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு வந்து சமாதானமான முறையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்று நேரடியாகவே உபதேசம் செய்துள்ளார். தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம், அவர்களின் அரசியல் அபிலாசைகள், அதற்காக அவர்கள் இதுவரையில் செலுத்தியுள்ள பெறுமதிமிக்க விலை, அவர்களின் இலட்சியம், இவற்றின் பின்னணியில் அமைந்துள்ள அவர்களின் தேசியத் தன்மை, அதனடிப்படையில் அவர்களுக்கு இயல்பாகவே இருக்க வேண்டிய அரசியல் நிலைப்பாடுகள் என்பவற்றையெல்லாம் புறந்தள்ளிய நிலையில் அமெரிக்கத் தூதர் ஆற்றிய உபதேசப் பேச்சு, வாதப் பிரதிவாதங்களுக்கும் பல கசப்பான உணர்வுகளுக்கும் தமிழ் மக்களைத் தள்ளியுள்ளது என்பது வேறு விடயம். அது தனியாக ஆராயப்பட வேண்டியது. ஆனால், சமாதான முயற்சிகள், அதனுடன் தொடர்புடைய செயற்பாடுகள் என்பவற்றில் உலக நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியமும், விடுதலைப் புலிகளுக்கு கொடுத்து வருகின்ற நெருக்குதல்களின் அளவிற்கு சிறீலங்கா அரசாங்கத்திற்கு ஏன் கொடுக்கவில்லை என அரசியல் தெளிவு கொண்ட தமிழ் மக்கள் வினவுகின்றனர்.

யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினர் பேச்சுவார்த்தை மேசையில் சந்திக்க வேண்டும். மனம்விட்டு பேச்சுவார்த்தை நடத்தி, அதன் மூலம் தமது பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காணவேண்டும் என்று உபதேசம் செய்கின்ற இந் நாடுகள், தனது உள்நாட்டு அரசியல் பாதுகாப்பு வலயத்தினுள் தலையைக் குனிந்துகொண்டு, விடுதலைப் புலிகளை இந்தச் சந்தர்ப்பத்தில் தடைசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்துள்ள பிரித்தானியாவின் செயற்பாட்டைக் கண்டுகொள்ளவே இல்லை. அதற்குப் பதிலாக பிரித்தானியாவின் தடை நடவடிக்கையானது, சமாதான முயற்சிகளை எந்தவகையிலும் பாதிக்கமாட்டாது என்று உபதேசம் செய்து கொண்டிருக்கின்றன. விடுதலைப் புலிகளைத் தடைசெய்யும் நடவடிக்கையானது பிரித்தானியாவின் உள்நாட்டு விவகாரமாக இருக்கலாம். அப்படித்தான் இருக்கின்றது. ஆனால், விடுதலைப் புலிகள் பிரித்தானியாவின் உள்விவகாரங்களில் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் மூக்கை நுழைத்தது கிடையாது. சிறீலங்காவுக்கு அயல் நாடாகிய இந்தியாவின் தேசிய அரசியலிலும்சரி, மாநில மட்டத்திலான அரசியலிலும் சரி, தனியானதொரு செல்வாக்கைப் பிரயோகிக்கத்தக்கதொரு மாபெரும் சக்தியாக விடுதலைப் புலிகள் விளங்குகின்றார்கள் என்பது வேறு விடயம். ஆனால் பிரித்தானியாவைப் பொறுத்தமட்டில், விடுதலைப் புலிகளின் அரசியல் செயற்பாடோ, நடவடிக்கைகளோ பிரித்தானியாவின் உள்நாட்டு விவகாரங்கள் எதிலுமே செல்வாக்கு செலுத்தியதில்லை. பிரித்தானியாவில் விடுதலைப் புலிகள் நிதி சேகரிக்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டபோதிலும், அவர்கள் பிரித்தானியர்களிடம் நிதிசேகரிக்க வில்லையே. பிரித்தானியாவின் அந்நிய செலவாணிக்குத் தீங்கு விளைவிக்கும் நடவடிக்கையில் ஈடுபடவில்லையே. அவர்கள் தம் இனத்தைச் சார்ந்தவர்களிடம் தானே இந்த உதவியைப் பெறுகின்றார்கள். அது பிரித்தானியாவைப் பாதிக்கின்றது என எப்படிக் கூற முடியும்?

ஆகவே இவ்வாறான பின்னணியில், பிரித்தானியா விடுதலைப் புலிகளை இச் சந்தர்ப்பத்தில் தடை செய்வதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கையானது, அவர்களை அரசியல் ரீதியாக சர்வதேச மட்டத்தில் மட்டம்தட்டும் நடவடிக்கையே தவிர வேறு ஒன்றுமில்லை. அதுமட்டுமல்லாமல். உக்கிரமான ஒரு யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப்புக்களில் ஒன்றாகிய விடுதலைப் புலிகளை, பிரித்தானியா தனது இந்த நடவடிக்கையின் மூலம், உளவியல் ரீதியாகப் பாதிக்கச் செய்ய முற்பட்டுள்ளது. அத்துடன் அவர்களுடைய உரிமைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி, உரிமைப் போராட்டத்திற்கான நியாயமான காரணங்களையும் சிதைக்க முற்பட்டுள்ளது என்றே கொள்ள வேண்டியுள்ளது. பிரச்சினை ஒன்றில் சம்பந்தப்பட்டவர்களை சமாதான வழியில் நெறிப்படுத்த விரும்புகின்றவர்கள், இருவருக்கும் சமமரியாதையும் கௌரவமும் வழங்குவதே நீதியானதாக இருக்கும்.

விடுதலைப் புலிகளுக்கு நெருக்குதல்களைக் கொடுக்கின்ற நாடுகள், சிறீலங்கா அரசாங்கத்தை, அதன் நிலைப்பாட்டில் இருந்து இறங்கிவரச் செய்வதற்கு எந்தவிதமான நடவடிக்கையையும் எடுத்ததாகத் தெரியவில்லை. மாறாக, தனது எதிராளியாகிய விடுதலைப் புலிகளைப் பற்றி தரக்குறைவான நிலையில் சித்தரிக்கின்ற கருத்துக்களை வேதவாக்கக் கொண்டு, அதற்கேற்ப தமது நாடுகளில் பிரித்தானியாவைப் பின்பற்றி செயற்பட வேண்டும் என்று, சிறீலங்கா அரசு உலக நாடுகளைத் தூண்டும் செயற்பாட்டை அனுமதித்திருப்பதும் அழகான காரியமல்ல. அதற்கு செவி கொடுப்பதும் சரியானதல்ல. சமாதான முயற்சிகளில் பல்வேறு தடங்கல்கள், இழுபறிகள் ஏற்பட்டுள்ள போதிலும் எதுவுமே இடம்பெறாததைப் போன்று தொடர்ந்து, சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான தனது காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருக்கின்ற நோர்வேயின் முயற்சி வெற்றி பெறுவது ஐரோப்பிய யூனியன் தொடக்கம் சிறீலங்கா விவகாரத்தில் அக்கறையும் ஆர்வமும் கொண்டுள்ள நாடுகள் நடுநிலை தவறாமல் செயற்படுவதிலும் இரு தரப்பினரையும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்குத் தூண்டுவதிலுமே சமாதான முயற்சிகளின் முன்னேற்றமும் வெற்றியும் தங்கியுள்ளது.

# சிறீலங்காவின் பொருளாதாரத்தை தீர்மானிக்கும் சக்தியாக புலிகள்

**கொழும்பிலிருந்து வி.தேவராஜ்**

போர்க்களத்தின் போக்கினை மாத்திரமல்ல இலங்கையின் அரசியல் பொருளாதாரத் துறைகள் குறித்து நிர்ணயிக்கும் சக்தி படைத்தவர்களாக விடுதலைப் புலிகளே உள்ளனர். சிறீலங்கா அரசின் அரசியல் நிகழ்ச்சி நிரல் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் கைகளில் உள்ளதென்றே இதுவரை கூறப்பட்டு வந்தது. தற்பொழுது சிறீலங்காவின் பொருளாதார சக்தியைத் தீர்மானிக்கும் பெரும் காரணியாகவும் அவர் இருக்கின்றார் என்ற உண்மையை ஏற்றுக்கொள்ளும் நிலையும் உருவாகியுள்ளது. அதாவது கடந்த 8ம் திகதி பிரதி நிதியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டம் இந்த உண்மையை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது.

வரவு செலவுத் திட்டத்தை அரசாங்கம் தயாரிக்கலாம். ஆனால் அதன் போக்கை நிர்ணயிக்கும் சக்தி சிறீலங்கா அரசின் கைகளிலிருந்து வன்னி நோக்கி நகர்ந்து விட்டது. இந்த வருடம் பாதுகாப்புக்கென 53 பில்லியன் ரூபா செலவிடப்படும் என கடந்தவருட வரவு செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்டது. ஆனால் கடந்த 8ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின்படி 80. 5 பில்லியன் ரூபாவாக சடுதியான அதிகரிப்புடன் அது அதிகரிக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு | பாதுகாப்புச் செலவு (மில. ரூபா) | மாற்றம் (சத வீதத்தில்) | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதம் |
|---|---|---|---|
| 1980 | 458 | – | 0.5% |
| 1981 | 479 | 4.6% | 0.5% |
| 1982 | 486 | 1.5% | 0.5% |
| 1983 | 979 | 101.4% | 0.7% |
| 1984 | 1275 | 30.2% | 0.8% |
| 1985 | 4614 | 261.9% | 2.8% |
| 1986 | 4351 | –5.7% | 2.4% |
| 1987 | 6001 | 37.9% | 3.1% |
| 1988 | 4890 | –18.5% | 2.2% |
| 1989 | 4119 | –15.8% | 1.6% |
| 1990 | 6906 | 67.7% | 2.1% |
| 1991 | 10609 | 53.6% | 2.9% |
| 1992 | 13231 | 24.7% | 3.1% |
| 1993 | 20463 | 54.7% | 4.1% |
| 1994 | 26444 | 29.2% | 4.6% |
| 1995 | 32134 | 21.5% | 4.8% |
| 1996 | 37984 | 18.2% | 5.0% |

ஆனையிறவு விடுதலைப் புலிகளின் கைகளில் வீழ்ந்தமை, வடபுலத்தில் புலிகள் தொடர்ச்சியாகப் பெற்ற வெற்றிகள், யாழ்ப்பாணத்தை நோக்கிய புலிகளின் நகர்வு என்பவையே பாதுகாப்புக்கென சிறீலங்கா அரசு ஒதுக்கியிருந்த 53 பில்லியன் 80.5 பில்லியனாக உயரக் காரணமாகியது. அதாவது சுமார் 1 பில்லியன் அமெரிக்க டொலர்களை மதிப்பீட்டையும் மீறி பாதுகாப்புக்கெனக் கொட்ட வேண்டிய நிலைக்கு சிறீலங்கா அரசு செல்ல வேண்டியதாயிற்று. இதற்கு விடுதலைப் புலிகளின் தாக்குதல் என்பதைத் தவிர வேறு எதையும் கூறுவதற்கில்லை.

சர்வதேச மகளிர் தின விழாவில் கூட இதுவே எதிரொலித்துள்ளது. இந்த விழாவில் கலந்து கொண்ட சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா, ஆனையிறவு வீழ்ச்சியின் பின்னர் ஒன்பதாயிரம் கோடி ரூபா யுத்தத்திற்கெனச் செலவிடப்பட்டுள்ளது எனக் கூறியுள்ளார். அந்த வகையில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் சமர்ப்பித்துள்ள வரவு செலவுத் திட்டமானது பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சிறீலங்கா துறைமுகங்களின் அமைச்சரும் கடந்த காலங்களில் 11 வரவு செலவுத் திட்டங்களைச் சமர்ப்பித்து அனுபவம் பெற்றவரான றொனி டிமெல், நாம் உண்மையிலேயே ஒரு மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளோம். இராணுவ தளவாடங்கள் இறக்குமதிக்குப் பெருமளவு செலவு ஏற்பட்டுள்ளதால் நாட்டின் அந்நியச் செலாவணி இருப்பில் மோசமான வீழ்ச்சி கண்டுள்ளது என கருத்து வெளியிட்டுள்ளார்.

இவ்வாறு பெரும் பொருளாதார நெருக்கடியை தற்போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டம் பிரதிபலித்து நின்ற போதிலும், போருக்கான முஸ்தீபுகள் எவ்விதத்திலும் குறைந்ததற்கான அறிகுறிகள் இந்த வரவு செலவுத் திட்டத்தில் தென்படவில்லை. அதாவது பொருளாதார நெருக்கடியினை சமாளிக்க முடியாத நிலையிலும் தொடர்ந்தும் போரினை முன்னெடுத்துச் செல்லமுடியாத நிலையிலும் தொடர்ந்தும் போருக்கு முன்னுரிமை கொடுக்கும் நிலையே காணப்படுகின்றது. பாதுகாப்புச் செலவினங்களின் எதிர்பார்ப்பாக 7500 கோடி ரூபா அதாவது 75000 மில்லியன் ரூபா செலவாகுமென வரவு செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்டுள்ளது. இதனை இலக்காகக் கொண்டு போருக்கான நிதியினை திரட்டிக் கொள்வதற்காக பாதுகாப்பு வரியினை 6.5 வீதத்திலிருந்து 7.5 வீதமாக அதிகரித்துள்ளது. நோர்வே சமாதான முயற்சிகள் முன்னெடுத்துச் செல்லப்படும் இவ்வேளையில் பாதுகாப்புக்கென 7500 கோடி ரூபாவை ஒதுக்கியிருப்பதும் பாதுகாப்பு வரியினை அதிகரித்திருப்பதுமானது, அரசின் போர் மூலம் சமாதானம் என்ற போக்கில் மாற்றம் ஏற்படவில்லை என்பதையே காட்டி நிற்கின்றது.

அதேவேளையில் சூதாட்டத்திற்கான லைசன்ஸ் வழங்குவதன் மூலம் 500 மில்லியன் ரூபாவையும் தேசிய லொத்தர் சபைகளில் தனியார் துறையினரை அனுமதிப்பதன் மூலம் 300 மில்லியன் ரூபாவைத் திரட்டலாமென்றும் அரசு எதிர்பார்க்கின்றது. மொத்தத்தில் சிறீலங்கா அரசின் போர் முனைப்பே மீண்டும் வெளிப்பட்டு நிற்கின்றது. இந்த வருடம் அரசாங்கம் கடன் பெற்றுக்கொள்ளும் எல்லை 46 வீதத்தால் அதிகரித்துள்ளது. பாதுகாப்புச் செலவினமான 7500 கோடி ரூபாவில் இராணுவத்திற்கு 46 வீதமும் பொலிஸ் படைக்கு 19 வீதமும் ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்தத்தில் தென்பகுதி மக்கள் சம்பள உயர்வையோ, சலுகைகளையோ, நிவாரணங்களையோ எதிர்பார்க்காது போருக்காக இவற்றைத் தியாகம் செய்வதற்காக வயிற்றில் ஈரத் துணியைச் சுற்றிக் கொள்ளுங்கள் என்று கூறும் சிறீலங்கா அரசு, வடக்குக் கிழக்கு மக்கள் தொடர்ந்தும் குண்டு மழைக்குள் உயிரிழப்புகளையும் சொத்தழிவுகளையும் சந்தியுங்கள் என்பதையே புதிய வரவு செலவு திட்டத்தின் மூலம் கூறி நிற்கின்றது.

# ஐந்தாவது பல்க்கன் யுத்தத்துக்கு வழிவகுக்கும் மசிடோனிய மோதல்கள்

'தன்வினை தன்னைச் சுடும்' என்பது பழமொழி. இன்று அப்படியான ஒரு நிலைக்கு வந்துள்ளது யுகோஸ்லாவிய கூட்டமைப்பின் முன்னாள் குடியரசுகளில் ஒன்றான மசிடோனியா. சில வருடங்களுக்கு முன் யுகோஸ்லாவியாவின் சேர்பியாவில் பூர்வீக அல்பேனியர்கள் கொசோவோ மாநிலத்தில் இராணுவத்துடன் மோதல்களை ஆரம்பித்தபோது அதற்கு ஆதரவுக் கரத்தினை நீட்டிய நாடுகளில் மசிடோனியாவும் ஒன்று. மசிடோனியாவின் மக்கள் தொகையின் 2/3 வீதத்தினர் ஸ்லாவிய இனத்தைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். மற்றைய 1 வீதத்தினர் ,அல்பேனிய பூர்வீகத்தைக்கொண்டவர்கள். தெற்கு சேர்பியாவில் யுகோஸ்லாவிய அரசிற்கு எதிரான பிரிவினை வாதத்தினைத் தோற்றுவிக்க அமெரிக்கா செயற்பாடுகளை மேற்கொண்டபோது அதற்கு பின்தளமாக விளங்கிய நாடுகளில் மசிடோனியாவும் ஒன்று. 1998ல் அல்பேனிய விடுதலை இராணுவத்திற்கு பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. வட அல்பேனியாவில் பல முகாம்கள் அமைக்கப்பட்டு அங்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. அன்று அவர்களுக்கான ஆயுத தளவாடங்கள் மசிடோனியாவிற்கூடாகக் கொண்டுவரப்பட்டன. ஆனால் மசிடோனியாவிற்குள் அன்று பிரிவினைவாதம் இருக்கவில்லை. அல்பேனிய மக்கள் ஸ்லாவியர்களுடன் இணைந்து செயலாற்றினார்கள். அரசும் கூட யுகோஸ்லாவியாவிற்கு எதிரான கொள்கைகளுடன் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய பாதுகாப்பு நிறுவனங்கள், விசேட இராணுவ அமைப்புக்கள் போன்றவற்றுடன் இணைந்து அல்பேனியப் போராளிகளின் செயற்பாட்டிற்கு உதவிகளை வழங்கிவந்தது. அப்படியான மசிடோனியா இன்று அன்று தான் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கான பலன்களை அறுவடை செய்யும் நிலைக்கு வந்துள்ளது.

**கொசோவோ மீது தாக்குதல்களை நேட்டோ தலைமையிலான இராணுவம் மேற்கொண்டபோது அவர்களுக்கான பின்தள வசதிகளை மசிடோனியாவும் வழங்கியது. நேட்டோவின் விமான அணிகள் மசிடோனியா வான்தளத்தைப் பயன்படுத்தின.**

மசிடோனியாவிற்குள் உள்ள அல்பேனியர்கள் இப்போது ஆயுதம் ஏந்தியுள்ளனர். அன்று கொசோவோ விடுதலை இராணுவம் என்ற பெயரில் சேர்பிய இராணுவத்திற்கு எதிராக போராடியதுபோல் இன்று தேசிய விடுதலை இராணுவம் என்ற பெயரில் மசிடோனியாவிற்குள் அரச எதிர்ப்பு மோதல்களை ஆரம்பித்துள்ளது. தேசிய விடுதலை இராணுவம் என தன்னை அழைத்துக் கொள்ளும் இப் புதிய அமைப்பு மசிடோனியாவின் இரண்டாவது பெரிய நகரமான டெட்டோவோவில் பல பகுதிகளை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்கு தற்போது போராடிவருகிறது. இவர்களது நகர்வுகளை எதிர்த்து மசிடோனியா இராணுவ அணிகளையும் விசேட பொலிஸ் பிரிவுகளையும் அனுப்பிவைத்துள்ளது. கடந்தவார இறுதியில் தேசிய விடுதலை இராணுவம் விடுத்த அறிக்கையொன்றில் பலமுள்ள எல்லா அல்பேனியர்களையும் தங்களது விடுதலை இராணுவத்தில் இணைந்து கொள்ளுமாறும் மசிடோனிய பாதுகாப்புப் படைகளில் கடமையாற்றும் அல்பேனியர்களை அதிலிருந்து விலகி அண்மையிலுள்ள தேசிய விடுதலை இராணுவ பாசறைகளில் இணைந்து கொள்ளுமாறும் அறிவித்துள்ளது. இதற்கிடையே மசிடோனியாவின் ஸ்லாவிய மக்கள் தேசிய விடுதலை இராணுவத்தின் தாக்குதல்களை முறியடிக்க தமக்கு ஆயுதங்கள் தரப்படவேண்டும் எனக்கோரி தலைநகர் ஸ்கோப்பியோவில் மாபெரும் ஊர்வலங்களை நடத்தியுள்ளனர். இதற்கிடையே எல்லைப்பகுதி நகரங்களிலும், கிராமங்களிலும் மக்கள் பாதுகாப்பு அமைப்புக்களை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது. மசிடோனியாவின் அதிபர் ஸ்லாவிய மக்களிடையே பேசுகையில் எந்தவித அல்பேனிய அச்சுறுத்தல்களுக்கும் மசிடோனியா பணியாது என்றவர், தனது நாட்டில் தற்போது தோன்றியுள்ள நிலை-க்கு ஐக்கிய அமெரிக்கா மற்றும் பிரித்தானியா போன்றவைகளே காரணம் என குற்றம்சாட்டியுள்ளார். தெற்கு சேர்பியாவில் ஐ.நா.வினால் ஏற்படுத்தப்பட்டுள்ள 3 மைல் அகலமான இராணுவ சூனியப் பிரதேசத்தை அல்பே

**- உதயன்**

னிய தீவிரவாதிகள் தங்களது ஆயுத விநியோகங்களுக்காகவும் தாக்குதல்களுக்காகவும் பயன்படுத்துகின்றனர். இதனை கொசோவோ பாதுகாப்பு இராணுவம் நன்றாக அறிந்துகொண்டுள்ளபோதிலும் அவர்களை தடைசெய்ய அதன் தளபதிகளால் இயலவில்லை என வன்மையாக சாடியுள்ளார்.

கொசோவோ விடுதலை இராணுவத்துக்கு ஓய்வு பெற்ற பிரித்தானிய SAS படையின் அதிகாரிகள் மற்றும் விமான பாரசூட் படைப்பிரிவின் அதிகாரிகளும் பயிற்சிகளை வழங்கினர். அதேபோல் கொசோவோ விடுதலை இராணுவத்துடன் இணைந்து சேர்பிய இராணுவத்தின் மேல் தாக்குதல்களை ஐரோப்பிய விசேட படையணிகளும் மேற்கொண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அமெரிக்காவின் படை அதிகாரிகள் இவர்களுக்கான ஆயுத தளவாடங்களை மசிடோனியா ஊடாக அனுப்பினர். பின்னர் கொசோவோ மீது தாக்குதல்களை நேட்டோ தலைமையிலான இராணுவம் மேற்கொண்டபோது அவர்களுக்கான பின்தள வசதிகளை மசிடோனியாவும் வழங்கியது. நேட்டோவின் விமான அணிகள் மசிடோனியா வான்தளத்தைப் பயன்படுத்தின. இன்று தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும், பலத்தை அதிகரித்துக்கொள்ளவும் நேட்டோவிடம் கையேந்தும் நிலைக்கு மசிடோனியா வந்துள்ளது.

சேர்பியாவில் இருந்து கொசோவோ மாநிலத்தைப் பிரிப்பதில் ஆரம்பித்த யுத்தம் இன்று மசிடோனியாவிற்குள் பரவியுள்ளது. இந்த யுத்தமானது அடுத்த கட்டமாக மொண்டி நீக்ரோவையும் பற்றிக்கொள்ளும் என்றும் கிரேக்கத்தின் சில பகுதிகள் கூட பரந்த கொசோவோவில் அடங்கலாம் என்றும் இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர். பத்திரிகையாளரிடம் ஒரு அல்பேனிய தீவிரவாதிகளின் பேச்சாளர் இப்படிக்கூறினார். கடந்த 50 வருடங்களாக நாம் எமது விடுதலைக்காக போராடி வருகின்றோம். பேசிப்பேசி அலுத்துப்போய்விட்டது. யுத்தம்தான் இதற்கு முடிவு. கொசோவோவில் இருந்து சேர்பியப் படைகளை வெளியேற்றுவதற்காக

அல்பேனிய தீவிரவாதத்தை அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள் வளர்த்தன. ஆனால் கொசோவோவிற்கு தனியான சுதந்திரத்தை வழங்குவதென்பதை அந்நாடுகளால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. கொசோவோ மாநிலம் என்கின்ற வரையறைக்குள் பிரச்சினைகளை முடக்கி வைத்துக் கொள்ள அவைகள் முயன்றன. ஆனால் இரண்டு வருடங்களின் பின் இன்று வேறொரு பகுதியில் இருந்து யுத்தம் முனைப்பெடுத்துள்ளது. அன்று கொசோவோ அல்பேனியர்கள் சேர்பியர்க




ளால் துன்புறுத்தப்படுகிறார்கள் எனக் கூறி கடுமையான விமானத்தாக்குதல்களை அந்நாட்டின் மீது மேற்கொண்ட நேட்டோ படைகள் இப்போது என்ன செய்யப்போகின்றன என்பது தான் கேள்வி. யுகோஸ்லாவியாவில் மிலோசோவிச்சின் ஆட்சியை அகற்றுவதற்கான ஒரு காரணியாக கொசோவோ அல்பேனியப் பிரச்சினையை நேட்டோ கையாண்டது. இப்போது தங்களது நெருங்கிய நேசநாடான மசிடோனியாவில் தங்களால் வளர்த்துவிட்டவர்கள் தாக்குதல்களை நடாத்தும்போது எந்தப்பக்கத்தில் நின்று செயல்படுவது என்ற சிக்கலில் நேட்டோ படைகள் மாட்டிக்கொண்டுள்ளன. மசிடோனியாவில் தாம் இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பிக்க அவ் அரசு கோரவேண்டும் என நேட்டோ செயலாளர் நாயகம் றொபேட்சன் கூறினார். நேட்டோ தலையீடு என்பது மிகவும் குறைந்த சாத்தியத்தைக்கொண்டது என்பதையும் அவர் கூறத்தவறவில்லை. அப்படி கொசோவோ பாதுகாப்புப் படையினர் எல்லைதாண்டி மசிடோனியாவிற்குள் அல்பேனிய தீவிரவாதிகள் மேல் தாக்குதல்களை நடாத்துவார்களேயானால் எங்குபோய் அது முடியும். ஒருபுறம் தீவிரவாதிகளுக்காக சேர்பியா மீது யுத்தத்தைத் தொடுத்தவர்கள் எப்படி மற்றொரு நாட்டிற்காக அதே தீவிரவாதிகளுடன் மோதுவார்கள் என்ற கேள்வி பலமாக எழுப்பப்படுகின்றது. கொசோவோ பாதுகாப்பு இராணுவத்தின் தலையீடு என்பது சாத்தியமற்றது என்பது இதனால் தெளிவாகிறது என்பதையும் சிலர் தெளிவுபடுத்துகின்றனர். சேர்பியாவின் தென்பகுதியில் பிரேசேவோ பள்ளத்தாக்கில் ஐ.நாவினால் அமைக்கப்பட்ட இராணுவ சூனியப்பகுயை 1500 முதல் 2000 வரையிலான கொசோவோ விடுதலை இராணுவத்தினர் பயன்படுத்துகின்றனர் என செய்திகள் தெரிவிக்கின்றன. இவர்களுக்கான இராணுவ விநியோகங்கள் யாவும் கொசோவோ பாதுகாப்புப் படையின் தளபதியின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்படுவதாகவும் கூறப்படுகின்றது. ஆனால் கடந்தவாரம் சகல எல்லைப்பகுதிகளையும் தமது படைகள் மூடிவிட்டதாக அவர் கூறினார். ஆனாலும் பத்திரிகையாளர்களின் குழுக்கள் குதிரைகளில் அம்மலைப் பகுதியில் உள்ள நான்கு தீவிரவாதிகளின் படைத்தளங்களை பார்வையிட்டதை அவரால் மறுக்கவும், தடுக்கவும் முடியவில்லை. இந்த பிரேசேவோ பள்ளத்தாக்கின் தீவிரவாதிகளின் படைத்தளங்களே மசிடோனியாவில் தோற்றம்பெற்றுள்ள தேசிய விடுதலை இராணுவத்தின் பயிற்சிகளுக்கும் விநியோகங்களுக்கும் பெரும் பங்கினை வகிக்கின்றன என்ற குற்றச்சாட்டும் எழுப்பப்பட்டுள்ளது.

யுகோஸ்லாவியாவில் தெரிவு செய்யப்பட்டுள்ள புதிய அரசும் அதன் தலைவர்களும் மிலோசோவிச்சிற்கு எதிரான நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளார்களே தவிர சேர்பியர்களின் நலன்களைப் பாதுகாப்பதிலும் கொசோவோவின் இறைமையை காப்பாற்றுவதிலும் எல்லையை பேணுவதிலும் எந்தவித வேறுபாடான நிலைப்பாட்டையும் கொண்டிருக்கவில்லை. அன்றைய அரசு சோவியத்துடனும் பின்னர் ரஷ்யாவுடனும் நெருங்கிய உறவுக

(தொடர்ச்சி 31-ம் பக்கம்)



# NÆRKØB TRAVELS Ltd
# MONEY & TRANSFER



* Colombo
* Madras
* Singepor
* Canada
* London

இந்த நாடுகளுக்கு பயணம் செய்யும் எமது வாடிக்கையாளர்களுக்கு மிக மலிவான முறையில் விமானச் சீட்டு வழங்குகிறோம்.

★ உலகில் எப்பாகத்துக்கும் விமானச்சீட்டுக்களைப் பெற நாடவேண்டிய ஸ்தாபனம் NÆRKØB TRAVEIS LTD (15 நாட்கள் தங்குமிட வசதியுடன்)
★ சென்னை சுற்றுலா: வருடாவருடம் சென்னை சுற்றுலா விமானப்பயணம் ஒருவருக்கு 9.955 Kr (அண்ணளவாக)மட்டுமே. வருகிறவருடத்துக்கான ஆசனங்களை இப்பொழுதே பதிவுசெய்து கொள்ளுங்கள்.
★ **NÆRKØB TRAVEIS LTD _ Korskervej. 104 _ 7000 Fredericia _ Danmark**
★ தொலைபேசி _ 75 91 58 40 _ 75 91 58 05 / 75 91 58 41 _ 75 91 58 04 _ தொலைநகல்: 75 91 58 42



| NÆRKØB பேருந்துசேவை | ஒருவழி | இருவழி |
|---|---|---|
| Danmark _London | 540 Kr | 890 Kr |
| Danmark _Paris | 540 Kr | 865 Kr |
| Danmark _Hombrg | 205 Kr | 327 Kr |

பாரிசில் இருக்கும் டிஸ்னிலாண்ட் & லூட்ஸ் கோயில் புனித பயணத்திற்கும் பேருந்து விசேடமாக உள்ளது.

## உடன் பணமாற்று சேவை

உலகில் எப்பாகங்களுக்கும் உடன் பணத்தை கொடுக்கவோ / எடுக்கவோ நாடவேண்டிய ஸ்தாபனம் NÆRKØB LTD

★ கொடுத்து 30 நிமிடங்களுக்குள் உங்கள் உறவுகள் கைக்குக் கிடைக்கும் என்பது நிச்சயம்.

Pub

# தேசியம், தாயகம்,

# ஐ.நா. நோக்கி

## 02.04.2001 திங்கட்கி

**பிரான்ஸ்**

பிரான்சில் இருந்து போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இப்பேரணியில் கலந்துகொள்ள 28.03.2001 ற்கு முன் 01 43 58 11 42 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு உங்கள் பெயர்களை பதிவுசெய்துகொள்ளுங்கள்.

**சுவிஸ்** தொடருந்து கால அட்டவணை

| புறப்படும் நேரம் | | திரும்பும் நேரம் | |
|---|---|---|---|
| Zürich HB | 09.30 | Geneve | 19.15 |
| Dietikon | 09.54 | Lausanne | 19.57 |
| Baden | 10.03 | Fribourg | 20.47 |
| Brugg | 10.12 | Bern | 21.03 |
| Lenzburg | 10.30 | Burgdorf | 21.28 |
| Aarau | 10.40 | Herzogenbuch | 21.40 |
| Olten | 10.53 | Langenthal | 21.46 |
| Langenthal | 11.18 | Olten | 22.01 |
| Herzogenbuch | 11.25 | Aarau | 22.17 |
| Burgdorf | 11.38 | Lenzburg | 22.26 |
| Bern | 11.54 | Brugg AG | 22.39 |
| Fribourg | 12.19 | Baden | 22.47 |
| Lausanne | 12.12 | Dietikon | 22.56 |
| Geneve | 13.53 | Zürich HB | 23.07 |

சுவிசில் பல்வேறு நகரங்களிலிருந்தும் புறப்பட்டு வரவிருக்கும் மக்கள் தங்கள் பகுதிப் பணியாளர்களிடம் தங்களின் போக்குவரத்து இருக்கைகளை முன்கூட்டியே பதிவுசெய்து பதிவுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளவும்.



**டென்மார்க்கிலிருந்து ஜெனீவா செல்வத**

Jylland பகுதிக்கான பேருந்து நிறுத்தும் இடம்:
**Ebeltoft, Randers, Viborg, Herning, Vejle**

Fyn பகுதிக்கான பேருந்து நிறுத்தும் இடம்:
**Nyborg, Middelfart, Vejle**

Sjaelland பகுதிக்கான மக்கள் Nyborg நகரத்திற்கு வரவேண்டும்.



ம், சுயநிர்ணயம்...

# அமைதிப்பேரணி

## டகிழமை 14.00 மணி

**நெதர்லாந்து**

நெதர்லாந்தில் இருந்து ஜெனீவா நோக்கிய பயணத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உங்கள் பயணம் தொடர்பான பதிவுகளை 06 21 85 39 14 அல்லது 070 3461963 என்ற இலக்கங்களுடன் தொடர்புகொண்டு உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

**ஜேர்மனி**

| நகரம் | தொடர்புக்கு |
|---|---|
| STUTTGART | TEL: 01729259785 |
| | 01727316468 |
| MÜNCHEN | TEL: 01795112996 |
| OBERHAUSEN | TEL: 020820599103 |
| DORTMUND | TEL: 020820599103 |
| DUISBURG | TEL: 020820599103 |
| MÖNCHENGLADBACH | TEL: 020820599103 |
| BIELEFELD | TEL: 01719589120 |
| HANNOVER | TEL: 01737826320 |
| BREMEN | TEL: 04216196690 |
| | 01787797992 |
| SPEYER | TEL: 01727153505 |
| BERLIN | TEL: 01723254348 |
| SAARBRÜCKEN | TEL: 01717561231 |
| MÜNSTER | TEL: 01729038781 |

இப்பேரணிக்குச் செல்வதற்கான பேருந்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. 20.03.2001க்கு முன்னர் உங்களது விபரங்களை அறியத்தரவும், மேலதிக விபரங்களுக்கு Tel: 020820599103 - Fax: 020820599104 உடன் தொடர்புகொள்ளவும்.

**ல்வதற்கான போக்குவரத்து ஒழுங்குகள்**

பேருந்து 01.04.2001 ஞாயிறு மதியம் சுவிஸ் புறப்பட்டு, 03.04.2001 செவ்வாய்க்கிழமை பிற்பகல் டென்மார்க் வந்தடையும். தொடர்புகளுக்கு தங்களுடைய பிராந்திய பிரதிநிதிகளுடன் தொடர்புகொள்ளவும் அல்லது

உதயன்: 65302588
தவராசா: 55770609
கமலி: 86480457
அலுவலகம்: 97217649





இவ் வாரம் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வி விவேகா மனோரஞ்சனை பல்கலையும் கற்றுச் சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.




# உங்கள் கைவண்ணம்





### மனோகரன் அருண் பிரசாந்

**இடம்:** 92390 Villeneuve la Garenne
**வயது:** 13 (18.04.1988)
**வகுப்பு:** 5ème
**பொழுதுபோக்கு:** படம் வரைதல், தொலைக்காட்சி பார்த்தல், யூடோ பழகுதல்.
**உறுப்பினர் எண்:** F127



### கிருஷிகா அரசநாயகம்

**இடம்:** பாண்டியன் குளம், முல்லைத்தீவு.
**வயது:** 05 (21.01.1996)
**பொழுதுபோக்கு:** பாட்டுக்கேட்டல், விளையாடுதல்
**வகுப்பு:** பாலர் பாடசாலை


ஒரு காக்கைக்கு தண்ணி தாகமாய் இருந்ததாம். எல்லா இடமும் தேடியும் தண்ணி கிடைக்கவில்லையாம். ஒரு வீட்டில் ஒரு குடம் இருந்ததாம், அதற்குள் கொஞ்சம் தண்ணி இருந்ததாம், காக்கைக்கு அதைக் குடிக்க முடியவில்லையாம். என்ன செய்யலாம் என்று யோசித்து ஒரு முடிவு எடுத்ததாம். பக்கத்தில் இருந்த கல்லுகளை பொறுக்கி ஒன்று ஒன்றாய் குடத்துக்குள் போட்டதாம். தண்ணி மேல வந்ததாம். காக்கா தண்ணியை தாகம் தீர குடித்ததாம். சந்தோசமாய் பறந்ததாம்.

# கவிதை முற்றம்

### பாஸ்கரன் கீர்த்தனன்



**இடம்:** 8008 Zurich, Swiss.
**வயது:** 05 (30.10.1995)
**பொழுதுபோக்கு:** நீச்சல், படம்வரைதல், தொலைக்காட்சி பார்த்தல்
**உறுப்பினர் எண்:** S120




# கதை முற்றம்

## அன்பிற்கும் எல்லை உண்டோ

கிரேக்க நாட்டு அடிமை ஒருவன் எப்படியோ தப்பித்துக் காட்டுக்குள் ஓடிவிட்டான்.

இதை அறிந்த அரசன் கோபம் கொண்டான். 'எங்கிருந்தாலும் அவனைக் கண்டுபிடித்து இழுத்து வாருங்கள்' என்று வீரர்களுக்குக் கட்டளை இட்டான்.

வீரர்கள் அவனைத்தேடி அலைந்தார்கள்.

காட்டில் திரிந்த அந்த அடிமையின் செவிகளில் சிங்கத்தின் முனகல் ஒலி கேட்டது. முனகல் வந்த திசையை நோக்கி நடந்தான்.

அங்கே, சிங்கத்தின் காலில் பெரிய முள் குத்தியிருந்தது. வலிதாங்க முடியாமல் முனகிக்கொண்டிருந்தது.

அதன் அருகே சென்ற அவன் அதை அன்பாகத் தடவிக் கொடுத்தான். அது தன் காலை அவனிடம் காட்டியது. அவனும் மெதுவாக அந்த முள்ளை வெளியே எடுத்தான். அந்தக் காயத்திற்குக் கட்டுப்போட்டான். பிறகு தன் வழியே சென்றான்.

சில மாதங்கள் சென்றன. அவனை வீரர்கள் கண்டு பிடித்துக் கைதுசெய்தனர்.

தன் முன்னர் இழுத்து வரப்பட்ட அவனைக் கோபத்துடன் பார்த்தான் அரசன்.

'இவனுக்குத் தரும் தண்டனை தப்பிக்க நினைக்கும் அடிமைகளுக்கு ஒரு பாடமாக அமையவேண்டும். பசியுடன் இருக்கும் சிங்கத்திற்கு இவன் உணவாவதை நாம் எல்லோரும் வேடிக்கை பார்ப்போம்' என்றான்.

மறுநாள், அடிமையைச் சிங்கம் அடித்து உண்பதைக் காண ஏராளமான மக்கள் அங்கே கூடி இருந்தனர்.

சிங்கத்தின் கூண்டு திறக்கப்பட்டது. பசியால் வாடிக்கொண்டிருந்த சிங்கம் அவனை நோக்கி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து வந்தது.

இன்றோடு தொலைந்தோம் என்று அஞ்சிய அவன் தன் கண்களை மூடிக்கொண்டான்.

எதுவுமே நடவாததை அறிந்த அவன் தன் கண்களைத் திறந்து பார்த்தான். அந்தச் சிங்கம் அவன் காலடியில் படுத்து இருந்தது.

'தான் காட்டில் காப்பாற்றிய சிங்கமே அது' என்பதை அறிந்தான் அவன். அதை அன்பாகத் தடவிக் கொடுத்தான்.

நடந்ததைப் பார்த்த அரசன் வியப்பு அடைந்தான். சிங்கம் மீண்டும் கூண்டுக்குள் அனுப்பப்பட்டது.

அவனை அழைத்த அரசன், 'ஏன் அந்தச் சிங்கம் உன்னைக் கொல்லவில்லை' என்று கேட்டான்.

காட்டில் நடந்ததை விளக்கமாகச் சொன்னான் அவன்.

இதைக்கேட்ட அரசன், 'உன்னால் நான் அன்பின் பெருமையைத் தெரிந்துகொண்டேன். உன் அன்புள்ளத்திற்கு நான் தரும் பரிசு. இன்று முதல் நீ விடுதலை பெற்ற மனிதன். உன் விருப்பம் போல எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். நீயே அந்தச் சிங்கத்தை அழைத்துச் சென்று காட்டில் விட்டுவிடு' என்றான்.

# கண்டுபிடியுங்கள்

## கடந்த வார விடை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அ | க | ர | ன் | | | |
| அ | க | ன் | | | | |
| அ | க | த் | தி | ய | ன் | |
| அ | க | த் | தி | னி | ய | ன் |
| அ | க | மு | க | ன் | | |
| அ | க | வ | ழ | க | ன் | |
| அ | க | ல் | நெ | ஞ் | ச | ன் |

பின்வரும் சதுரங்களில் உள்ள எழுத்துக்களின் துணைகொண்டு தூய தமிழ்ப் பெயர்களைக் கண்டு பிடியுங்கள். முடியாது விட்டால் விடை அடுத்தவாரம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| அ | | சா | | | ச | ன் |
| அ | | ல் | | | ல | ன் |
| ஆ | | ல | | | ன் | |
| ஆ | | ன் | | | | |
| இ | | ய | | | ன் | |
| இ | சை | | | க | ன் | |
| இ | | வே | | | ன் | |

# வினா-விடை முற்றம்

## கடந்தவார விடைகள்:

1. ஆந்தை, கோட்டான், பூனை, வெளவால்
2. மணிக்கு 106560 கி.மீற்றர்
3. டாக்டர் வில்லியம் கார்வி (1578–1655)
4. அலெக்சாந்தர் கிரகம்பெல் (1847–1922)
5. எலிகளை பிடித்துண்பதன் மூலம்.
6. தனது துதிக்கை போன்ற நாக்கினால் உறிஞ்சி.

## இவ்வார வினாக்கள்

1. கறைபடியாத இரும்பு எப்படிச் செய்யப்படுகிறது?
2. கடிகாரத்தை காந்தத்திற்கு அருகில் வைத்தால் என்ன ஆகும்?
3. எகிப்தில் உள்ள மிகப் பெரிய நதி எது?
4. கொலம்பஸ் எத்தனையாம் ஆண்டில் அமெரிக்காவைச் சென்றடைந்தார்? அப்போது அங்கிருந்தவர்கள் யார்?
5. நாடுகாண் பயணியாகவிருந்த மார்க்கோ போலோ எந்தநாட்டைச் சேர்ந்தவர்?
6. நட்சத்திரங்கள் சிறிதாக இருப்பதற்குக் காரணமென்ன?

அடுத்தவாரம் விடைகளை சரிபார்த்துக்கொள்ளவும்.

# பழமொழி முற்றம்

★ தைரியம் எண்ணற்ற எதிரிகளையும் வென்று விடும்.
★ நிலத்தில் விதைப்பவன் புண்ணியத்தை விதைக்கிறான்.
★ சகோதரர்களாய் இருங்கள். ஆனால் எப்போதும் கணக்கு வைத்துக்கொள்ளுங்கள்.
★ பிரார்த்தனையின் முதல் திறவுகோல், சுத்தமாயிருத்தல்.
★ பொறுமை கல்லையும் துளைத்துக்கொண்டு செல்லும்.
★ உண்மை தங்கத்தை விட மேலானது.
★ அன்பை விதைத்தவன் நன்றியை அறுவடை செய்வான்.
★ புத்தகம் சட்டைப்பைக்குள் கொண்டு செல்லும் அழகிய பூந்தோட்டம்.
★ அறிவாளியின் ஒருநாள் வாழ்வு முட்டாளின் முழுவாழ்வுக்குச் சமன்.
★ வெற்றியின் சிறந்த பயன் மன்னித்தலே.

- சவுதி அரேபியா

சிறு கதை

# சோடைத் தென்னைகள்

சாந்தி ரமேஷ் வவுனியன்

நேரத்தைப் பார்த்தான் றஞ்சன். இரவு ஒன்பதை மணிக்கூடு காட்டியது. நாளைக்கு இந்த நேரம் சிறையிலை இருக்கப்போறன்... நினைக்க நினைக்க வியர்த்துக்கொட்டியது. வேண்டாம் நான் உயிரோடையிருக்கக் கூடாது... நான் சாகவேணும்... நான் சாகவேணும்... முகத்தில் அடித்துச் சொல்லிக் கொண்டான்... 10 வருசம் என்னைக்கருக்கினது போதும்... நான் சகாவேணும்... என்ரை சாவு என்ரை அம்மா, அப்பாவை உயிருள்ள வரைக்கும் கொண்டு கொண்டிருக்கவேணும்... அப்பவாவது என்னைப்போலை இஞ்சையிருந்து அம்மாக்காக... அப்பாவுக்காக... அக்காவுக்காக... தம்பிக்காக... தங்கச்சிக்காக... எண்டு கருகிற பெடியளை இனியாவது வாழவிடுவினம்... தன் சாவும் மற்றவர்களின் வாழ்விற்குப் பயன்பட வேண்டுமென விரும்புகிறான் றஞ்சன்.

வீட்டுக்குள் தற்கொலை பண்ணிச்சாவதற்கு இடம் தேடினான். குளியலறையில் பல தூக்குக்கயிறுகள் புலம் பெயர்ந்த தமிழரின் உயிரைக்குடித்ததை அறிந்திருந்தவன்... குளியலறையில் தானும் எங்காவது தொங்கலாமா எனப்பார்த்தான்... தூக்குப்போடுவதற்காக அவன் தேர்ந்தெடுத்த கயிற்றோடு குளியலறையைப் பார்த்தான். எங்கே தொங்கிச்சாகலாம்... விழிகள் சரியான இடம் தேடிக்கொண்டிருந்தது. தொலைபேசி அலறுகிறது... எடுக்கவா... இல்லையா... எண்ணிய மனது எடுக்கவேண்டாம் என்று முடிவெடுத்தது. தொலைபேசி ஒலித்து ஓய்கிறது. குசினிக்குள் ஏதோ எரிந்து மணத்துக்கொண்டிருந்தது. என்ன சாம்பலோ எரிஞ்சு துலையட்டும்... இண்டையோடை நானே எரிஞ்சு சாம்பலாகப்போறேன் உதடுகள் முணுமுணுத்தது. கதவு தட்டப்படுகிறது... எந்தச்சனியன் இந்த நேரம் வந்து...சலித்தபடி கதவைத்திறந்தான்... அயல் வீட்டு ஆச்சி வணக்கம் என்றுவிட்டுச் சொன்னாள் ஏதோ எரிஞ்சு மணக்கிது பார்... சரி பாக்கிறேன்... படாரெனக்கதவை அடித்துச்சாத்திவிட்டுத் திரும்பினான். குசினிக்குப் போய்ப்பார்த்தான். கறிச்சட்டி எரிந்து புகைத்துக்கொண்டிருந்தது. சட்டியைத் தூக்கித் தண்ணித்தொட்டியினுள் போட்டுவிட்டு விறாந்தையில் போயிருந்தான்.

நாளைதான் கண்களுக்குள் வந்து வந்து கழுத்தில் கயிற்றோடு நின்றது. வானொலியை மெதுவாக்கப் போட்டுவிட்டான். பெலத்து அழவேண்டும் போல்... கைகள் கால்கள் நடுங்க நெஞ்சுக்குள் ஏதோ பெருஞ்சுமையொன்று கனப்பதாய் உணர்வு... அழுதான் றஞ்சன்... விம்மி விம்மியழுதான்... தலையில் அடித்து... முகத்தில் அடித்து அழுதான்... 27 வயதில் தன்னிலை ஏன் இப்படியானது என்றெண்ணி அழுதான்... இவன் வயது இளைஞர்கள் பலர் பியரோடும்... சிகரெட்டோடும்... தலைமுடி வளர்த்து... கடுக்கன் குத்தி... இந்நாட்டு நாகரிகத்துக்கு இசைய காற்சட்டைகளைக் கிழித்துப்போட்டு... அம்மா,அப்பா, உறவு என்ற எந்த அக்கறையுமின்றி வெட்டு, கொத்து, கொலை என சண்டைக்குழுக்களும் தாங்களுமாக எப்படியும் வாழலாம் என்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவன் அப்படியானவன் அல்ல தானுண்டு தன் வேலையுண்டென 16 வயதிலேயே பெற்றோர்களால் புலம் பெயர்க்கப்பட்டு ஜேர்மனி மண்ணில் தனிக்கட்டையாகக் கால்வைத்தவன். ஒழுக்கமுள்ள ஓர் ஈழத்து இளைஞனாக இருந்தவன். ஜேர்மனி வந்த முதல் மாதமே அப்பாவின் கடிதம் வந்திறங்கியது. உன்னை அனுப்பிறதுக்கு நாங்கள் கடன்பட்ட 70 ஆயிரத்தைக் கெதியிலை குடுத்து எங்களையும் கெதியிலை முன்னேற்று... போய் ஒருமாதமாகீட்டுது இன்னும் ஒரு சதமும் அனுப்பவுமில்லை என்ன செய்யிறாயெண்டு தெரியேல்லை. வெளிநாடு போனதோட பெரிய மனிசனாகிட்டாய் போலை கிடக்கிறது... அப்பாவின் முதல் கடிதமே காசைப்பற்றியே இருந்தது. என்னைப் பெத்து ஆளாக்கி விட்டதுகள்... அதுகளை நல்லா வாழவைக்கவேணும்... தனக்குள் நினைத்துப் 16 வயதிலேயே இயந்திரமாகியவன். மலசலகூடம் கழுவி, உணவகத்தில் நெருப்போடு போராடி, கோப்பை கழுவி வெளிநாடு வரப் பெற்றோர் பட்ட கடன் அழித்து, பெற்றோரும் சகோதரங்களும் பணத்தில் பள்ளிகொள்ளத் தன்னை உருக்கிப் பதினாறு வயதிலேயே பெருஞ்சுமையைத் தன் தோழில் சுமந்தவன். அவன் இங்கு அடிமாடாகி அனுப்ப அனுப்ப ஊரில் அவன் உறவுகள், தலை, கால் புரியாமல் ஆடத்தொடங்கினர். அவனைப்பற்றி... அவன் எதிர்காலம் பற்றி...எவரும் எண்ணவில்லை. ஒவ்வொரு கடிதமும் பணம்... பணம்... என்றே அவன் தொண்டைக்குளியை நெரித்து அவன் மூச்சைப்பிடுங்கிக்கொண்டிருந்தன. வெளிநாட்டிலிருக்கும் பல தமிழர்கள் ஊரில் இருக்கும் தம்மவர்கள் பணக்கஷ்ரம் தெரியாமலிருக்க தங்களை வருத்தி வங்கியில் கடனெடுத்து, சீட்டுப்பிடித்து, போதாக்குறைக்கு ஈவிரக்கமின்றி அறா வட்டிக்கு விடுபவர்களிடம் வட்டிக்கும் எடுத்து அனுப்பிவிட்டு இங்கு இயந்திரங்களாய் தங்கள் அன்றாடச் சாப்பாட்டிற்கே அல்லற்படுவது போல றஞ்சனும் தன் பெற்றோரின் பணப்பசிக்கு வங்கியிலிருந்து வட்டிவரையும் எடுத்து அனுப்பிவிட்டு 22 வயதில் ஒன்றரை இலட்சம் மார்க்கிற்குக் கடனாளியாகிவிட்டிருந்தான். உணவகத்தில் 12 மணித்தியாலம் எரிஞ்சு, மலசல கூடம் கழுவி அவனால் ஒன்றரை இலட்சம் மார்க்கிற்கும் வட்டி கட்டத்தான் முடிந்தது. ஆயினும் பணம் பணம் எனும் பிடுங்கில் நிற்காது தொடர, றஞ்சனுக்கு வாழ்வே வெறுத்துப்போனது. தன் நிலையை வீட்டாருக்கு எழுதிப்பார்த்தான். 'உங்கையிருக்கிற பெடியளெல்லாம் எவ்வளவு காசு அனுப்புதுகள் தாய்தகப்பனைக் கூப்பிடுகுதுகள். நீ எங்களையும் கூப்பிடுகிறாயில்லை என்ன கஷ்ரமெண்டு எழுதிறாய். அந்த இந்தக் கதையைவிட்டுப்போட்டு ஒழுங்காய்க் காசை அனுப்பு. கண்டறியாத கஷ்ரம். எங்கடை ஊரிலை கொட்டிலுகளிலை இருந்ததுகளெல்லாம் பெரிய பெரிய கல்வீடுகளிலை இருக்குதுகள் நாங்கள்தான் இப்பவும் பிச்சைக்காரர் மாதிரியிருக்கிறோம். இப்ப கடிதம் போடுறதையும் குறைச்சுப்போட்டாய். உனக்கு இப்ப எங்கடை ஞாபகமே இல்லை. இஞ்சையிருந்தால் செத்துப்போடுவாயெண்டு அனுப்பிவிட்ட எங்களுக்கு இதெல்லாம் தேவைதான்'. அம்மா நல்ல பிள்ளையாக அமைதிகாக்க, அப்பாவின் விசமேற்றிய கடிதம் அவனைக்கொன்று விட்டது. இதற்குமேல் அவனால் வீட்டாருக்குக் கடிதம் எழுத மனம் ஒப்பவில்லை. காசுதானே அவைக்குத்தேவை என்ரை வாழ்க்கை தேவையில்லை. நான் செத்தாலும் பரவாயில்லை. என்ரை வாழ்க்கை எப்பிடியும் போகட்டும். தனக்குள் குமுறியவன் அன்றிலிருந்து வீட்டுக்குக் கடிதம் எழுதுவதை முற்று முழுதாக நிறுத்திக்கொள்கிறான்.

ஆட்களை நாடுகடத்துவது, போதைவஸ்த்துக்கடத்தலில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டான் றஞ்சன். கடன் முடித்து, வீட்டார் கேட்டபோதெல்லாம் பணத்தை மட்டும் அனுப்பிக்கொண்டிருந்தான். சட்ட விரோதச் செயலில் ஈடுபட ஈடுபட பணம் அளவுக்கதிகமாகக் கையில் புளங்கியது. ஒரு வழியால் பணம் வந்துகொண்டிருக்க மறுவழியால் ஜேர்மனிய காவல்துறை அவனது சட்டவிரோதச் சம்பாதிப்பை அக்குவேறு ஆணிவேறாக சாட்சியங்களுடன் உறுதிப்படுத்திக்கொண்டு வந்தது... கடந்த வாரம் இந்நாட்டுச் சட்டம் அவன் இனிமேல் மீளமுடியாதபடி ஆயுட்தண்டனை வழங்கிவிட்டது. இனி வெளியில் வர முடியாதளவு தண்டனை அவனுக்கு முடிவாகி விட்டது.


மறுபடியும் தொலைபேசிமணி ஒலித்தது. தொலைபேசி வயரைக்கழற்றிவிட்டான். இண்டைக்கு நான் சாகவேணும் சாகமுன்னம் என்ரை வீட்டுக்குக் கடைசியா ஒரு கடிதம் எழுதவேணும். உயிருள்ள வரைக்கும் என்ரை கடிதம் அவையளைக் கொல்லவேணும். எண்ணியபடி பேனையையும் பேப்பரையும் எடுத்து மேசை விளக்கைப்போட்டான்.

அன்புள்ள அப்பா, அம்மா, தம்பிமார், அக்காமார் அனைவருக்கும் எனது இறுதிக்கடிதம் இது. இனிமேல் உங்களுக்கு நான் கடிதம் எழுதமாட்டேன். ஏனென்றால் நான் இனி உயிரோடு இருக்கமாட்டேன். உங்களது பணத்தேவை மட்டுமே உங்களுக்குத் தெரிந்தது. ஆனால் என்னைப்பற்றியோ என் வாழ்க்கை பற்றியோ தெரியவில்லை. வெளிநாட்டில் இருப்பவர்கள் ஏதோ பணத்தின்மேல் படுத்தெழும்புவதாகவே நினைக்கிறீர்கள். சும்மா இருக்க வெள்ளையன் பணத்தைக் கதவைத்தட்டிக்கொண்டு வந்து தருவதாகவே எண்ணுகிறீர்கள். இங்கு வாழும் ஒவ்வொருவரும் பணத்துக்காக எங்களது வசந்தங்களைக் கருக்கிப் பணம் தேடும் இயந்திரங்களாயிருக்கிறோம். பாசம் கொள்ள, நேசம் கொட்ட எங்களுக்கு ஒருவரும் இங்கு இல்லை. ஐயோ என்றாலும் ஏனென்று கேட்க நாதியில்லை. செத்தாலும் பிணம் நாறி மணத்தால்த்தான் தெரியும். இன்னொரு நாட்டில் எங்களுக்கென்று ஒருவரும் இன்றி கிட்டத்தட்ட அனாதை வாழ்வுதான் எங்களது. ஆனால் நீங்களோ எங்களையோ எங்களது மனக் குமுறலையோ எண்ணியே பார்ப்பதில்லை. இது எனக்குத்தனியே உள்ள பிரச்சினை இல்லை. என்னைப்போல் பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள், யுவதிகளின், குடும்பத்தவரின் நிலைமை இதுதான். குறிப்பிட்டளவு தொகையினரைத் தவிர அதாவது உங்களைப்போன்ற பணப்பிசாசுகளின் தொல்லை இல்லாதவர்கள் மட்டும் ஓரளவு வாழ்கிறார்கள். மற்றவர்களின் நிலைமை இதுதான். உங்கள் பணத்தாசையால் சட்ட விரோதச்செயல்களில் ஈடுபட்ட நான் இன்று சட்டத்தால் தண்டிக்கப்பட்டு இனி என் ஆயுளுக்கும் மீளமுடியாமல் ஆயுட்சிறைத்தண்டனை பெற்றுள்ளேன். எனக்கு இப்போ 27 வயது. வாழ்வை அணுஅணுவாய் ரசிக்கவேண்டிய வயது. இவ்வயதில் சிறையிருக்கவா...? 11 வருடம் உங்களுக்காக என் வயதையும் என்னையும் சிறைவைத்தது போதும். எனவே என் ஆயுளை முடித்துக்கொள்கிறேன்.

இப்படிக்கு,

றஞ்சன்.

கண்களில் நீர்வடிய கடிதத்தை எழுதி முடித்து உறையிலிட்டு முத்திரையொட்டிக் கடிதத்தைக்கொண்டுபோய் போட்டு விட்டு வீட்டுக்கு வந்தான். அவனது தூக்குக் கயிறைப் பார்த்தான். மரணபயம் அவனைத் துரத்தியது. ஜக்கற்றைக் கொழுவிக்கொண்டு வெளியில் போனவன் இரவு விடுதி ஒன்றினுள் புகுந்தான்.



ஒருநாளும் குடித்தறியாதவன் அங்கிருந்த அனேக குடி வகைகளை வருவித்தான். மது உள்ளே போனால் துணிவு வரும் என்று நண்பர்கள் குடித்துவிட்டுக் கூறுவது நினைவுள் நிழலாகிறது. வருவித்த குடிவகைகளில் அனேகமானவற்றை அவன் குடித்துமுடித்தான். ஏதோ ஒரு புதிய உலகில் சஞ்சரிப்பதுபோன்ற உணர்வு அவனுள்... இரவு விடுதியைவிட்டு வெளியேறுகிறான்.

வீட்டுக்கதவைத்திறந்து உள்ளே வந்தவன் கதிரையில் போயிருந்து ஒரு நாளும் குடிக்கக்கூடாதெண்ட சபதத்தோடையிருந்தனான். இண்டைக்குக் குடிச்சுப்போட்டேன். இந்த நாட்டுப் பெடியளெல்லாம் என்ரை வயதிலை எப்பிடியெல்லாம் இருக்கிறாங்கள். எங்களுக்கு மட்டும் ஏன் இப்படி...? இதற்கெல்லாம் தீர்வு மரணம் தானா...? சிந்திக்க சிந்திக்க அவன் மனதில் தெளிவொன்று பிறந்தது...

சிறை வாழ்க்கை கூட இன்னும் பல அனுபவங்களைத் தரலாம். இந்தப் போலியான உறவுகளுடனான வாழ்வைவிட அந்த தனிமையான வாழ்க்கை சிறந்ததுதான். தெளிவான முடிவுடன் அவனைத்தேடி பொலிசார் வர முன்னர்; அவனே பொலிஸ் நிலையம் நோக்கி நடக்கக் தொடங்கினான்...



# எமது விடிவிற்காய் தமது உயிர்களை...

## கப்டன் கைலன்

முறுக்கேறிய உடல்; திரண்ட தோள்கள், அந்தத் தோளில் பளபளத்துக்கொண்டிருக்கின்ற ஜி.பி.எம். துப்பாக்கி; ஒரு கையால் அதனை லாவகமாகத் தூக்கிக் குறிபார்த்துச் சுடுகின்ற வலிமை, கைலனை எப்படி மறக்க முடியும்?

கைலன் சாதுவானவன்; நல்லகுணங்கள் நிறைய இருந்தன. ஆனால், தனது ஜி.பி.எம். துப்பாக்கியை யாராவது தொட்டுவிட்டால் எரிமலையாகி விடுவான்; வாய்க்கு வந்தபடி வசனங்கள் வரும். நெருங்கிய தோழனாக இருந்தாலும் சரி, தனது பொறுப்பாளராக இருந்தாலும் சரி, துப்பாக்கியில் கைபோட முடியாது.

குளிரையும் நுளம்புக்கடியையும் தாங்க எல்லாரும் தம் போர்வையினால் உடலைத்தான் போர்ப்பார்கள். கைலன் மட்டும், தன் போர்வையினால் ஜி.பி.எம். துப்பாக்கியைப் போர்த்திவிட்டுச் சும்மா படுத்துக்கொள்வான். துப்பாக்கியைத் தன் உயிரைவிட நேசித்த கைலனைத் தலைவர்கூட பாராட்டினார். 'எத்தனையோ உயிர்களைக் கொடுத்து எடுத்த துப்பாக்கி' என்பதை கைலன் நன்கு உணர்ந்தவன். கைலன் பேசும்போது பேச்சு குறைமொழியாக இருக்கும். 'பங்கர்' அமைக்கும் பணியை ஒப்படைத்தால், பங்கரின் இருபக்கங்களையும் சீமெந்து போட்டு அழுத்தியதுபோல் சீவிச்சீவி அழகாக அமைத்துக்கொள்வான். பொறுப்புடன் – பொறுமையாக – அழகுற இவ்வாறு அமைக்க எவராலும் முடியாது. தலைவர் இவனின் நினைவிற்காக பங்கரின் சிறு பகுதியைப் பூசாமலே வைத்திருந்தார்.

மணலாற்றுக் காட்டின் ஆரம்ப காலப் போர்வாழ்வில், நிலையான களஞ்சியங்கள் இருக்கவில்லை. மரக்கெவருக்குள் பரண் அமைத்து அவற்றின்மேல் சாமான்களை வைப்பதே வழக்கமாக இருந்தது. ஒருதடவை இந்தியச் சிப்பாய்கள், சாமான் வைத்த பரணுக்கு அண்மையில் பதுங்கிக் கிடந்துவிட்டனர்; ஆனால், அவர்கள் பரணைக் காணவில்லை. அத்தியாவசியமான சில பொருட்களை உடனே அதிலிருந்து எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. கைலன் துணிவுடன் செயற்படத் தொடங்கினான். 'தேவாங்கு' மரத்தில் எவ்வாறு சத்தமின்றி ஏறுமோ அதேபோன்று, ஒரு பொருக்குடையும் சத்தம் கூட இல்லாமல் மரத்தில் ஏறி, சாமான்களை எடுத்துக்கொண்டு இறங்கினான்.

மணலாற்றில் இந்திய–புலிகள் யுத்தத்தில் கைலனுக்குப் பெருமை தேடித் தந்த வரலாற்றுப் பதிவொன்று உண்டு. இந்திய விமானப்படை 'கெலிக்கொப்ரரொன்று' காட்டினை நோட்டம் விட்டுக்கொண்டிருந்தது. கைலனின் ஜி.பி.எம். துப்பாக்கி இதனைக் குறிபார்க்கத் தொடங்கியது. குண்டுகள் நெருப்பாய்ப் பறந்தன. அவசர அவசரமாக அக் 'கெலிக்கொப்ரர்' நித்திகைக்குள் இந்தியப் படைமுகாமில் தரை இறங்கியது. அன்று மாலையிலேயே, 'கெலிக்கொப்ரரில்' இருந்த இரு உயரதிகாரிகள் இறந்துவிட்டதாக இந்திய வானொலி அறிவித்தது.

சந்தனம் சுட்டபரவையில் இந்திய இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் மரணித்தவன் மேஜர் கமல். பாதுகாப்பு எதுவுமற்ற அந்த வெளியில் கமலின் உடலை மீட்டெடுக்க கைலன் துணிந்துகொண்டான். வலிமைமிக்க தன் ஒரு கரத்தால் ஜி.பி.எம். துப்பாக்கியை இயக்கியபடியே முன்னேறி உடலை மீட்டுவந்தான்.

கமல் மரணித்த அடுத்த தினமே கைலனின் கண்களும் மூடிக்கொண்டன. 'மச்சான் காட்டுக்கு வந்த பிறகு இப்பதான் ரெண்டாவது. தடவையாய் 'சேவ்' எடுத்திருக்கிறன்' என்று கூறிக்கொண்டே, சண்டைக்குப் புறப்பட்டான். அன்று அவன் வீரம் களத்தில் வென்றது; ஆனால், உடல் மட்டும் மலையாய்ச்சரிந்து கிடந்தது!

(மாவீரர் குறிப்பேட்டிலிருந்து...)



# மீண்டும் யாழ் மண்ணில் பதிந்த எம் தடங்கள்

## பாகம் – 38

களஞ்சியம் திருத்தப்பட்டு இருந்தது. இதன் உள்பகுதியில் 'ஆண்கள் சோதனையிடப்படும் இடம்' என்ற அறிவிப்புப் பலகை காணப்பட்டது.

மே 21 ஆம் திகதி நாவற்குழி முகாம் பகுதியூடாகச் சென்று அரியாலைப் பகுதியைப் பார்வையிட்டோம். அன்றூஸ் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் அமைந்திருந்த பகுதிகளில்தான் முகாம் அமைந்திருந்தது. நாவற்குழிப் பாலமும் தைதடிப் பாலம் போலவே மிகவும் இறுக்கமாகப் பாதுகாக்கப்பட்டிருந்தது. பாலத்தின் கரையோரமாக இருந்த தடுப்புச் சுவரின் தூண்கள் சில இடிந்து வீழ்ந்திருந்தன. பாலத்தைக் கடந்ததும் கடந்த சில வருடங்களாக பெரும் அவலத்தால் உலகை தன் பக்கம் கவர்ந்த செம்மணிப் பகுதியைச் சென்றடைந்தோம். அரியாலைப் பக்கமாக வேலிகட்டி மறைத்திருந்தனர். வீதியில் இருந்து உப்பளத்திற்குச் செல்லும் வழியில் காவலரண்களுடன் முகாம் அமைந்திருந்தது. 'யாழ்ப்பாணம் வரவேற்கிறது' வளைவைப் பார்த்ததும் ஒரே இரவில் எத்தனையோ இலட்சம் பாதங்கள் இந்த வளைவைத் தாண்டி இடம்பெயர்ந்த அவலம் நினைவுக்கு வந்தது. கண்ணீரால் இவ்வீதியைக் கழுவியபடியல்லவா எம் மக்கள் சென்றனர். இன்று தியாகங்களால் கிடைத்த பலத்தின் அடிப்படையில் மீளவும் உள்நுழைவதை நினைக்கும்போது இறுமாப்பாக இருந்தது.

இந்தச் சந்தியில் ஒரே ஒரு குடும்பம் மட்டும் இருந்தது. உப்பளத்தின் காவலாளியான கந்தையா என்பவரின் குடும்பம் அது. வெட்ட வெளியில் தனித்த வீட்டில் வசித்து வந்தது அக் குடும்பம். அவரது மகன்களில் ஒருவர் யோகேஸ்வரன். நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பணி புரிந்தவர். அவரும் இங்கேதான் கொல்லப்பட்டார். கிருஷாந்தி கொலைவழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட மகிந்த ராஜபக்ஷ் தனது வாக்குமூலத்தில் 'கட்டித் தூக்கவிடப்பட்டிருந்த யோகேஸ்வரனை ஒரு அதிகாரி கீழே இறக்கிக் கொண்டிருந்ததாக' குறிப்பிட்டிருந்தார். அவ்வளவு கொடூரங்கள் இடம்பெற்ற இடம் இது. குழந்தை முதல் யோகேஸ்வரன் ஓடித்திரிந்த மண் இது. இந்த மண்ணில் இதற்குச் சம்பந்தமில்லாதவன் இவ்வளவு கொடுமைகள் புரிந்துள்ளான். இதேபோலவே கிருஷாந்தி மீதான பாலியல் வன்முறையும், படுகொலையும் நிகழ்ந்த இடம் இது. இதுவரைக்கும் உப்பு மட்டுமே கிடைத்து வந்த மண்ணில் இன்று எலும்புக்கூடுகள் கிடைக்கின்றன.

### களமுனையில் இருந்து

இந்த இடத்தின் அவலங்களை நினைத்தவாறே அரியாலைச் சந்தியை அடைந்தோம். அதற்கும் அப்பால் செல்லக்கிடைக்கவில்லை. அங்கிருந்து கிழக்கரியாலைப் பக்கமாகத் திரும்பினோம். சில தினங்களுக்கு முன்னரும் அங்கு செல்லக்கிடைத்தது. அரியாலையில் இருந்து கிழக்கரியாலை முனை 4 கிலோ மீற்றருக்கும் அதிகமான தூரம். புகையிரதப் பாதை இருந்த இடத்திலும் மேலும் சில இடங்களிலும் படையினர் அமைத்திருந்த காவலரண்களைக் காணமுடிந்தது. நாவலடியில் அன்பகம் இருந்த மாடி வீடும் அதற்குப் பின்னால் இருந்த வீடுகளும் கிபிர் மற்றும் எறிகணைத் தாக்குதலில் சிதறடிக்கப்பட்டிருந்தன. ஒளிசனசமூக நிலையமும் கூரையின்றி, அதன் பெயர் எழுதப்பட்டிருந்த சுவரின் மேல் பகுதி உடைந்துமிருக்கக் காணப்பட்டது. அதைத்தாண்டி சோலையாகவுள்ள பகுதியில் வீடுகளும் தென்னை மரங்களும் சிதறி அலங்கோலமாகக் கிடந்தன.

அதனைத் தாண்டிச் சென்றால் வீதியில் ஒரே நாற்றம். மாடுகள் ஏராளமாக எறிகணைவீச்சுக்குப் பலியாகிக் கிடந்தன. பூம்புகார் கல்விக்கூடம் எறிகணைத் தாக்குதலில் கணிசமாகச் சேதமடைந்து காணப்பட்டது. அதற்கு அப்பாலுள்ள குடியேற்றத் திட்டத்தில் உள்ள வீடுகள் பல விமானத் தாக்குதலில் சிதறிக் காணப்பட்டன. அங்குள்ள வீடுகளில் சேதமடைந்தவற்றைத் தேடுவதைவிட சேதமடையாமல் உள்ளவற்றைத் தேடுவது சுலபம். தென்னந்தோப்புகளில் தேங்காய்கள், கொப்பறாக்கள் குவிந்து கிடந்தன. வருடக்கணக்காக இத் தோட்டங்களில் இருந்து பயன்பெற முடியாத நிலை இருந்ததால் இவை இந்த நிலையில் காட்சியளித்தன. தொடர்ந்து ஐயனார் கோவில் பகுதியைப் பார்த்தோம். அரியாலைச் சந்தியில் இருந்து முனங்கு வரையான இவ்வளவு பகுதியும் நல்லூர் பிரதேசப் பகுதிக்குட்பட்டவையாகும்.

இந்தப் பகுதிகளைச் சுற்றிப்பார்த்து வருகையில் இளநிலைத் தளபதி லோறன்சைக் கண்டோம். அவரிடம் கதைத்தபோது 'முதலில் கிருஷாந்தியைக் கொலைசெய்த இடத்தில ஆமிக்கு சமாதி. ஆமியின்ரை சடலங்களை அங்கதான் கொண்டுவந்து போட்டனாங்கள்' என்றார். இந்த ஒரு வார்த்தையின் மூலம் போராளிகளின் மனதில் கிருஷாந்தியின் மரணமும் அந்தச் சகோதரி சந்தித்த அவலங்களும் எவ்வளவு தூரம் பாதித்திருக்கின்றன என்று உணர்ந்துகொண்டேன். இவருடன் தளபதி லக்ஸ்மன் நின்றுகொண்டிருந்தார். அவரிடம் நாவற்குழி முகாம் தாக்குதல் பற்றி விபரிக்குமாறு கேட்டோம். அதற்கு அவர் 'யாழ் வரவுச் சந்தியில் இருந்தும் றெயில் றோட் பக்கமிருந்தும் தான் நாங்கள் தாக்குதல் தொடங்கினனாங்கள். நாவற்குழிப் பக்கமாக இருந்த பொயின்ரை நாங்கள் அடிச்சவுடன ஆமிக்காரன் ஓட வெளிக்கிட்டிட்டான். மற்றப் பக்கம் [றெயில் றோட் பக்கம்] இருந்து எங்களுக்கு அடித்துக்கொண்டிருந்தான். நாங்கள் வெட்ட வெளியில் நின்றுகொண்டிருந்ததால் அவன் எங்களுக்கு அடிச்சுக்கொண்டிருந்தான். 50 கலிபர், ஆர்.சி.எல் எல்லாம் போட்டு அடிச்சுக்கொண்டிருந்தான். நேருக்கு நேர் நின்று சண்டை நடந்தது.

நாவற்குழிச் சந்திக்கும், றெயில் றோட்டுக்கும் இடையில் கொஞ்சம் பலமாக இருந்தவன், அதால நிண்டு அடிச்சுக்கொண்டிருந்தான். அதை அடிச்சவுடன கைதடிக்கு இடையில் உள்ள மதுச்சோலையில் இருந்து சண்டை பிடிச்சுக்கொண்டிருந்தான். அதுக்கு இடதுபுறம் வெட்டை அதில இருந்தும் அடிச்சுக்கொண்டிருந்தவன். நாங்கள் அடிச்சுக்கொண்டு போய் மற்றப் பக்கம் தளபதி கேணல் தீபன் தலைமையில் வந்த அணியோடு இணைந்துகொண்டோம்.

கைதடிச் சந்தியில் டாங்கி, ஆர்.சி.எல். வைத்து அடித்துக்கொண்டிருந்தான். நாங்கள் அடிச்சுக்கொண்டுபோக கோப்பாய் றோட் பக்கம் வெட்டையால ஓடிப்போட்டாங்கள்' என்றார்.

'அந்தப் பக்கம் தண்ணியிருக்குமே' என்று கேட்டோம். அதற்கு அவர் 'தண்ணியெல்லாம் வத்தியிட்டுது. இதுக்குள்ளால தான் ஓடினவன் என்று சனங்கள் சொன்னது' என்றார்.

(தொடரும்)



SML Royal Jewellery
287. High Street North
East Ham. Manor Park
London E12 6SL
Tel - 020 8472 5500
Fax - 020 8472 5687

WORLD STAR அன்ரனி தமிழ்க்கடை





372, Hoe Street,
Wàlthamstow.
London E17 9AA
Tel - 0208 520 3502 Fax - 0208 520 8468

உங்கள் நிறைவான
தேர்விற்கு...
V.G
Supermarket
165, Forest Road
Waltham Stow,
London E 17 6He
T.P & Fax - 0208 531 7459

உங்களுக்குத் தேவையான
அனைத்துப் பொருட்களையும்
ஒரே கூரையின் கீழ் பெற்றிட
Katpakam cash & Carry
36. Loampit Hill
Se 13 7SW- London
ஞாயிற்றுக்கிழமைகளில்
பங்கு ஆட்டிறைச்சி
பெற்றுக்கொள்ளலாம்.

Millennium Super Market
⌘ உங்களின் வீடியோ, ஓடியோ, சீடீக்களின் தேர்வுகளிற்கும்
⌘ உங்கள் இல்லத் தேவைகளுக்கும் நாடவேண்டிய இடம்.
21, Plumsted Road
Woolwich
Tel - 0208 316 7105
Mobil - 07958305466

சீலன்ஸ்
இலங்கை, இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட உடன் மரக்கறி, கடலுணவு, பல சரக்குகள் நியாயமான விலைகளில் பெற்றுக்கொள்வதோடு, மிகக்குறைந்த விலையில் தொலைபேசி அட்டைகளையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.
Seelans
332 & 334. High Street North
East Ham, London E 12-6Ph
Tp & Fax- 0208 4715733

Palm Beach
RESTAURANT
10%OFF
ALL TAKE
AWAY ORDERS
P.Sivarupan
Proprietor
Finest South Indian & Sri Lankan Cuisine
17 Ealing Road,
Wembley
Middlesex HA0 4AA
Tel: 020 8900 8664
Mobile: 079 3958 7338
Home: 020 8900 1990

ரோயல் ஜுவலரி
Royal Jewelry
287, High Street, East Ham,
Manor Park, London E12 6SL
Tel: 020 8472 5500 - Fax:
020 8472 5687

உங்களுக்குத் தேவையான
மளிகைச் சாமான்கள், பத்திரிகைகள்,
சஞ்சிகைகளுக்கு
KANNA
Euro Enterprises
198, Arch Way Road
(முருகன் ஆலயத்திற்கு அருகில்)
High Gate,
N6 5BB, London.
T. Phone- 0181-3483356

# ஈழம் சுப்பர் ஸ்ரோர்

## 'சற்பரி கில்' ஓர் புதிய நிறுவனம்

உங்களுக்கு தேவையான அனைத்து மளிகைப் பொருட்களையும்
வெம்பிளிக்கு, சவுத்தோலுக்கு என்று ஓடாமல் எல்லாவற்றையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய
ஒரே நிறுவனம்

Off Licence

**EELAM SUPER STORE**
**150, Green Ford Road**
**Sudbury Hill, Harrow HA1 3QR**
**(Sudbury Hill Under Graund க்கு அண்மையில்)**

திருமணத்துக்கான சோடனைச் சாமான்கள்,
தலைப்பாகை, வேட்டி, சால்வை, இவைபோன்ற பல...

**Tel: 02084237417**



# ஐ.நா. கூட்டத்தொடருக்கு முன் சிறீலங்கா அரசு ஆடும் கபடநாடகம்

ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா.வின் 57வது மனித உரிமைகள் மையத்தின் கூட்டத் தொடரில் சமர்ப்பிப்பதற்காக தமிழர் மனித உரிமைகள் மையத்தினால் மனு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதில், 'சிறீலங்கா அரசு, தனது மனித உரிமை மீறல்களைச் சமாளிக்கும் நோக்குடன் ஐ.நா. மனித உரிமைக் கூட்டத் தொடர் தொடங்குவதற்குச் சில வாரங்களுக்கு முன்னர், 'தாம் ஏதோ நடவடிக்கை எடுப்பதாக கபடநாடகம் ஆடுவதை வழக்கமாக்கி' வந்துள்ளது எனக்குற்றம் சாட்டியுள்ளது. கடந்த 19ம் திகதி திங்களன்று இம் மனு கூட்டத் தொடரின் தலைவரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. அம் மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சென்ற வருடம் நடைபெற்ற 56வது ஐ.நா. மனித உரிமைக் கூட்டத் தொடருக்குச் சமூகமளித்து உரையாற்றிய ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் திருமதி மேரி றொபின்சன் அவர்கள், ஐ.நா.வினால் முன்பு செய்யப்பட்ட கவலையீனத் தவறை மிகவும் கவலையுடன் கூறியிருந்தார். அதாவது, கொலை, தன்னிச்சையான படுகொலைகளுக்குப் பொறுப்பான ஐ.நா. பிரதிநிதி 1993ம் ஆண்டு ருவாண்டாவில் நடக்கவிருந்த படுகொலைகள் பற்றி முன்னெச்சரிக்கை செய்தபோது, யாரும் அதைப் பெரிதுபடுத்தவில்லை. கடைசியில் ருவ-ண்டாவில் ஆயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் எனக் கூறியிருந்தார். இதே பிரதிநிதி சிறீலங்காவிற்கு, 1997ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் விஜயம் செய்துவிட்டுச் சமர்ப்பித்த அறிக்கையில், 'சிறீலங்கா எதிர்நோக்கும் அபாயம் பற்றி' எழுதியிருந்தார். ஆனால் இவ்வறிக்கையை இன்றுவரை யாரும் பெரிதுபடுத்தாமல் இருப்பது மிகவும் கவலைக்குரியது !

தமிழர் மனித உரிமைகள் மையம் கடந்த காலங்களில் பல தடவை சிறீலங்காவில் தமிழ் மக்கள் எதிர்நோக்கியுள்ள அபாயம் பற்றி அறிக்கைகள் மூலம் வெளிக்கொண்டுவந்திருந்தோம். சிறீலங்கா அரசு சர்வதேசப் பத்திரிகையாளர்களையும், வெளிநாடுகளின் சில முக்கிய பிரதிநிதிகளையும், மனித உரிமைக் கூட்டங்கள், மாநாடுகள் என்ற பெயரில் சிறீலங்காவிற்கு அழைத்து, தமிழ் மக்கள் மீதான தமது மனித உரிமை மீறல்களை, இவர்கள் மூலம் பிரச்சாரம் செய்து மூடி மறைக்கின்றார்கள். அத்துடன், பத்திரிகைத் தணிக்கையை நடைமுறைப்படுத்துவதன் மூலம், உண்மைச் செய்திகள் சுதந்திரமாக வெளிநாடுகளைச்

சென்றடையமுடியாது தடுக்கப்பட்டுள்ளது. சிறீலங்காவைப் பொறுத்தவரையில் இனஅழிப்பு பல்வேறுபட்ட வடிவங்களில் நடைபெறுகின்றது.

1: சிறீலங்காவின் அரசியலமைப்பில் தமிழ் மக்களுடைய அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன.

2: 27 வருட காலமாக நடைமுறையில் உள்ள சட்டமும் (PTA) தொடர்ந்து வந்த அவசரகாலப் பிரகடனமும் தமிழ் மக்களை கைதுசெய்ய, சித்திரவதை செய்ய, பாலியல் வல்லுறவில் ஈடுபடுத்த, கொலைசெய்ய அரச படைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 'பயங்கரவாதத்திற்கு' எதிரான நடவடிக்கை என்ற பெயரில் வழக்கறிஞர்கள், பத்திரிகையாளர், சமயத் தலைவர்கள் தொடர்ந்து கொலை செய்யப்படுகின்றனர்.

3: கடந்த 10 வருடத்துக்கு மேலான பொருளாதாரத் தடை மூலம் தமிழ்ப் பிரதேசங்களுக்கு உணவு, மருந்து மற்றும் அவசர பொருட்கள் தடை செய்யப்பட்டுள்ளன. தற்போது ஈராக், லிபியா முன்பு தென்னாபிரிக்கா போன்ற நாடுகள் மீதான பொருளாதாரத் தடைகள், ஐ.நா.வினால் சில அழுத்தங்களை அந்நாடுகள் மீது திணிப்பதற்காக கொண்டுவரப்பட்டவை. ஆனால், தமிழர்களின் தாயக பூமி மீது கொண்டு வரப்பட்ட பொருளாதாரத் தடை 'தனது சொந்தப் பிரஜைகள்' என சிறீலங்கா அரசு முதலைக் கண்ணீர்விடும் தமிழ் மக்கள் மீதானதே. உலகின் பல பாகங்களில், பல நாடுகளில் இனப்பிரச்சினைகள் நடைபெறுகின்றன். ஆனால், தனது சொந்தப் பிரஜைகள் என்று சொல்லிக்கொண்டு பொருளாதாரத் தடைகளை அமுல்ப்படுத்தி மக்களை பட்டினிச்சாவு போன்ற இன்னல்களுக்கு ஆளாக்கப்படுவது சிறீலங்காவில் மட்டுமே நடைபெறுகிறது! இதேவேளை, அண்மைக் காலங்களில் சிறீலங்கா அரச படைகளினால் பாவனைக்குள்ளாக்கப்பட்டுள்ள கனரக ஆயுதங்கள் யாவும், இரு நாடுகளுக்கிடையான யுத்தத்திற்குப் பாவிக்கப்படுபவையே. ஆகையால், சிறீலங்காவில் அமுல் செய்யப்பட்டுள்ள பொருளாதாரத் தடையும், பாவனைக்குள்ளாக்கப்பட்டுள்ள கனரக ஆயுதங்களும் நிச்சயம் சிறீலங்காவில் நடைபெறும் இனப்பிரச்சினையை, 'ஓர் உள்நாட்டுப் பிரச்சினை அல்லவென' நிரூபித்துள்ளது.

**ஆனால், தமிழர்களின் தாயக பூமி மீது கொண்டு வரப்பட்ட பொருளாதாரத் தடை 'தனது சொந்தப் பிரஜைகள்' என சிறீலங்கா அரசு முதலைக் கண்ணீர்விடும் தமிழ் மக்கள் மீதானதே.**

4: சிறீலங்கா அரசினால் மற்றைய நாடுகளுடன் கைச்சாத்திடப்பட்டுள்ள 'அகதிகள் நாடு கடத்தல்' ஒப்பந்தங்கள். இதன் மூலம் சிறீலங்கா அரசின் மனித உரிமை மீறல்களை சர்வதேச ரீதியில் நியாயப்படுத்துவது மட்டுமல்லாமல், வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களை பலாத்காரமாக சிறீலங்காவிற்கு நாடு கடத்துவதுடன், சர்வதேச ரீதியில் தமிழ் மக்களைத் துன்புறுத்துகின்றது. அண்மைக் காலங்களில் சர்வதேசரீதியில் வெளியான செய்திகளின் பிரகாரம், சிறீலங்காவின் மனித உரிமை மீறல்களை சர்வதேசரீதியில் எடுத்துரைக்கும் மேற்கு நாட்டவர்களும் - தமிழர்களும் அடங்கிய 63 பேரை கொலை செய்வதற்கு சிறீலங்காவின் கையாட்களினால் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கு சிறீலங்காவின் வெளிநாட்டு அமைச்சின் ஆதரவு உள்ளது என பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. 'இச் செய்தியை இன்றுவரை சிறீலங்காவின் வெளிநாட்டு அமைச்சு மறுக்கவில்லை!'

இன்றுவரை தமிழீழ விடுதலைப் புலிகளினால் பிரகடனப் படுத்தப்பட்ட மூன்று மாதகால ஒருதலைப் பட்சமான யுத்த நிறுத்தத்தை, சர்வதேச ரீதியில் சமாதானத்தை விரும்புவதாகக் 'காட்சியளிக்கும்' சிறீலங்கா அரசு ஏற்க மறுத்துள்ளது. இப் போர் நிறுத்தத்தை ஏற்குமாறு பத்து தமிழ் அரசியல் கட்சிகள் சிறீலங்கா அரசிற்கு வேண்டுகோள் விடுத்தபோதும், சிறீலங்கா அரசு இதை ஏற்க மறுத்து, தனது இராணுவ நடவடிக்கையை தொடர்கின்றது. சிறீலங்கா அரசைப் பொறுத்தவரையில், தனது மனித உரிமை மீறல்களைச் சமாளிக்கும் நோக்குடன் ஐ.நா. மனித உரிமைக் கூட்டத்தொடர் தொடங்குவதற்குச் சில வாரங்களுக்கு முன்னர், தாம் ஏதோ நடவடிக்கை எடுப்பதாக கபட நாடகம் ஆடுவதை வழக்கமாக்கி வந்துள்ளது. இவற்றையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர நாம் கடமைப்பட்டுள்ளோம்.

அத்துடன் வழக்கறிஞரும், மனித உரிமையாளருமான திரு. குமார் பொன்னம்பலம் படுகொலை செய்யப்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாகியும், இன்றுவரை கொலையாளியைக் கண்டுபிடிக்க சிறீலங்கா அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதை மிகவும் ஆழ்ந்த கவலையுடன் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம். இக் கூட்டத்தொடரில் சிறீலங்காவின் மனித உரிமை மீறல்கள் பற்றி கவனத்திற்கு எடுக்கவேண்டுமென மிக தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். இத்துடன் ஓர் விபரங்கள் அடங்கிய அறிக்கையையும், களுத்துறைச் சிறைச்சாலையில் பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள 494 தமிழ் இளைஞர்களின் பெயர் பட்டியலையும் உங்கள் கவனத்திற்கு சமர்ப்பிக்கின்றோம்' எனக் குறிப்பிடப்பட்டு தமிழர் மனித உரிமைகள் மையத்தின் பொதுச் செயலர் ச.வி.கிருபாகரன் அவர்களின் கையொப்பத்துடன் கையளிக்கப்பட்டுள்ளது.

## நோர்வே அனுசரணையுடன் போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு புனர்வாழ்வு அளிக்கும் பயிற்சி

திருமலை உப்புவெளியில் அமைந்துள்ள கிறிஸ்தவ குருமார் இல்லத்தில் கடந்த 18ம் திகதி ஞாயிறன்று காலை சிறுவர் நன்நடத்தை அதிகாரிகளும், சமூகசேவை அதிகாரிகளுமாக சுமார் 30 பேர் குழுமியிருந்தனர். வடக்கு, கிழக்கு பகுதிகளில் யுத்தத்தில் சிக்குண்டு உளவியல் பாதிப்புக்குள்ளான குழந்தைகளுக்கு உளவியல் ரீதியாக புனர்வாழ்வு அளிக்கும் பயிற்சி பெற்றவர்கள் தான் அந்த அதிகாரிகள். இவர்களுக்கு பயிற்சியை வழங்கிய இந்திய உளவியல் நிபுணர் டாக்டர் சுப்பையா ராஜாராம், ஒருவருட கால பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வாக அன்றைய நிகழ்வு அமைந்திருந்தது.

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் வாழ்கின்ற, யுத்தத்தினால் உளவியல் பாதிப்புக்குள்ளான குழந்தைகளுக்கு உளவியல் ரீதியான புனர்வாழ்வு அளிப்பதே இவ்வதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பணியாகும். இச்செயற்றிட்டத்தை நோர்வே நாட்டின் குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பு செயற்படுத்துகின்றது. இவ்வமைப்பே இவ்வதிகாரிகளுக்கு இப்பயிற்சியை அளித்துள்ளது. அதனால் சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பங்குபற்ற நோர்வே நாட்டின் குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பின் இலங்கை வதிவிடப்பிரதிநிதி திரு. குன்னர் அன்டர்சனும் (Gunnar Anderson) வந்திருந்தார்.

இந்நிகழ்வில் பங்குபற்றிய மாகாணசபை உயரதிகாரிகள் இருவர் நிகழ்த்திய பேச்சுக்கள், யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் உண்மை நிலைமையையும் அதற்குரிய காரணங்களுக்கு நிரந்தரபரிகாரம் காண முயற்சிக்காது, உள்ளூர், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் தோலுரித்துக் காட்டுவதாக அமைந்திருந்தன. கல்விப்பணிப்பாளர்



திரு.எஸ்.சுப்பிரமணியம் பேசுகையில், 'யுத்தத்தில் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளுக்கு காலையில் உளவியல் சிகிச்சை அளிக்கப் போகின்றீர்கள். மாலையில் அப்பகுதியில் குண்டு வீச்சு மற்றும் எறிகணைத் தாக்குதல் நடத்தப்படுகிறது. அதனால் மீண்டும் அந்தக் குழந்தைகளின் மனநிலை பாதிக்கப்படுகின்றது. நீங்கள் அளிக்கும் உளவியல் புனர்வாழ்வு நடவடிக்கைகளினால் என்ன பயன் ஏற்படப் போகின்றது?' எனக் கேள்வியெழுப்பியதுடன், வன்னிப் பிராந்தியத்தில் வாழும் தமிழ் மக்களின் அவல நிலையையும் சுட்டிக்காட்டி, 'அடியொருபுறம் நடக்க, மறுபுறம் ஒத்தடம் கொடுப்பது' என்ற ரீதியில் தான் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் நிவாரணப்பணிகள் இடம் பெற்று வருகின்றன என்றும் கூறினார். முதலில் யுத்தம் நிறுத்தப்பட்டு அமைதிச் சூழ்நிலை ஏற்படவேண்டும் அதனை ஏற்படுத்துவதற்கான காரணிகளை அடையாளம் கண்டு, அதில் வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள் ஈடுபடவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை, மன்னார் அரச அதிபராகவிருந்து தற்போது வடக்கு கிழக்கு மாகாண சமூகசேவைகள் திணைக்களப் பணிப்பாளராகப் பணிபுரியும் திரு.எஸ்.எம்.குறூஸ் தனது பேச்சில் எழுப்பிய கேள்விகள் அனைவரின் சிந்தனையையும் கிளறுவதாக அமைந்திருந்தன. யுத்தகளத்தில் வாழுகின்ற குழந்தைகளின் உணவுத் தேவையை நாம் பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் உள்ளோமா?; வடக்கு கிழக்கில் குழந்தைகளுக்கு எவ்வாறான உணவு கிடைக்கிறது என்பது எங்களுக்குத் தெரியாது. அக் குழந்தைகள் வெறும் உலர் உணவு நிவாரணத்தில் தானே உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள் என்று தெரிவித்த திரு.குறூஸ், ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் 90 சதவீதமான மூளை வளர்ச்சி அவர்களுக்கு வழங்கப்படும் உணவில்தான் தங்கியுள்ளது. அவ்வாறு கொடுக்காமல் 5வயதுக்குப் பின்னர் அவர்களுக்கு எவ்வளவு உணவு வழங்கப்பட்டாலும் அது அவர்கள் 5வயதுக்கு முன்பு இழந்த மூளை வளர்ச்சியைத் திரும்பப் பெற்றுக் கொடுக்கப்போவதில்லை என்ற யதார்த்தத்தையும் விளக்கினார்.

நோர்வே நாட்டின் குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பின் இலங்கை வதிவிடப்பிரதிநிதி திரு. குன்னர் அன்டர்சன் தனது பேச்சில், 'யுத்தத்தை நிறுத்துவது எமது கட்டுப்பாட்டுக்கு அப்பால் உள்ள காரியமாகும்' என்று தெரிவித்தார். நோர்வே அரசின் அனுசரணையுடன் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் சமாதானத் தீர்வைக்காணும் முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இச்சமயத்தில் திருமலையில் கடந்த ஞாயிறு நடந்த இந்நிகழ்வில் நோர்வே நாட்டின் குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பின் இலங்கை வதிவிடப்பிரதிநிதிக்கு தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள், நோர்வே. சமாதானத்தூதரின் கவனத்திற்குப் போகுமா? அதன் மூலம் யுத்த நிறுத்தம் ஒன்றைப் பிரகடனப்படுத்தும்படி அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்படுமா?

எவ்வாறாயினும், யுத்த நிறுத்தம் ஒன்றை அரசாங்கம் உடனடியாகப் பிரகடனப்படுத்த வேண்டிய அழுத்தம் ஒன்று, இந்நிகழ்வின் மூலம் நோர்வே நாட்டின் குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பின் இலங்கை வதிவிடப்பிரதிநிதி ஊடாக, அந்த நாட்டின் சமாதான தூதருக்கு அனுப்பப்பட்டதாகக் கூறக் கூடியதாக உள்ளது.

**(திருமலையில் இருந்து நாதன்)**

# பேச்சுவார்த்தை - இராணுவச் சமநிலை

## எதிர்காலம் ஒரு பார்வை

**பிரபல இராணுவ ஆய்வாளர் டி.சிவராம்**

பல மாதங்களுக்குப் பிறகு சிறீலங்கா படைத்துறையின் ஆலோசகர் ஒருவரைக் கொழும்பில் சந்திக்க நேர்ந்தது. உங்களுடைய ஆட்கள் வெற்றிக்களிப்பில் உள்ளனர்போல என்று அவரிடம் கேட்டேன். என்ன ஒன்றும் தெரியாதவர் போல் கேட்கின்றீர்கள்? எழுது மட்டுவாளுக்கு அப்பாலுள்ள அனைத்தையும் தரைமட்டமாக்கினால் கூட அப் பகுதியைக் கையில் வைத்திருக்கக் கூடிய ஆட்பலம் இவர்களிடம் (சிறீலங்கா படையினரிடம்) கிடையாது. ஜனாதிபதியால் கடுமையாக வற்புறுத்தப்பட்டாலே ஒழிய இவர்கள் தென்மராட்சியின் தெற்குப் பகுதியினுள் செல்லக் கூடிய நிலையில் இல்லை என அவர் அலுத்துக்



வேலுப்பிள்ளை பிரபாகரன்

கொண்டார்.

உண்மையில் புலிகளின் போர் நிறுத்த நீடிப்பு இவர்களுக்குப் பெரிய வரப்பிரசாதமாக இருக்கின்றது. இப்போது இவர்கள் மூன்று பட்டாலியன்களுடன் கிளாலி, எழுதுமட்டுவாள், நாகர்கோவில் எல்லையைப் பார்த்துக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. இதனால்தான் தற்போது ஆறு ஏழு ஆண்டுகளுக்குப் பின் படையினருக்கு மீள் பயிற்சியும் ஓய்வும் வழங்கக்கூடியதாக இருக்கின்றது. அத்துடன் படையணி மீள் ஒழுங்குகளையும் நிதானித்துச் செய்யக் கூடியதாக இருக்கின்றது என அவர் கூறினார். சிறீலங்கா படைத்துறையின் போரில் ஈடுபடும் பட்டாலியன் ஒன்றில், சராசரியாக 600-700 படையாட்கள் இருப்பர். அதாவது முன்னர் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட படையாட்கள் குவிக்கப்பட்டிருந்த நாகர்கோவில் முதல் கிளாலி வரையிலான எல்லைக்கோட்டில் தற்போது 2000 முதல் 2500 படையாட்களே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர் என்பது சிறீலங்கா படைத்துறையின் ஆட்பற்றாக்குறையைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

புலிகளின் போர் நிறுத்த நீடி-ப்பு, பேச்சுவார்த்தை என்பன போன்ற சண்டைகளற்ற கால இடைவெளி சிறீலங்கா படைத்துறைக்கு மிக அவசியமாக

தேவைப்பட்ட ஒன்று. செவ்வாய் கிழமையன்று சிறீலங்கா நாடாளுமன்றில் வரவு செலவுத் திட்டம் மீது உரையாற்றிய பொது ஜன ஐக்கிய முன்னணியின் மூத்த அமைச்சர் பட்டி வீரக்கோன் கூறிய விடயம் இங்கு கவனிக்கத்தக்கது. இவ்வாண்டு மீண்டும் சண்டை கிளம்பி மீண்டும் கொள்வனவுச் செலவு பெருகாவிட்டால், நாம் கடந்த ஆண்டு ஏற்பட்ட மூவாயிரம் - நாலாயிரம் கோடி செலவைத் தேசிய பாதுகாப்பு வரி அதிகரிப்பின் மூலம் ஓரளவு சமாளித்து விடுவோம். வேறு வழிகளை நாடத் தேவையில்லை என தனது உரையில் தெரிவித்தார் அவர்.

புலிகளுடைய ஒருதலைப் பட்சமான போர் நிறுத்தத்தை மிகத்துச்சமென மும்முறையும் நிராகரித்தது சிறீலங்கா அரசு.

முக்கிய இடங்களை மீட்டெடுக்க முயற்சிக்கவில்லை? இதற்கான விடையை அமைச்சர் பட்டி வீரக்கோனின் கூற்றிலும், அண்மையில் வெளிநாட்டுச் செய்தியாளர் ஒருவரிடம் ஒரு சிறீலங்கா படையதிகாரி கூறியதிலுமிருந்து அறிந்து கொள்ளலாம். பயங்கரவாதத் தடைப்பட்டியலில் பிரிட்டன் புலிகளைப் போட்டுவிட்டதே அது உங்களுக்கு மகிழ்ச்சியாக இல்லையா? அது உங்களுக்குப் புது நம்பிக்கை தருவதாக இல்லையா? என ஒரு இந்தியச் செய்தியாளர் கேட்டார். தடைப்பட்டியல் சந்தோசப்படுவதற்குரிய விடயமல்ல. இங்கு வடக்குக் கிழக்கிலுள்ள கள நிலமைகளைத்தான் நாம் பார்க்க வேண்டும் என அந்த அதிகாரி செய்தியாளருக்கு அளித்த விளக்கம் இணையத்தில் வந்திருந்தது. பிரிட்டன் தடைப்பட்டியல் விடயம் சிஹல உறுமய தவிர தெற்கில் வேறு எவரிடமும் பெரிய வெற்றிக் களிப்பை ஏற்படுத்தவில்லை என்பது கண்கூடு. குறிப்பாக அரச தரப்பிலும் படைத்தரப்பிலும் இது பெரிய உசாரை ஏற்படுத்தாமைக்கு மூன்று காரணங்கள் உள்ளன.

1. வடக்குக் கிழக்கில் இன்று காணப்படும் போர்ச் சமநிலை.
2. வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களிடையில் சிறிது சிறிதாக ஏற்பட்டு வரும் அரசியல் மறுமலர்ச்சி.
3. சர்வதேச பிராந்திய அரசியல் முரண்பாடுகள் பற்றி சிறீலங்கா அரசிடம் சிறிது சிறிதாக ஏற்பட்டு வரும் காலம் கடந்த புரிதல்.

வடக்குக் கிழக்கில் உள்ள தற்போதைய போர் நிலவரத்தை முதலில் பார்ப்போம். இங்கு முக்கியமான விடயம் என்னவென்றால் அரசுக்கும் புலிகளுக்குமி

மாகாணத்தை வடக்குடன் இணைப்பதானால் அப் பகுதியில் சர்வ) ஜன வாக்கெடுப்பு நடாத்த வேண்டும் என்றெல்லாம் ஐக்கிய தேசியக் கட்சி அரசும், சந்திரிகா அரசும் நீண்டகாலமாகக் கூறி வந்துள்ளன. 1984ல் மணலாற்றிலிருந்து சிறீலங்கா படைகளால் இரவோடிரவாக விரட்டியடிக்கப்பட்ட தமிழ் மக்களை மீளக்குடியேற்றிட வேண்டுமென இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் பின் புலிகள் கோரி



சந்திரிகா குமாரதுங்கா

-க்கை விடுத்ததும் முல்லைத்தீவு கச்சேரிக்கு முன் அம்மக்கள் அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டதையும் நீங்கள் அறிவீர்கள்.

மணலாறு தம் படைகளிடமிருந்ததால் அவ் விடயத்தில் விடாப்பிடியாக நின்றது ஜே.ஆர். அரசு. இதில் இந்தியா கபட நாடகம் ஆடியது. மணலாறு

ணியை மையப்படுத்திய ஒரு விரிவாக்கல் திட்டத்தில் சிறீலங்கா படைகள் சந்திரிகா அரசின் ஆசியுடன் ஈடுபட்டதை நீங்கள் அறிவீர்கள். ஆனால் இன்றுள்ள நிலையில் மணலாற்றைத் தமது தாயகத்தின் ஒருமைப்பாட்டிற்கு எதிரான ஒரு துருப்புச் சீட்டாக எந்தப் பேச்சு வார்த்தையிலோ திட்டமிடலிலோ சிறீலங்கா அரசு பயன்படுத்த முடியுமா என்பது கேள்விக்குறியே.

இன்று மணலாற்றின் பெரும் பகுதி புலிகளின் கட்டுப்பாட்டினுள் உள்ளது. மீதி இடங்களைத் தக்க வைத்துக் கொள்வதற்காகத் திருமலையிலிருந்து அவசர அவசரமாக 2-2 டிவிசன் 1999ம் ஆண்டு பிற்பகுதியில் மணலாற்றுக்கு நகர்த்தப்பட்டது தெரிந்ததே. இந்த டிவிசன் ஆட்தொகை குறைந்த ஒரு படையணி. இடையில் அங்கு புலிகள் கைப்பற்றிய பகுதி ஒன்றினுள் ஒரு சிறு படை நடவடிக்கையை மேற்கொள்ள முயன்று அதிலும் தோல்வியடைந்து திரும்பியது சிறீலங்கா படைத்துறை. இந்த வகையில் யாழ்ப்பாணத்தை விடவும் மணலாற்றில் பெரும் பகுதியைப் புலிகள் தம் கைக்குள் வைத்திருப்பதானது தமிழ் மக்களுடைய தாயகம் பற்றிய நியாயமான அபிலாசைகளுக்கு முக்கியமாக அமைகின்றது என அண்மையில் ஒரு தமிழ் கட்சிப் பிரதிநிதி என்னிடம் பேசும்போது குறிப்பிட்டார். அடுத்ததாக யாழ். குடாநாட்டின் பாதுகாப்பு என்பது இன்னும் எந்த வகையிலும் உறுதிப்படுத்தப்படவில்லையென சிறீலங்கா படைத்துன்ற திட்டமிடலாளர்கள் கூறுகின்றனர். குடாநாட்டின் பாதுகாப்புக்கு இன்றியமையாத கேந்திர நுழைவாயில்கள் மூன்று.

ஒன்று ஆனையிறவு, இரண்டு கட்டைக்காடு - வெற்றிலைக்கேணி, மூன்று கேரதீவு - சங்குப்பிட்டி. இந்த மூன்றும் இன்னும் புலிகளின் பிடியிலேயே உள்ளன. இவை மூன்றும் தன்கையில் இல்லாதவரை வன்னியிலிருந்து மீண்டும் கிளம்பிடக்கூடிய ஆப-த்தை எதிர்கொள்வது கடினமாகவேயிருக்குமென சிறீலங்கா

(தொடர்ச்சி 26-ம் பக்கம்)

**இன்றுள்ள நிலையில் மணலாற்றைத் தமது தாயகத்தின் ஒருமைப்பாட்டிற்கு எதிரான ஒரு துருப்புச் சீட்டாக எந்தப் பேச்சு வார்த்தையிலோ திட்டமிடலிலோ சிறீலங்கா அரசு பயன்படுத்த முடியுமா என்பது கேள்விக்குறியே.**

**இன்று மணலாற்றின் பெரும் பகுதி புலிகளின் கட்டுப்பாட்டினுள் உள்ளது.**

புலிகளுக்கு எதிராகப் போரைத் தொடர்வதில் எந்தவிதத் தங்கு தடையும் இருக்காது என அது சிங்கள மக்களிடம் கொக்கரித்தது. அப்படியானால் ஏன் சிறீலங்கா அரசு பளையை நோக்கி முன்னேற முற்படவில்லை. ஏன் மணலாற்றில் ஓயாத அலைகள்-3 இன் போது புலிகளிடம் இழந்த

டையில் பேச்சுவார்த்தை தொடங்குவதாக வைத்துக் கொள்வோம். அதில் முக்கியமாக இருக்கப் போவது வடக்குக் கிழக்குத் தமிழர்களின் தாயக அலகு என்பதில் ஐயமில்லை. இதுகாலவரையும் வடக்கு வேறு, கிழக்கு வேறு இரண்டையும் தற்காலிகமாகவே இணைத்துள்ளோம், கிழக்கு

தன் கையில் இருக்கும் வரை போரின் மூலமோ, பேச்சு வார்-த்தை மூலமோ தமிழர் தம் தாயத்தை முழுமையாகப் பெற்றிட முடியாது என்பது சிறீல-ங்கா அரசின் எண்ணமாகவே இருந்து வந்துள்ளது. மணலாற்றில் தன் பிடியை மேலும் பலப்படுத்தும் நோக்குடன் நெடுங்கே

# சிங்களத்தின் திட்டமிட்ட இன அழிப்பிற்கு பலிக்கடாவாகும் பெண்கள்

உலகில் விடுதலைப் போராட்டம் நடைபெறும் நாடுகளில், அம் மக்களின் தேசிய அபிலாசைகளை ஒடுக்குவதற்கும் அந்த இனத்தினுடைய பண்பாட்டு தளத்தினை சீரழிப்பதற்கும் அந்நாட்டு இராணுவமானது விபச்சாரத்தையும், போதைவஸ்தையும், சட்டவிரோத மதுபான உற்பத்தியையும் ஆயுதமாகப் பிரயோகிப்பதையும், இச் செயற்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு அடிமட்ட சிப்பாய் முதல் உயரதிகாரிகள் வரை நேரடியாகவும், மறைமுகமாக ஆதரவும் ஊக்குவிப்பும் வழங்கிவருவது வரலாற்றில் நாம் கண்ட உண்மை.

ஒரு சமூகத்தினுடைய கட்டுக்கோப்புக்கள்தான் அதன் பண்பாடு. அந்தப் பண்பாடுதான் அவ்வினத்தினுடைய அடையாளம். அந்த பண்பாட்டு அடையாளத்தை சிதைப்பதையே இன்று சிறீலங்கா அரசு தனது இலக்காக கொண்டுள்ளது. இன்று சிறீலங்கா இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பகுதிகளில் தமிழர்களுடைய பண்பாட்டுத் தளத்தினை திட்டமிட்டு அழிப்பதில் மிகவும் முனைப்புடன் சிறீலங்கா அரசு செயற்படுத்தி வருவதை பல்வேறு அணுகுமுறைகளுடாக அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அந்தவகையில் பெண்கள் மீதான பாலியல் தொந்தரவுகளும், கெடுபிடிகளும், அழுத்தங்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருப்பதை நாம் அன்றாடம் காணக்கூடியதாக இருக்கின்றது. பெண்கள் மீதான ஒடுக்குமுறைகளுக்கு எதிரான விழிப்புணர்வை தேச விடுதலையின் எழுச்சி ஒரு பகுதியில் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற வேளையில், இன்னொரு பகுதியில் சிறீலங்கா அரசினுடைய இந்த சீரழிப்புப்போர் பெண்கள் மீதான ஒடுக்குமுறையை பலமடங்கு அதிகரித்து வருவதுடன், ஒடுக்குமுறையின் இன்னுமொரு பரிமாணத்தையும் தோற்றுவித்து நிற்கின்றது.

இதனால் பெண் தன்னுடைய ஆளுமையை இழந்து போவது மட்டுமல்லாமல், தன்னைத் தானே ஒடுக்கிக் கொள்கின்றாள்.' இந்தக் கெடுபிடிகளும் கொடுமைகளும் இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள கிராமங்களிலும், முகாம்களிலும் தினம்தினம் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இதனால் பெற்றோர் தமது பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து பெரும் அச்சமடைந்துள்ளனர். அந்த அச்சத்தின் விளைவுதான், தமது பிள்ளைகளை பாதுகாக்க சின்னவயதிலேயே திருமணம் என்ற பெரும் சுமையைப் பல பெற்றோர்கள் பிள்ளைகள் மீது சுமத்திவிடுகின்றனர். இதனால் அவர்கள் தமது கல்வியை இழப்பதுடன், தமது எதிர்காலம் குறித்த தெளிவற்ற நிலையுடனும், குழப்பங்களுடனும் வாழ்க்கையை நகர்த்துகின்றனர். தன்னுடைய சுயம் பற்றி சிந்திக்க முடியாதபடி இன்று சிறீலங்கா அரசும் அதன் கூலிப்படையும் மிகவும் கனகச்சிதமாக திட்டமிட்டு தமிழ்ப் பெண்களை படுகுழியில் தள்ளிக் கொண்டிருக்கின்றது.

இது மட்டுமல்ல, சிறீலங்கா அரசும் அதன் இராணுவத்தினரும் திட்டமிட்ட ரீதியில் இன்னும் சில நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். சுற்றுப்புற சூழலில் வசிக்கின்றவர்களிடம் காணப்படும் பொருளாதார நெருக்கடி, குடும்பப் பிளவு, விதவைகள், மிகைப்பால் உணர்ச்சியுடையோர், இளம் பருவத்தினர்.

போன்ற காரணிகளை ஆராய்ந்து, இவ்வாறான தாக்கங்களுக்கு உட்பட்டிருப்பவர்களை அடையாளம் கண்டு, அப்பகுதிகளில் சிறியளவிலான இராணுவ முகாம்களை அமைந்து, அவர்களுக்கூடாகவும் தமது எண்ணத்தை செயற்படுத்துகின்றனர். இவ்வகையில் பொருளாதாரத்தில் அடிமட்டதில் உள்ள குடும்பத்திலுள்ள பெண்ணைத் திருமணம் செய்தல் [அல்லது வைத்திருத்தல்], விதவைகளுக்கு உதவுவதாகக் கூறி அப்பெண்களையும் பொருளாதார உதவி என்ற ரீதியில் தங்களுக்குள் வைத்திருத்தல். இதனூடாக நீண்டகாலத் திட்டத்தில் கலப்பின சந்ததி என்ற தோற்றப்பாட்டை உருவாக்குதல் போன்றவையாகும்.

இத்திட்டம் தேசியத் தனித்துவத்துக்காக போராடுகின்ற இனத்தையே இல்லாதொழிப்பதாகும். இவற்றில் மிகைப்பால் உணர்ச்சி கொண்டவர்கள் பற்றி நாம் இன்னுமொன்றை உன்னிப்பாகக் பார்க்க வேண்டியுள்ளது. இந்நிலமை இயல்பாக உள்ளவர்களும் இருக்கின்றார்கள். ஆனால், இங்கு நாம் பார்க்கப்போவது முதல் குறிப்பிட்டவர்களை. அண்மையில் மட்டக்களப்பு நகரப் பாடசாலை மாணவியொருத்தி பாடசாலை விட்டுச் சைக்கிளில் செல்லும் போது சைக்கிளில் இருந்து பாடப்புத்தகங்கள் தவறி விழுந்துவிட்டன. அதனை ஒருவர் எடுத்தபோது அதற்குள் ஆபாசப் படங்கள் இருந்திருக்கின்றன. இதற்கு அம் மாணவி தனக்கு இப்படங்களைத் தந்தது பொலீஸ் நண்பர் எனக் கூறியுள்ளார். பாடசாலை செல்லும் தமிழ்ப் பெண்களையும் இளம் பருவத்திலுள்ள பெண்களையும் சிறீலங்கா அரசபடைகள் எவ்வாறு பயன்படுத்துகின்றனர் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. இவைகளுக்கப்பால் அநேகமாக இராணுவ முகாமை சூழவுள்ள வீடுகள், சிறீலங்காப் படைகளாலும் அதிகார மட்டத்திலுள்ளவர்களாலும் விபச்சார விடுதிகளாக மாற்றப்படும் அபாயமும் இருந்து கொண்டுதானிருக்கின்றது என்பதும் மறுப்பதற்கில்லை. காரணம் இன்று மிகைப்பால் உணர்ச்சி கொண்ட ஏராளமானவர்கள் தங்களையறியாமலே இராணுவத்தின் இந்த வலைக்குள் சிக்கிப் போயுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கப் போனால், சிறீலங்கா அரசும் அதன் படைகளும் தமிழ்த் தேசிய இனத்தின் பண்பாட்டு அடையாளங்களை அழித்தொழிப்பது மட்டுமல்லாது இவைகளுக்கூடாக போராடுகின்ற இனத்தில் சிதைவுகளை ஏற்படுத்தி முற்றாக அழிப்பது, அல்லது இனத்துவத்தை இல்லாமல் செய்வதே திட்டம். இதற்கு தங்களையறியாமல் இவ்வலையில் சிக்கியுள்ள பல பெண்களும் காரணமாகின்றனர். தாங்கள் பலிக்கடாக்கள் ஆக்கப்படுவது தெரியாமலே இன்று தமிழ்ப் பெண்கள் சிலர் உள்ளனர் என்பதுதான் பரிதாபகரமான நிலையாக உள்ளது. இந்நிலையை தடுக்க அனைவரும் சமூக விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டியது மிகவும் அவசியம்.

(மட்டக்களப்பில் இருந்து ஜசீகரன்)

# ரஹ்மான் வானம் நான் கைக்குட்டை

## — ஹரிஸ் ஜெயராஜ் —




**ஏ.ஆர். ரஹ்மான் போல் இன்னொரு இசையமைப்பாளர் என தமிழக திரைப்பட வட்டாரங்களில் பேசப்படுகிறார், 24 வயதே நிரம்பிய ஹரிஸ் ஜெயராஜ். தனது இசையமைப்பில் வெளியான 'மின்னலே' திரைப்படப் பாடல்களின் ஒலிநாடா ஒருவார காலத்தில் இரண்டரை இலட்சம் வரை விற்றுத்தீர்ந்துவிட்ட மகிழ்வோடு இருக்கும் ஹரிஸ், சாமுராய், மஞ்னு, 12B போன்ற படங்களுக்கு இசையமைத்துக் கொண்டிருக்கிறார். அவர் ஆறாம் திணைக்காக தனது அனுபவங்களை பகிர்ந்து கொண்டதில் இருந்து...**

✪ **நீங்கள் இசைத்துறையில் நுழைந்தது எப்படி?**

➲ என் அப்பா ஜெயக்குமார் ஒரு 'கிட்டாரிஸ்ட்' பிரபல இசையமைப்பாளர்களிடமெல்லாம் 'கிட்டார்' வாசித்துக்கொண்டிருந்தார். என்னை சின்ன வயதிலேயே இசைத்துறையில் ஈடுபடுத்தியது அவர்தான். ஒரு பெரிய 'கிட்டாரிஸ்ட்டாக' நான் வரவேண்டும் என்பது அவரது ஆசை. அதன் விளைவாகத் தொடங்கிய என் இசைப்பயணம் தொடர்ந்து நடந்தது.

மாஸ்டர் அப்துல் சத்தாரிடம் பயிற்சி பெற்றேன். மேற்கத்திய இசைப் பயிற்சிக்காக லண்டன் 'ஸ்காலர்ஷிப்' எனக்குக் கிடைத்தது. 'டிரினிட்டி மியூசிக் காலேஜ் ஆஃப் லண்டனில்' நான் எட்டாவது தரத்தை முடித்தபோது, எனக்கு பதினாறு வயசுதான். இந்தியாவிலேயே சின்ன வயதில் 8வது தரத்தை முடித்தவன் என்ற பெயர் கிடைத்தது பெரிய சந்தோசம்! பிறகு ரஹ்மான் உட்பட பல இசையமைப்பாளர்களிடம் கீபோர்டு வாசித்து, இப்போது திரைப்படத்தில் இசையமைக்கிற நிலைக்கு வந்திருக்கிறேன். இதுதான் இன்றைய திகதி வரைக்குமான என் சுருக்கமான விபரம்.



✪ **நீங்கள் திரைப்படத்தில் நுழைந்த வேகத்திலேயே இவர் இன்னொரு ரஹ்மான் என்கிற விதமாக உங்களைப் பற்றிய பேச்சுக் கிளம்பிவிட்டது. இந்த எதிர்பார்ப்பை எப்படி எதிர்கொள்ளப் போகிறீர்கள்?**

➲ என்னை ரஹ்மானோடு ஒப்பிடவேண்டாம். அவர் வானம் என்றால், நான் கைக்குட்டை மாதிரி. இன்னும் நிறைய வளரவேண்டும். இந்தத் தருணத்தில் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். எவருக்கும் நான் போட்டியாக இந்தத் துறைக்குள் வரவில்லை. ஆனால், 'இது என் பாதம், என் பாதை, என் பயணம்' என்று இசைத்துறையில் நீண்ட தூரம் நடைபோட விரும்புகிறேன். இறைவன் எனக்கென்று எதை முடிவுசெய்து வைத்திருக்கிறானோ அதெல்லாம் நிச்சயம் நடக்கும். இதில் என் முடிவு ஒன்றுமில்லை என்று நான் அமைதியாக இருக்கிறேன்.

*சந்திப்பு: சுரேசன்*

✪ **இன்றைய இசையமைப்பாளர்களிடமிருந்து நீங்கள் எப்படி வேறுபட்டு, உங்களது தனி அடையாளத்தை நிலைநிறுத்தப்போகிறீர்கள்?**

➲ இதுவரையில் அப்படிப்பட்ட ஒரு முடிவான திட்டமெல்லாம் எதுவும் என்னிடம் இல்லை. இருந்தாலும், என் பாணி தனியாக இருக்கும் என்று திடமாக நம்புகிறேன். எல்லோர் ரசனையையும் சுண்டியிழுக்கக்கூடிய நல்ல இசைதான் என்னுடைய அடையாளமாக இருக்கவேண்டும் என்றும் விரும்புகிறேன். என்னுடைய இரண்டு மூன்று படங்கள் வெளிவந்தால், என் தனி முத்திரை எல்லோருக்கும் தெரியவரும்.

✪ **எம்.எஸ்.வி. இளையராஜா-இவர்களின் சங்கீதம் ஆர்மோனியத்தில் இருந்து பிறந்தது. ஏ.ஆர். ரஹ்மான் மற்றும் உங்களது இசையெல்லாம் கீ போர்டில் இருந்து பிறக்கிறது. ஆர்மோனியத்துக்கும் கீ போர்டுக்கும் இடையில் அப்படியென்ன வித்தியாசம்?**

➲ இரண்டுக்கும் எந்த வித்தியாசமுமில்லை. ஆர்மோனியம் வாசிக்கும்போது கை வலிக்கும். ஒரு கையால் வாசித்துக்கொண்டே, இன்னொரு கையால் 'பெர்லோஸ்' போட வேண்டும். கீ போர்ட்டில் இரண்டு கையாலும் ஜாலியாக நின்றுகொண்டே கூட வாசிக்கலாம். கொஞ்சம் சீரியசாக யோசித்தால், எனக்கு இப்படித் தோன்றுகிறது. கீபோர்டில் மெட்டுச் செய்தால், அதற்குரிய தன்மையையும் அதிலேயே தெரிவுசெய்து பார்த்து விடலாம். ஒரு பாடலின் முன் கூட்டியே முகம் ஓரளவுக்கு நமக்குத் தெரிந்துவிடும். இதுதான் ஆர்மோனியத்தை விடவும் கீ போர்டில் உள்ள ஒரு வசதி. மற்றபடி, இசைக்கு இதயம்தான் முதல் முக்கியமே தவிர, ஆர்மோனியமோ, கீ போர்டோ அல்ல.

✪ **உங்கள் 'மின்னலே' ஒலிநாடா வெளியான போது எப்படி உணர்ந்தீர்கள்?**

➲ மிகவும் சந்தோசமாக உணர்ந்தேன். பதினைந்து நாட்களில் அந்த ஒலிநாடா உலகம் முழுவதும் 2 1/2 இலட்சம் விற்றிருப்பதாக தகவல் வந்திருப்பது, எனக்கு இன்னும் கூடுதல் மகிழ்ச்சியே அளிக்கிறது. 'மின்னலே' பாடல்களை நான் இப்போது கேட்கும்போது, எனக்கு அதில் 75 சதவிகிதம்தான் திருப்தி. என் அடுத்த ஒலிநாடாவில் இன்னும் என் சதவிகித திருப்திக்காகவும் சேர்த்து உழைக்கப்போகிறேன்.

✪ **பொதுவாக இன்றைய இசையமைப்பாளர்கள் கடவுள் பக்தி நிறைந்தவர்களாக காட்சி தருகிறார்கள். அது ஏன் அப்படி? அதில் நீங்கள் எப்படி?**

➲ நானும் அந்தப் பாதையில் நடப்பவன்தான். கடவுள் பக்திதான் என்னை அமைதியாக இருக்க வைக்கிறது. 'எல்லாம் கடவுள் செயல்' என்று என் வேலையை செய்யும்போது மனதில் வீண் குழப்பம் வராது. அதில் ஒரு நிம்மதியை உணர முடிகிறது. எல்லாம் நான் என்று நினைத்தால்தான் கஷ்டம். எனவே உடவுன் பக்தி என்பது இசையமைப்பாளர்களுக்கும் தேவையான விஷயம்தான்.

*பதினைந்து நாட்களில் அந்த ஒலிநாடா உலகம் முழுவதும் 2 1/2 இலட்சம் விற்றிருப்பதாக தகவல் வந்திருப்பது, எனக்கு இன்னும் கூடுதல் மகிழ்ச்சியே!*

✪ **உங்களை வியக்க வைத்த இசையமைப்பாளர்கள் உண்டா?**

➲ நிச்சயமாக உண்டு. ஹாலிவுட்டில் ஹேன் சிம்மர், ஒரியாக்காரர் சலீல் சௌத்ரி, இந்தியில் ஆர்.டி.பர்மன், நம்மூரில் எம்.எஸ்.வி., இளையராஜா, ஏ.ஆர். ரஹ்மான் இவர்களெல்லாம் என்னைக் கவர்ந்த இசையமைப்பாளர்கள். இவர்கள் எல்லோர் இசையிலும் இருக்கும் நுட்பமான தனித்தன்மை என்னைத் தலை உயர்த்தி பிரமிக்க வைக்கிறது.

# புத்திசிகாமணி பதில்கள்

★ சந்திரிகா அம்மையாரின் திடீர் வெளி நாடுகளுக்கான பயணங்களின் நோக்கம் என்னவாயிருக்கும்?

*க.சந்திரன் – விம்பிள்டன், பிரித்தானியா.*

❢ வேறென்ன இரண்டு மன்றாட்டங்கள். ஒன்று, தனது எசமானர்களைப் போல நீங்களும் புலிகளைத் தடை செய்வீர்களாக... இரண்டு; போரின் விளைவால் செத்துப்போய்விட்ட எமது தேசத்திற்கு கொஞ்சம் உயிர் கொடுப்பீர்களாக...

★ இலக்கியவாதிகளிடையே எப்பொழுதும் மோதல்கள் இடம் பெற்றுக்கொண்டேயிருப்பதற்குக் காரணம் என்ன?

*சி.பாலன் – கேளின், ஜேர்மனி.*

❢ கருத்து மோதல்கள் என்பது தவிர்க்க முடியாதது. அது தேவையும் கூட. கருத்து மோதல்களில்த்தான் புதிய கருத்துக்கள் உருவாக முடியும். ஆனால் அதுவே தனி நபர் தாக்குதலாகவும், அடி தடிகளாகவும் மாறும் போது, ஆரோக்கியமான இலக்கியச் சூழலுக்கும் தேடலுக்கும் அது ஆபத்தாகிவிடும்.

★ புலிகள் சமாதானம்... சமாதானம்... என அமைதித்தீர்வுக்காய் தொடர்ந்து குரல் எழுப்பிக்கொண்டிருக்கின்ற இந்த வேளையில் சந்திரிகா அரசு தொடர்ந்தும் போர்... போர்... எனக் கூச்சலிட்டுக் கொண்டிருக்கிறதே. இதன் எதிர்கால விளைவு எப்படியிருக்கும்?

*க.கஜன் – சுக், சுவிஸ்.*

❢ காலம் கடந்து.. ஞானம் பிறந்து..., சந்திரிகா அரசு சமாதானம்... சமாதானம்... என புலிகளை நோக்கி அழைப்பு விடுகின்றபோது, அவர்கள் தங்கள் இலட்சியத்தை நோக்கிய உறுதியான மிக உக்கிரமான போரை தமிழீழப் பகுதியெங்கும் நடத்திக்கொண்டிருக்கக் கூடும் என எண்ணுகிறேன்.

★ மீண்டுமொரு ஆயுதப்பேர ஊழல் விவகாரம் இந்தியாவை உலுக்கியுள்ளதே. இதனால் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவானவர் எனக் கருதப்பட்ட ஜோர்ஜ் பெர்னாண்டசும் இராஜினாமா செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதே. இதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

*தி.தனபாலன் – வெஸ்ட்வாலன், ஜேர்மனி.*

❢ நடைபெற்ற ஊழல் விவகாரத்துடன் ஜோர்ஜ் பெர்னாண்டசுக்கு எந்தத் தொடர்பும் இல்லாத நிலையிலும் துரதிர்ஷ்டவசமாக நடந்த அவரது இராஜினாமா ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை கவலைக்குரியதே. ஆனால் ஊழல் என்பது இந்தியாவைப் பொறுத்தவரை காலத்திற்குக் காலம் நடைபெறும் ஒரு வாடிக்கை நிகழ்வாகிவிட்டது. இதில் வேடிக்கையென்னவென்றால், தமிழகத்தில் ஊழல் சாம்ராச்சியத்தை நடத்தி சாதனை படைத்த ஜெயலலிதா அம்மையார் விழுந்தடித்துக் கண்டன அறிக்கை வெளியிட்டிருப்பதுதான்.

★ ஆப்கானிஸ்தானில் உள்ள புத்தர் சிலைகளையெல்லாம் பொறுப்பெடுத்து பராமரித்துக் காக்க தங்களால் முடியுமென சிறீலங்காவின் பிரதமர் குறிப்பிட்டிருந்தாரே. இது பற்றி தமாஷாக ஒருபதில் சொல்வீரா புத்திசிகாமணி யாரே?

*செ.நந்தன் – நொயிஸ், ஜேர்மனி*

❢ 'கோவணத்தோட இருக்கின்ற ஆண்டி, அடுத்த வீட்டுக் காரனுக்கு கோட்டை கட்டிக்கொடுக்கப் புறப்பட்டாண்டி'!

★ ஐரோப்பாவில் இறைச்சியுணவுக்கான கால்நடைகளுக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தினைப் பற்றி சற்றுக் கூறுவீர்களா?

*சி.ராகவன் – லியோன், பிரான்ஸ்.*

❢ முன்னர் மாடுகளுக்கு, மாட்டுப் பைத்தியநோய்' வந்தது போலவே தற்போது 'மவுத் அன் பூட்' [Mouth and Foot] என்னும் காய்ச்சல், கால்நடைகளை விரைந்து தாக்கி வருகிறது. பிரித்தானியாவில் தொடங்கி ஐரோப்பா எங்கும் மாடு, ஆடு, பன்றியென பல்லாயிரக்கணக்கான கால்நடைகளைத் தாக்கியுள்ள இந்நோயினால் பல்லாயிரம் கால்நடைகள் அழிக்கப்பட்டுள்ளன. முடிந்தளவுக்கு இறைச்சியுணவுகளை தவிர்த்துக்கொள்ளுதலே நல்லது. குறிப்பாக குழந்தைகளுக்கு இறைச்சியுணவுகளை கொடுப்பதை தவிர்த்துவிடுங்கள். நோய் பிடித்த கால்நடை இறைச்சியின் தாக்கம் பலவருடங்கள் கழித்தும் வெளிப்படலாமல்லவா!

★ சிங்கப்பூரிலும் விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரிப்பது தடைசெய்யப்பட்டிருப்பதாக ஒரு செய்தி படித்தேன். உண்மைதானா?

*த.கமலன் – டுட்டிங். பிரித்தானியா.*

❢ இது புதிய செய்தியல்ல. எந்தவொரு விடுதலை இயக்கங்களுக்கும் நிதி சேகரிப்பதென்பது சிங்கப்பூர் சட்ட விதிகளின்படி ஏற்கனவே அங்கு தடைசெய்யப்பட்ட விடயமாகும்.

★ இனப்பிரச்சினையை சமாதானமான முறையில் தீர்த்து வைப்பதற்காக கூடுதலான நேரம் விமானத்திலேயே பறந்துகொண்டிருக்கும் நோர்வே தூதுவருக்கு, ஈழத்தமிழர்கள் நன்றியினைக் கூறிக்கொள்ளலாம் அல்லவா?

*இ.திலீபன் – பாரிஸ், பிரான்ஸ்.*

❢ கூறிக்கொள்ளலாம். ஆனால் இன்னும் கடக்கவேண்டிய தூரம் அதிகமிருக்கிறது. ஈழத்தமிழர்களுக்கு நியாயமான உரிமைகள் கிடைக்கும் வரையிலும் தூதுவர்களைப்படையாமல் இருக்கவேண்டுமே.

> இனப்பிரச்சினையை சமாதானமான முறையில் தீர்த்து வைப்பதற்காக கூடுதலான நேரம் விமானத்திலேயே பறந்துகொண்டிருக்கும் நோர்வே தூதுவருக்கு ஈழத்தமிழர்கள் நன்றியினைக் கூறிக்கொள்ளலாம் அல்லவா?

★ தென்பகுதியில் விடுதலைப்புலிகள் தாக்குதல் எதுவும் நடத்தக்கூடாது என நோர்வே தூதுவர் மூலமாக சிறீலங்கா அரசு புலிகளை கேட்டுக்கொண்டிருப்பதாக பத்திரிகைகளில் செய்தி படித்தேன். இதுபற்றி உங்கள் கருத்தென்ன?

*சி.ஜெயந்தன் – செங்காளன், சுவிஸ்.*

❢ தங்கள் மக்கள் எவரும் சாகக்கூடாது. ஆனால் வடகிழக்கில் உள்ள தமிழர்கள் எல்லாம் செத்துமடியலாம் என்பதுதான் சிறீலங்கா அரசின் இந்தப் பேரினவாத இனவெறிக் கோரிக்கையிலும் வெளிப்படுகிறது. புலிகளின் போர்நிறுத்தத்தை ஏற்றுக்கொள்ளாத இந்தக் கோரிக்கையில் 'என்னதான் நியாயம்' இருக்க முடியும்.

**கேள்விகளை அனுப்ப விரும்புபவர்கள்**
புத்திசிகாமணி பதில்கள்
**CHEZ EELAMURASU**
**22, Rue Perdonnet, 75010 Paris, France.**
அல்லது **E.Mail-eelamurasu@noos.fr**
**எனும் முகவரிக்கு அனுப்பவும்.**







TTN தமிழ் ஒளி நடத்தும்
மா பெரும்
இசை மழலைகள்
போட்டி நிகழ்ச்சி
இலைமறைகாய்களாய் ஒளிந்துகிடக்கும் எங்கள் சிறுவரின் இசைத்திறனிற்கு ஒரு களம்
U.K., Germany, France, Swiss, Norway, Denmark, Holland, Italy
என அனைத்து ஐரோப்பிய நாடுகளிலும் விரைவில் நடைபெறவுள்ளது
இசை மழலைகள்
போட்டி நிகழ்ச்சி
6 முதல் 14 வயதுவரையான சிறுவர்கள் மத்தியில் இரு பிரிவாக நடைபெறும் இப்போட்டியில் கலந்துகொள்ள தயாராகுங்கள்
போட்டியில் வெற்றிபெறும் சிறுவர்களுக்கு விலையுயர்ந்த பரிசுகள் உண்டு
விபரங்களுக்கும் விண்ணப்பப் படிவங்களுக்கும் உங்கள் நாடுகளிலுள்ள முகவர்களுடன் தொடர்புகொள்ளுங்கள்

திங்கள் முதல் வெள்ளி வரை
புதிய தொடர்
காலை 11.00 மணிக்கு
துளசி

25-03-2001 முதல்
மணிரத்தினத்தின் மட்ராஸ் டாக்கீஸ்
வழங்கும்
பஞ்சவர்ணம்

FRANCE
LUNE INTERNATIONAL
5, Rue Perdonnet, 75010 Paris
Tel. & Fax: 01 53 26 76 70

THAMILAYAM
19, Rue Cail, 75010 Paris
Tel: 01 53 26 59 21

ITALY
PEOPLE SHOP
VIA DABTE 218m 90141
PALERMO
Tel. & Fax: 00 39 091 6824056

GERMANY
TTN Germany
Leama Gmbh
Post Fach - 101030,
46010 Oberhausen
Tel: 01717561231

DENMARK
Mrs. SHANTHY
GRUNDTVIG VEG 681 TH
7400 HERNING
Tel. & Fax: 097 21 46 85/
Mobile: 022 45 72 19

NORWAY
THAINILAM KALAIYAGAM
POST BOKS 6678
RODELOKKA,
0502 OSLO
Tel: 99003154 (Kumar)

HOLLAND
SUNRISE IMPORT & EXPORT
ZOUTMANSTRAAT 23
2518 GL DEN HAAG
Tel. 062 915 1259 (NADES)
Fax: 070 35 10 19

SWITZERLAND
NEW MILLENNIUM COMPUTER & ELECTRONIC
Tellstr. 31, 8004 ZURICH
Tel. 00 41 1 240 25 08 /
Fax: 00 41 1 240 30 85

U.K.
TTN
South Bank House, Room No:445,
Black Prince Road,
London SE1 7SJ, U.K.
Tel: 02077934024 / 02074632160

TAMIL TELEVISION NETWORK தமிழ் தொலைக்காட்சி இணையம்
TTN - 5-7 Rue Emile Zola, 93120 La Courneuve, France. Tel: 01 48 39 34 29 Fax: 01 48 39 31 36

(23-ம் பக்கத் தொடர்ச்சி)

# பேச்சுவார்த்தை ...

படைத்துறை சரியாகவே எண்ணுகின்றது. ஆனால் ஆனையிறவைக் கைப்பற்றவோ அங்கு தேவையான படையாட்களை நிறுத்தி வைக்கவோ அதனிடம் மனித வளம்போதாது. அத்துடன் இப்படியானதொரு திட்டத்திற்குப் பட்டிவீரக்கோன் குறிப்பிட்டதுபோல சிறீலங்கா அரசிடமுள்ள பணமும் போதாது. மேலும் ஆனையிறவை நோக்கிய ஒரு படை நடவடிக்கையை முழு அளவில் அரசு தொடங்க, அதை ஒட்டிப் புலிகளும் தம் போர் நிறுத்தத்தைக் கைவிட்டு மீண்டும் முழு அளவிலான சண்டைகளில் இறங்கி விட்டார்களென வைத்துக் கொள்வோம். படையினரின் தற்போதைய மீள் பயிற்சி, படையணி மீள் ஒழுங்கு, வெளிநாட்டுப் பயிற்சி என்பனவெல்லாம் பாழாகிவிடும். போர் நிறுத்த நீடிப்பு ஓரளவு படையை விட்டு ஓடுபவர்கள் தொகையைக் குறைத்துள்ளது. இது மீண்டும் போர் தொடங்கினால் சண்டைகளின் உக்கிரத்திற்கு ஏற்ப ஓடுபவர்கள் தொகை கூடிவிடும். கிழக்கு, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் புலிகளின் கெரில்லாத் தாக்குதல்களிலும் வடக்கில் மரபு வழிச் சண்டைகளிலும் நிரந்தரக் காயம் படுபவர்களின் தொகையும் அதிகரிக்கும். இவ்வாறு ஏற்படக்கூடிய இழப்புகளைச் சரிக்கட்டும் அளவிற்குப் புலிகள் போர் நிறுத்தம் அறிவித்த நாளிலிருந்து இன்று வரை தேவையான ஆட்களைப் படையில் திரட்டவோ, ஓடிப் போனவர்களை மீண்டும் பிடித்தெடுக்கவோ சிறீலங்கா படைத்துறையால் இதுவரை முடியவில்லை. கடந்த வருடம் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்து 1999 டிசம்பரிலிருந்த ஆட்தொகைக்குச் சமமாகத் தமது படை வலுவைச் சிறீலங்கா படைத்துறையால் பெருக்க முடியாதுள்ளது. சிறீலங்கா படைத்துறையின் ஒரு முக்கிய படையணியாக இருந்து வந்த 54வது டிவிசன் ஆட்பற்றாக்குறை காரணமாக கலைக்கப்பட்டுள்ளது. இப்படியாக சிறீலங்கா படைத்துறை எதிர்கொண்டுவரும் சிக்கல்களை அடுக்கிச் சொல்லலாம்.

மேற்கூறிய இந்தியச் செய்தியாளரிடம் படை அதிகாரி கூறியதுபோல பிரிட்டனின் நடவடிக்கையால் களநிலமையில் பெரிய மாற்றம் வருமென சிறீலங்கா படைத்துறை எதிர்பார்த்து மகிழ்வதாக இல்லை. இந்த விடயத்தில் இரு வருடங்களுக்கு முன்னர் இளைப்பாறிய ஒரு சிறீலங்கா பாதுகாவல்துறை அதிகாரி கூறியதை இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். '1991' ஆண்டுவரை, தமிழகத்தில் பின்தளம் அமைத்து வெளிப்படையாகச் செயற்படக்கூடியதாக இருந்ததாலேயே புலிகள் வடக்குக் கிழக்கில் வலுவுடன் இயங்கி வருகிறார்கள் என நாம் திடமாக நம்பினோம். 1991 பின் தமிழகத்திலோ இந்தியாவிலோ புலிகள் காலடி கூட வைக்க முடியாத நிலை ஏற்பட்டபோதும், இந்தியக் கடற்படை நடவடிக்கையினால் கிட்டு இறந்தபோதும், இந்தியா புலிகளைத் தடை செய்தபோதும் பிரச்சினையின் 90 வீதம் முடிந்துவிட்டதாக நாம் எண்ணினோம். புலிகளால் இனி இயங்க முடியாது. படிப்படியாக அவர்களுடைய அமைப்புச் சுருங்கிப் போய் விடும் என எண்ணி எமது படைத்துறை மகிழ்ந்தது. ஆனால் பூநகரி மீது புலிகள் முதன் முறையாக ஒரு பெரும் மரபுவழித் தாக்குதலில் இறங்கினார்கள். அதன் பின்னர் அவர்களுடைய பலம் பெருமளவில் வளர்ந்துவிட்டது.

**இந்தியக் கடற்படை நடவடிக்கையினால் கிட்டு இறந்தபோதும் இந்தியா புலிகளைத் தடை செய்தபோதும் பிரச்சினையின் 90 வீதம் முடிந்துவிட்டதாக நாம் எண்ணினோம். புலிகளால் இனி இயங்க முடியாது. படிப்படியாக அவர்களுடைய அமைப்புச் சுருங்கிப்போய் விடும் என எண்ணி எமது படைத்துறை மகிழ்ந்தது.**

இதன் பின்னர் மீண்டும் அமெரிக்கா புலிகளைத் தடை செய்ததை பெரியதொரு விடயமாக நாம் எடுத்துக் கொண்டோம். உலக வல்லரசே புலிகளைத் தடை செய்து விட்டது இனி அவர்கள் படைத்தளபாடங்களை வன்னிக்குக் கொண்டுவர முடியாது மேற்கு நாடுகளில் பணம் சேர்த்து வன்னிக்கு அனுப்ப முடியாது எல்லாவற்றையும் உலக வல்லரசான அமெரிக்கா தனது செல்வாக்கைப் பயன்படுத்தி இல்லாமல் செய்து விடும். இதனால் வன்னியில் ஜெயசிக்குறுய் காரணமாக நெருக்கடிக்குள் இருந்த புலிகள் மேலும் பிரச்சினைக்குள்ளாகி வலுவிழந்துவிடுவார்கள் என எமது படைத்துறை மீண்டும் நம்பிக்கை கொண்டிருந்தது. ஆனால் நடந்ததென்ன? புலிகள் நாம் என்றுமே எதிர்பார்க்காதளவிற்கு வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் ஒன்றிணைக்கப்பட்ட பெரும் நடவடிக்கைகளில் இறங்கினார்கள். ஆகவே நாங்கள் முதலில் எமக்குள்ளேயே பார்க்க வேண்டியிருக்கின்றது' என அவர் கூறினார். அவரை மீண்டும் நான் சந்தித்தால், பிரிட்டன் தடை பற்றியும் இதுபோன்றதொரு கருத்தையே தெரிவிப்பார் என நினைக்கின்றேன்.


## உங்கள் ஜாதக குறிப்புக்கள் கைவசம் இல்லையா? கவலையை விடுங்கள்

கம்பியூட்டரின் உதவியுடன் நாங்கள் அவற்றைக் கணித்துத் தருகிறோம்.
உங்கள் பிறந்த திகதி, பிறந்த நேரம், பிறந்த இடம் இவை மட்டும் இருந்தால் போதுமானது.
பிறந்த நேரம் தெரியாதவர்களுக்கு நியூமரால்ஜி மூலம் எதிர்காலப் பலன்கள் கணித்துத் தரப்படும்.
உங்கள் குழந்தைகளின் ஜாதகக்குறிப்புக்கள், ஜாதகபலன்களை கணித்துக் கொள்வதற்கு நீங்கள் தொடர்பு கெள்ள வேண்டிய முகவரி

**Pega Star -Co Verleger**
**Mr. A. Thevaraj**
**Hasenberg str. 47**
**70176 Stuttgart/ Germany**
**Tel: 0049 + 711 - 6157028**
**Fax: 0049 + 711-6157030**
**E-Mail: theva@t-online.de**

ஜாதகக்குறிப்பு + ஜாதகப்பலன்கள் (15 பக்கங்கள்) கணித்துத் தருவதற்கு தபால் செலவு உட்பட தொகை 56 DM, 50 Swiss FR, 40 Ca $ மட்டுமே!

*படிவத்தை நிரப்பி அனுப்பவும்*

*Fullname:* ..................................................
*Date of Birth:*.................. *Time of Birth:*..............
*Place of Birth:* ..................................................
*Address:*..................................................
..................................................
*City/ Date:*..........................
*Signature*

Name: A. Thevaraj
Bank: Deutsche Bank Stuttgart
Konto Nr: 962056800 BLZ 60070024
Name: Antonippillai Thevaraj

Pub.Gr



அனைவருக்கும் **S.K.Trading** ஸ்தாபனத்தாரின் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

## நாதன் கடையினரின் புத்தாண்டு மலிவு விற்பனை

**இடம்: Kongress zentrum Salmem, Schlieren**
**காலம்: 08.04.2001 ஞாயிற்றுக்கிழமை / 09.04.2001 திங்கட்கிழமை**
**நேரம்: ஞாயிறு மதியம் 12.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை.**
**திங்கள் காலை 10.00 மணிமுதல் இரவு 8 மணிவரை.**

அனைத்து ரக புத்தம் புதிய சாறி வகைகள், பெரியவர் முதல் சிறியவர்களுக்கான பஞ்சாபி வகைகள், ஆண்களுக்கான சேட், டவுசர், சாரம், இவற்றுடன் வீட்டுத் தேவைக்கான Rice Cooker, சிமித், எவர் சில்வர் பாத்திரங்கள், அனைத்தும் எதிர்பார்த்ததை விட மிகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.



**வந்தடையும் வழி:**

Zürich பிரதான தொடருந்து நிலையத்தில் இருந்து Schlieren நோக்கிச் செல்லும் 31ம் இலக்க பஸ் கடைசித்தரிப்பிடம்.
**Uitikoner Str 17, 8952 Schlieren.**

தொடர்புகளுக்கு:

**S.K. TRADING**
**Gasometer Str -31, 8005 Zürich**
**01-2724336 / 079-4583831**

**S.K. TRADING**
**Josef Str -137, 8005 Zürich**
**01-2724330 / 079-402 7817**

# அமெரிக்காவை கண்டுபிடிக்க உதவிய இசபெல்லா!



அட்லாண்டிக்கைக் கடந்து பயணம் செய்வதற்கு கிறிஸ்டஃபர் கொலம்பசுக்கு பணவுதவியளித்த அரசியாகவே காஸ்டீல் பகுதியைச் சேர்ந்த முதலாம் இசபெல்லா அரசியைப் பற்றி இன்று பலருக்குத் தெரியும். அவர் திறமையும், ஆற்றலுமிக்க அரசியாவார். அவர் செய்த முக்கிய முடிவுகள் ஸ்பெயினையும் லத்தீன் அமெரிக்காவையும் பல நூற்றாண்டுகளாகப் பாதித்தன. அவை இன்று பல கோடி மக்களையும், மறைமுகமாகப் பாதித்துள்ளன.

அவர் தமது முக்கிய திட்டங்களைப் பற்றி தம்மைப்போன்று அறிவாற்றலும் திறமையுமுள்ள தம் கணவரான ராகான் பகுதியைச் சேர்ந்த பெர்டினாண்டைக் கலந்து பேசியே முடிவெடுத்தார். அவர் ஒத்துழைப்புடனேதான் அவற்றைச் செயல்படுத்தினார்.

1451-ம் ஆண்டில் இன்றைய ஸ்பெயினின் ஒரு பகுதியான காஸ்டீல் அரசியல் மாட்ரிகல் நகரில் இசபெல்லா பிறந்தார். அவர் கடுமையான சமயப் பயிற்சி பெற்றார். அதனால் சமயப் பற்றுள்ள கத்தோலிக்கராக வளர்ந்தார். அவருடைய சகோதரரான நான்காம் ஹென்றி 1454 முதல் காஸ்டீலின் அரசராக இருந்தார். 1474 இல் அவர் இறந்தார். அப்போது ஸ்பெயின் அரசு இல்லை. இன்றைய ஸ்பெயின் நிலப்பரப்பு நான்கு முடியரசுகளாகப் பிரிந்திருந்தது. காஸ்டீல் அவற்றுள் மிகப் பெரியது. ஆரகான் இன்றைய ஸ்பெயின் வட கிழக்குப் பகுதி கிரானடா தெற்கிலும் நவார் வடக்கிலும் இருந்தன.

1460 களின் இறுதிப் பகுதிகளில் காஸ்டீல் அரசின் வாரிசாக இருந்தார். ஆகவே பல இளவரசர்கள் அவரை மணம் புரிய விரும்பினர். அவருடைய சகோதரர் நான்காம் ஹென்றி அவர் போர்த்துக்கல் மன்னரை மணக்கவேண்டுமென்று விரும்பினார். ஆயினும் 1469 இல் இசபெல்லா தம் 18 ஆம் வயதில் ஹென்றி மன்னரின் எதிர்ப்பையும் பாராமல் ஆரகான் அரசின் வாரிசான பெர்டினாண்டை மணந்தார். இசபெல்லா தமக்குப் பணியாததைக் கண்டு சினங்கொண்ட ஹென்றி தம் மகளாகிய ஜுவானாவைத் தமக்கு வாரிசாக நியமித்தார். ஆயினும், 1474இல் ஹென்றி இறந்ததும், இசபெல்லா காஸ்டீல் அரசுக்கு உரிமை கொண்டாடினார். ஜுவானாவின் ஆதரவாளர்கள் இதை ஏற்க மறுத்தனர். ஆகவே உள்நாட்டுப் போர் மூண்டது. 1479இல் பெப்ரவரியில் இசபெல்லாவின் படைகள் வெற்றி பெற்றன. அதே ஆண்டில் ஆரகான் அரசர் 2ஆம் ஜான் இறந்தார். பெர்டினாண்டு ஆரகான் அரசரானார். அதன். பிறகு பெர்டினாண்டும் இசபெல்லாவும் ஸ்பெயினின் பெரும்பகுதியை ஆண்டனர்.

ஆரகான், காஸ்டீல் ஆகிய அரசுகளும் அவற்றின் அரசாங்க நிறுவனங்களும் தனித்தனியாகவே இருந்தபோதிலும், நடைமுறையில் பெர்டினாண்டும், இசபெல்லாவும் ஒன்று சேர்ந்தே எல்லாவற்றையும் தீர்மானித்தனர். தம்மாலியன்ற வரையில் ஸ்பெயினின் இணை அரசர்களாகச் செயலாற்றினர். அவர்களுடைய 25 ஆண்டு இணை ஆட்சி முழுவதும் ஒரு வலிமைமிக்க முடியாட்சியின் கீழுள்ள ஒருங்கிணைந்த ஸ்பானிய அரசை நிறுவுவதே அவர்களது அடிப்படைக்கொள்கையாக இருந்தது. கிரானடா மட்டும் இன்னும் ஐபீரியத் தீபகற்பத்தில் முஸ்லிம் ஆட்சியிலிருந்தது. அதைப் பிடிப்பதே அவர்களுடைய முதல் திட்டமாக இருந்தது. 1481இல் போர் தொடங்கியது. ஜனவரி 1492இல் அது முடிவடைந்தது. பெர்னாண்டும், இசபெல்லாவும் முற்றிலும் வெற்றி பெற்றனர். கிரானடா பிடிபட்டதும், ஸ்பெயின் ஏறக்குறைய இன்றுள்ள எல்லைப்பரப்பைப் பெற்றது.

பெர்டினாண்டும் இசபெல்லாவும் தமது ஆட்சியின் தொடக்கத்திலேயே ஸ்பானிய கடும் விசாரணை மன்றத்தை நிறுவினர். அம்மன்றம் ஒரு சமய நீதிமன்றமாகும். அது நீதிபதி, சான்று நடுவர், குற்றஞ்சாட்டும் வழக்குரைஞர், புலனாயும் காவலர் ஆகியோரின் அதிகாரங்களை ஒருங்கே பெற்றிருந்தது. அது கொடிய தண்டனைகளை வழங்கி, அநீதியான நடைமுறைகளைப் பயன்படுத்தும் மன்றமெனப் பெயர் பெற்றிருந்தது. குற்றம் சாட்டப்பெற்றோர் அதை மறுத்து வாதிட வாய்ப்புப் பெறவில்லை. அவர்களுக்கு எதிரான சான்றுகள் அனைத்தும், அவர்களைக் குற்றம் சாட்டுவோரின் பெயர்கள்கூட, அவர்களுக்கு அறிவிக்கப்படுவதில்லை. தமக்கு எதிரான குற்றச்சாட்டினை மறுத்தோர் அவற்றை ஏற்றும்வரை கொடிய சித்திரவதைக்குள்ளாயினர். ஸ்பானிய கடும் விசாரணை மன்றத்தின் முதல் 25 ஆண்டுகளில் மிகக் குறைந்த மதிப்பீட்டின்படி 2000 பேர் கம்பத்தில் கட்டப்பட்டு எரிக்கப்பட்டனர். அதைப்போல் பன்மடங்கு அதிகமான தொகையினர் குறைந்த தண்டனை பெற்றனர்.

பெர்டினாண்டும், இசபெல்லாவும் ஸ்பெயினிலுள்ள யூதர்கள் எல்லோரும் கிறிஸ்துவ மறையைத் தழுவ வேண்டும். இல்லையெனில் நான்கு மாதங்களுக்குள் தம் சொத்துக்களை விட்டுவிட்டு நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று ஆணை பிறப்பித்தனர்.

இசபெல்லாவின் ஆட்சியில் நிகழ்ந்த மிகவும் முக்கியமான நிகழ்ச்சி கிறிஸ்டோஃபர் கொலம்பஸ் புதிய உலகைக் கண்டுபிடித்ததுதான். அது 1492 ஆம் ஆண்டில் நடைபெற்றது. காஸ்டீல் அரசு கொலம்பசின் பயணத்திற்கு உதவியது.

1504 இல் இசபெல்லா இறந்தார். அவர் தம் வாழ்நாளில் ஒரு புதல்வனையும், நான்கு புதல்விகளையும் பெற்றார். 1497 இல் ஜுவான் எனும் மகன் இறந்தான். புதல்வியருள் புகழ் பெற்றவர் ஜுவானா. இவரை முதலாம் பிலிப்புக்கு மணமுடித்து வைத்தனர்.

உலக வரலாற்றில் கடந்த 2000 ஆண்டுகளுக்கு மேலாக மனித வாழ்வியலில் பல்வேறு மாறுதல்கள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த பிரசித்தி பெற்ற பலரது விபரங்கள் இத் தொடரில் வெளிவருகின்றன. மைக்கேல் ஹெரச் ஹார்ட் எழுதிய 'புதிய வரலாறு படைத்தோரின் வரிசைமுறை 100' என்ற நூல் மணவை முஸ்தபாவால் தமிழில் பதிப்புச் செய்யப்பட்டது. அதில் இருந்து தொகுக்கப்படுகின்றது.

## உலக வரலாற்றில் பதிவானவர்கள்

**ஸ்பானிய கடும் விசாரணை மன்றத்தின் முதல் 25 ஆண்டுகளில் மிகக் குறைந்த மதிப்பீட்டின்படி 2000 பேர் கம்பத்தில் கட்டப்பட்டு எரிக்கப்பட்டனர். அதைப்போல் பன் மடங்கு அதிகமான தொகையினர் குறைந்த தண்டனை பெற்றனர்.**

## நோயற்ற வாழ்வே...

- Dr. N. S. மூர்த்தி

### மார்பகப் புற்றுநோய் பரிசோதனை

பெருமளவு பெண்களின் மரணத்திற்கு காரணமாக தற்போது கருதப்படும் நோய் மார்பகப் புற்று ஆகும். கணக்கீட்டின்படி பன்னிரண்டு பெண்களில் ஒருவர் இந்நோயினால் தனது வாழ்நாளில் எப்போதாவது பாதிக்கப்படுகின்றார்கள். 50 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் இந்நோயை முன்கூட்டியே அறிந்து தகுந்த சிகிச்சை அளித்துக் கொள்வதற்கு மார்பகப் புற்றுப் பரிசோதனைகள் அவசியமாகின்றன.

மார்பகப் புற்று என்பது ஏனைய புற்று நோய்களைப் போலவே உடலின் கலங்களில் ஏற்படும் ஓர் அதீத வளர்ச்சியாகும். கலங்கள் அதிகளவு எண்ணிக்கையில் வளர்ச்சியடைந்து ஓர் கட்டியாக மாறுகின்றது. உரிய காலத்தில் இது அகற்றப்படாவிட்டால் அல்லது மட்டுப்படுத்தப்படாவிட்டால் ஏனைய பகுதிகளுக்கும் பரவுவதுடன் இறுதியில் மரணத்தையும் ஏற்படுத்திவிடும்.

பெரும்பான்மையான மார்பகக் கட்டிகள் பாதிப்பில்லாதவை அவை புற்றுநோய் கட்டிகளாக இருக்கவேண்டிய அவசியமில்லை.

பொதுவாக புற்றுநோய்க் கலங்கள் தாய்ப் பாலை வழங்கும் பாதைகளிலேயே உருவாகின்றன. வேறுசிலவகை மார்பகத்தின் ஏனைய பகுதிகளில் இருந்து ஆரம்பிக்கின்றன. பின்னர் இவை நிணநீர்கலங்கள், சுரப்புகள் எலும்புகள் போன்ற ஏனைய பகுதிகளுக்கும் பரவுகின்றன.

மார்பகப்புற்றுக்கான அடிப்படைக் காரணிகள் இன்னும் சரியாகக் கண்டறியப்படவில்லை. சிலரில் பரம்பரை ஓர் காரணியாகக் காணப்படுகின்றது. வயதைப் பொறுத்தவரை 70 வீதமான மார்பகப் புற்றுநோய் 50 வயதுக்கு மேற்பட்டவர்களிலேயே அதிகரித்துள்ளது.

குடும்பங்களைப் பொறுத்தவரை தாய் அல்லது சகோதரிக்கு இந் நிலை காணப்பட்டால் சம்பந்தப்பட்டவருக்கும் வரச் சாத்தியக்கூறுகள் உண்டு.

உடற்பருமன், அதிகளவு கொழுப்புணவு, மது அருந்துதல் ஆகியவையும் இந்நோயை ஏற்படுத்த வல்லன.

மார்பகப் புற்றுப்பரிசோதனைகள் உரியகாலத்தில் செய்யப்படுவதன் மூலம் பின்விளைவுகளைத் தடுக்கலாம். உரிய சிகிச்சையையும் பெறலாம்.

மிகவும் வலுக்குறைந்த X கதிர்மூலம் இப்பரிசோதனை சுகதேகிகளில் நடாத்தப்படுகிறது. இதை மமோகிராம் Mammogram எனலாம். நூற்றுக்கு நூறு வீதம் இது சரியான தரவுகளைத் தராவிட்டாலும் கணிசமான அளவு பலனைத் தரவல்லது. சுமார் 30 முதல் 40 வீதம் வரையான மரணங்களை ஏற்படுத்தும் மார்பகப் புற்றுநோய் இப்பரிசோதனை மூலம் கண்டுபிடிக்கப்பட்டுத் தவிர்க்கப்படுகின்றது. 50 வயதுக்குட்பட்டவர்களில் இப்பரிசோதனை பெருமளவு நன்மையைத் தருகின்றது என ஆணித்தரமாகக் கூறமுடியாது.

**வாசகர்களே!**

*உங்கள் மருத்துவ கேள்விகளுக்கு பதிலளிக்க Dr. என். எஸ். மூர்த்தி அவர்கள் ஆதரவு தந்துள்ளார். உங்கள் சந்தேகங்களை ஈழமுரசிற்கு எழுதி அனுப்புங்கள். பெயர் விபரங்கள் அவசியமில்லை.* (ஆ.ர்)

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்
தமிழ் அச்சகம்
(மக்கள் கடை அருகில்)
இலண்டன், இந்தியா, இலங்கை, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 500-க்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ் மாதிரிகள் உங்கள் தெரிவிற்காக உள்ளன.
அனைத்து அச்சு வேலைகளும் குறித்த தவணையில் மிகக் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.
திங்கள் முதல் - சனி வரை 09.00 - 22.00 மணி வரை
59, Rue Louis Blanc, 75010 Paris _ Tel&Fax: 01 42 09 60 64 ou 06 13 12 35 42
அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு!
திருமண அழைப்பிதழ், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், பிறந்த தின விழா அழைப்பிதழ், முதன் நன்மை அழைப்பிதழ், கேக் பெட்டிகள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். அழைப்பிதழ் மாதிரித்தாள் தெரிவிற்காக இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.
24 மணி நேரத்தில் உங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தும் Print செய்து கொடுக்கப்படும்

# வெற்றித் திருமகன்

– பேராசிரியர் செவாலியே சுகிர்தராஜ் – [டிகோல் தொடர் - 36]

வேறு சில சமயங்களில், எதிரிகள் அண்டையில் இருந்தால், தரை இறங்க வேண்டிய விமானம் இறங்காமல், சாமான்களை மட்டும் மேல் இருந்தே எறிந்துவிட்டுச்சென்றுவிடும்.

பிரஞ்சு எதிர்ப்பாளர்கள் அரசுத் தாள்களையும், அரசு முத்திரைகளையும் அதிக அளவில் தயாரித்தனர், பயன்படுத்தினர். இவர்கள் வெடி மருந்துகளைத் தயாரித்தனர். உபயோகித்தனர். அந்நிய மண்ணை, பலத்தின் மூலம் வென்றெடுப்பது எளிது. அதே மண்ணை, பல ஆண்டுகள் பாதுகாத்தலும், அதே மண்ணில் பல ஆண்டுகள் ஆக்கிரமிப்பை வளர்ப்பதும் மிக மிகக் கடினம். இந்த நிலையில் அந்த மண்ணின் மைந்தர் ஒவ்வொருவரும் [சில துரோகிகள் நீங்கலாக] எதிரியாக மாறி விடுவதால், ஆக்கிரமிப்பாளர்களின் நிம்மதியே பறிபோய்விடும். இதுதான் பிரான்சில் நடந்தது.



பிரஞ்சு எதிர்ப்பாளர்கள், பிரான்சில், மின்சாரக் கம்பங்களை வெட்டிச் சாய்த்தனர். ஜெர்மானியர் மின்சாரத் தட்டுப்பாட்டால் திண்டாடினர்; அவர்கள் ஜெர்மானியர்களின் கார்களை விடும் இடங்களை நாசப்படுத்தினர். பல சமயங்களில், ஜெர்மன் மொழி பேசிக்கொண்டு, ஜெர்மனியரின் அடையாள அட்டையுடன், ஜெர்மன் சிறப்பாடையுடன், ஜெர்மன் இராணுவத்தினரைப் பழிவாங்கினர். சில பகுதிகளில், 20-30 ஜெர்மன் வண்டிகள் ஒன்றாகச் செல்லப்போவது தெரிந்து, எதிர்ப்பாளர்கள், நகருக்குத் தூரத்தில், வளைவுகளில், மரங்களை வெட்டிப்போட்டனர், அல்லது பாலங்களை வெடிவைத்துத் தகர்த்தனர். உதவிக்குப் புதிய ஜெர்மன் வீரர்கள் வரும்முன், 20-30 வண்டிகளில் வந்த ஜெர்மனியரை அழித்தனர். ஆயுதங்களைக் கைப்பற்றினர். எப்படி அவர்கள் விரைந்து ஒன்று கூடினரோ ஒரு செயலுக்கு, அப்படியே, வேகமாக, கலைந்து போகவும் அவர்களுக்குத் தெரியும்.

எதிர்ப்பாளர்களின் செயல்கள் ஒவ்வொரு நாளும் நீண்டன. இவர்களில் படித்தவர்களும், படிக்காதவர்களும், நகரத்தினரும், கிராமத்தினரும், வசதி வாய்ந்தவர்களும், வசதி குறைந்தவர்களும், தொழிலாளிகளும், பேராசிரியர்களும், விவசாயக்குடி மக்களும், என்ஜினீயர்களும், வர்த்தகர்களும், அரசு ஊழியர்களும் வேற்றுமை ஏதும் இன்றி இணைந்தனர். நாஜிகளை எதிர்த்து நின்ற, பிரான்சில் வாழ்ந்த ஜெர்மானியரும் இவர்களுடன் சேர்ந்தனர். பிரஞ்சு மக்கள் என்ற ஒரே ஒரு தகுதி மட்டுமே தேவைப்பட்டது. பதிலுக்கு, ஜெர்மனி அதிகாரிகள், பிரஞ்சு மக்கள் மீது அடக்குமுறையை ஏவினர், பைத்தியக்காரத்தனமாக ஏவினர். இதனாலும், அவர்களை எதிர்த்து, வெறு–த்த மக்களின் எண்ணிக்கை உயர்ந்த வண்ணமே இருந்தது.

ஆக, மொத்தத்தில், Jean Moulin ஜெனரல் டிகோல் அவர்மீது வைத்த நம்பிக்கையை வீண் ஆக்கவில்லை. டிகோல் பெருமைப்படும் அளவில் அவரது நடவடிக்கைகள் அமைந்தன. பிரஞ்சு எதிர்–ப்பு [Resistance] வளர்ந்து, பெருகியது. அடுத்தடுத்து, மார்ஷலின் பெருமை மங்கத் தொடங்கியது. மக்களுக்கும், அவருக்கும் இடையே தொடர்பு அற்றுப்போனது - மாறாக, நாடு விடுலையாகும் முன்பு கூட, கத்தோலிக்கக் கிறித்துவ மதத்தின் கார்டினல்களும், [குறிப்பாக பாரிஸ், லியோன்] பேராயர், ஆயர்களும் மார்ஷல் புகழ்பாடிக்கொண்டிருப்பார்கள்.

## அத்தியாயம்: 10
## அமெரிக்கர்களுடன் கருத்து வேற்றுமைகள்

அமெரிக்க ஆட்சியாளர்கள் சிறிது விந்தையானவர்கள். பல சமயங்களில் சாமர்த்தியமாகவும், விவேகமாகவும் நடந்துகொள்வார்கள் – வேறு பல சமயங்களில் விவேகமற்ற அரசியலைத் தொடருவார்கள்.

உலகம் முழுவதிலும் இருந்து, ஒரு பெரிய நாடு ஒரு சிறிய நாட்டை அடிமைப்படுத்தும் முறை [காலனியலிசம்] ஒழிய வேண்டும் என்று முழங்குவார்கள், உழைப்பார்கள் – ஆனால், மத்திய அமெரிக்காவையும், தென் அமெரிக்காவையும் தங்களது காலனி நாடுகளாக நடத்துவார்கள். மனிதர்கள் அனைவரும் சமம், வெள்ளையர்கள் உயர்ந்தவர்களும் அல்ல, கருப்பர்கள் தாழ்ந்தவர்களும் அல்ல என்று கூறுவார்கள். தங்கள் நாட்டில் மட்டும், முதல் இடத்தை வெள்ளையர்கள் தொடர்ந்து வகிக்க விடுவார்கள். அவர்களிடம் நேர்மையும் இருக்கும், அநீதியும் இருக்கும். அமெரிக்கர்களுக்கு, 1787 இல், தங்களது விடுதலைக்கு உதவிய நாடு என்பதால் பிரான்சைப் பிடிக்கும் – அதே சமயம், சிறிய பிரான்சு, பெரிய நாடான அமெரிக்காவை மதிப்பதில்லை என்று பிரான்சை வெறுப்பார்கள்.

1920 முதல் 1940 வரை, அமெரிக்கா பிரான்சின் இராணுவ விவகாரங்களைக் கூர்ந்து கவனிக்கவில்லை. 1940 இல், மார்ஷல் பெட்டெய்ன் இட்லரிடம் சரணாகதி அடைந்ததை அமெரிக்கா குறைகூறவில்லை. அமெரிக்க இராணுவத் தலைவர்கள் பெட்டெய்னை மதித்தனர். அவருடன் நல்லுறவுகளை வைத்துக் கொண்டனர். டிகோல் மார்ஷலுடன் பிரான்சு நாட்டின் பாதுகாப்பு பற்றி கொண்டிருந்த அடிப்படை வேற்றுமைகளை, மோதல்களை அவர்கள் கவனத்தில் கொள்ளவில்லை. தவறான வழியோ, சரியான வழியோ, எப்படியோ, இன்று மார்ஷல் பெட்டெய்ன் 'பிரான்சின்' தலைவர். அவருடன் நல்ல தொடர்பை வைத்துக்கொள்ள வேண்டும் என்ற முடிவெடுத்தனர்.

ஜெனரல் டிகோல் பற்றி அவர்கள் அரை– குறையாகவே அறிந்திருந்தனர்.

அவரது சிறப்புகளுக்கு அவர்கள் முக்கியத்துவம் அளிக்கவில்லை. அவரது குறைகளுக்கும், அவரைப் பிடிக்காத பிரஞ்சுக்காரர்களின் கருத்துக்களுக்கும் அவர்கள் முக்கியத்துவம் அளித்தனர்.

அவர்களுக்கு ஜெனரல் டிகோல் ஒரு ஆணவக்காரராகவும், பிறரை மதிக்கத் தெரியாதவராகவும், ஜனநாயக எதிர்ப்பாளராகவும் பிடிவாத குணம் படைத்த பிரஞ்சு தேசியவாதியாகவும் மட்டுமே தெரிந்தார். அவர்கள் மதித்த ஆங்கிலேயர்களும் டிகோலை, ஜோன் ஆஃப் ஆர்க், 14ம் லூய் என்று நினைத்து நடப்பவர் என்று வர்ணித்ததை அவர்கள் ஏற்றனர்.

அமெரிக்கர்கள், தன்னையும், தனது சுதந்திர பிரான்சு இயக்கத்தையும் அலட்சியப்படுத்துவதையும், நாட்டை அன்னியனிடம் அடகு வைத்த துரோகிகளுடன் அவர்கள் குலவுவதையும் எண்ணி டிகோல் வருந்தினார். அமெரிக்கர்கள் தவறான பாதையில் செல்கிறார்கள், திருந்தி ஒருநாள் சுதந்திர பிரான்சு இயக்கத்தை மதிப்பார்கள் என்று நம்பினார்.

பிரான்சில், விஷி நகரில் நியமிக்கப்பட்டிருந்த அமெரிக்கத் தூதர், அட்மிரல் Leahy, மார்ஷல் பெட்டெய்னையும், கடற்படைத் தலைவர் அட்மிரல் டர்லானையும் மிகவும் மதித்தது மட்டுமின்றி, வாஷிங்டனுக்கு அவர்கள் பற்றி நல்ல அறிக்கைகளைத் தொடர்ந்து அனுப்பினார். விஷி பிரான்சுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே ஒரு உடன்பாடு உருவானது.

அந்த உடன்பாட்டின்படி, அமெரிக்கர்கள் [விஷி] பிரான்சுக்குச் சொந்தமான பகுதிகளில் தங்களது போர்க் கப்பல்களை நிறுத்தலாம். அதற்கு மாறாக, அமெரிக்கப் பகுதியில் உள்ள பிரஞ்சு காலனிகளில் விஷி பிரான்சின் அதிகாரம் தொடர அமெரிக்கா உதவும்.

இந்த உடன்பாடு ஜெனரல் டிகோலுக்கு ஏற்றதாய் இல்லை. அமெரிக்கப் பகுதியில், பிரான்சுக்கு 4 காலனிகள் இருந்தன: 1 - மர்டினிக். 2. குவாதலுப், 3. கியான் 4. Saint Pierre உம் Miquelon உம்.

முதல் மூன்று காலனிகளை உடனே பிடிக்கும் வச்தி சுதந்திர பிரான்சுக்கு இல்லை– மாறாக, கடைசி காலனி– சின்னச் சிறியது, கனடாவுக்கு அருகில் உள்ளது. எளிதாக பிடிக்கக்கூடியது என்று கணக்குப்போட்டார் டிகோல்.

[தொடரும்]

# கவிக்களம்

## என் நினைவுகளில் 'மாடு'


அறியும் பருவத்தில் அம்மாவின் தேக
ஆரோக்கியத்துக்காய் - அண்டைவீட்டில்
அரைப்போத்தலுடன், அரைமணிநேரக்
காத்திருப்பு... ஒட்டிய பசு... வற்றிய முலை...
அப்போது எனக்கு மாட்டைத் தெரியும்...

பத்துவயதில் பந்தடித்து விளையாட
பந்து பக்கத்து வீட்டு கண்ணாடி ஜன்னலில்
பட்டுவிட, பாய்ந்துவந்த பெரியவர்
'மாடு தின்னி வேதக் கார' எனக் காதுதிருகி
சொல்லி வைக்க...
அப்போதும் எனக்கு மாட்டைத் தெரியும்...

வைத்த வெண்காயத்துக்கு வயல்வெளி
எங்கும் 'சாணி' தேடியிலைந்த போதும்...
ஐயர் நண்பனுடன் களவாக 'மாட்டுக்கொத்து'
தின்று ருசித்த போதும்...
அப்போதும் எனக்கு மாட்டைத் தெரியும்.

வெளிநாடு செல்ல 'தட்டி' வானில் புறப்பட்டு
வரும் வழிகளில்...வயல் வெளிகளில்
கூட்டம்...கூட்டமாய்...நெஞ்சில் ஏக்கமாய்...
கடைசியாகத் தாய் மண்ணில்...
அப்போதும் எனக்கு மாட்டைத் தெரியும்...

'அசுல்' அடித்து அகதியென்று பெயரெடுத்து
அறைக்குள் அடைபட்டு வேலை அனுமதியற்று
'கறுப்புவேலை' யென... மாட்டு பண்ணையில்
சாணம் கழுவி வைக்கோல் அடித்து...
அப்போதும் எனக்கு மாட்டைத் தெரியும்...



தாயகத்து நிதர்சனங்களை தரிசனம்
பின் ஒளிவீச்சு... பார்க்கும் போது...
மக்களுடன் மாடுகளும் திக்கற்று வீதிகளில்
செத்து... பிணங்களாய்...ஊதிப் பருத்து...
அப்போதும் எனக்கு மாட்டைத் தெரியும்...

மாமிச உணவுகளை, மாடுகளின் தீனியாக்க...
மாற்றமுடியாத நோய்கண்டு மாட்டிறைச்சிக்கு
தடைவிதித்து உலக நாடுகள் தங்களுக்குள்
தர்க்கிக்க... அது சர்வதேச பிரச்சினையாக...
அப்போதும் எனக்கு மாட்டைத் தெரியும்.

உயிரை பாதுகாக்க ஊமையாய்
உலக நாடுகளை உதவிகேட்ட...
உதாசீனம் செய்து உயிருடன் எரியூட்ட
வாகனங்களில் ஏற்றிச்செல்லப்பட...
அப்போதும் எனக்கு மாட்டைத் தெரியும்...

திரண்டு கொழுத்த மாடுகள், உயிர்காக்க
முரண்டு பிடித்தபோது-வாய்நுரைக்க
முளிபிதுங்க தொலைக்காட்சியில் பார்த்த
எனக்கு கண்ணில் நீர் முட்ட...
இப்போதும் எனக்கு மாட்டைத் தெரியும்...!

– யோ. பீற்றர், ஜேர்மனி



# காலம் ஆகி வந்த கதை

## வடக்கு என்றால் வயிரம் பாய்ந்தது

[சென்ற வாரத் தொடர்ச்சி]

அம்மா எங்களை மடத்தடி அத்தைவீட்டில் விட்டுவிட்டு அப்பாவை காங்கேசந்துறை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக்கொண்டு போனா. அப்பரண்ணையும் போனார்.

அம்மா ஒரு காணி வாங்கினா. அப்படித்தான் சொல்லவேண்டும்.' அப்பா எங்கை காணி வாங்குவது? அம்மாவிற்குத்தான் அந்தச் சூத்திரம் தெரியும். அந்த மந்திரம் தெரியும். காசை எப்படிச் சேமிப்பது? சேமித்ததை எப்படி முதலாக்குவது? முதலை எப்படிச் சொத்தாக்குவது? இது அம்மாவிற்குத் தெரியும். ஆனால் அம்மா 'கரவஞ்சி' அல்ல. தேவைக்கேற்ப நல்லாச் செலவழிப்பா. நல்ல உடுப்பு. நல்ல சாப்பாடு. அடிக்கடி படம். இதைவிட வேறென்ன வேண்டும்? அப்பாவோ என்றால், செலவழிக்கவும் தெரியாது; சேமிக்கவும் தெரியாது.

அம்மா ஒரு காணி வாங்கினா. நெடுங்கண்ணியில் ஏற்கனவே ஒரு காணி இருந்தது. இது உயனைப் பனங்கூடலுக்கும் சுடலைக்கும் பக்கத்தில் உள்ள காணி.

'அது எனக்கு' என்றேன். அக்கா தனக்கென்றார். அடிபிடிப்பட்டோம். 'அக்காச் சனியன் எப்பவும் எனக்கொரு ஆய்க்கினைக்குத் தான் பிறந்திருக்கு' அம்மா என்னை முதல் பெற வைச்சிருக்கலாம். 'அக்காவிற்கும் ஆரும் அடிக்கிறதே?' என்கின்ற கேள்வி இல்லாமல் போயிருக்கும்.

அக்கா ஒருவகை செய்து என் வாயை அடைத்துவிட்டார். 'காணிக்கை பேய்கள் வரும். என்ன செய்வாய்?'

போச்சடா. நான் அந்தப் பக்கத்தை யோசிக்கவேயில்லை. பேய்கள் என்றால் லேசான ஒரு விசயமா? பேய்களை நான் கண்டதில்லை. காணாமலே பீச்சல் பயம் என்றால், கண்டிருந்தால் பீச்சலுடன் மூத்திரமும் போகும். வேண்டாம்; காணவே வேண்டாம்.

இரவில் வீட்டினுள் எல்லோரும் நின்றால் வெளியில் வரவே பயம். வெளியில் எல்லோரும் நின்றால் வீட்டினுள் போகவே மாட்டேன். படுக்கப்போகமுன் மூத்திரம் பெய்ய வளவின் மூலைக்குப் போவதென்றாலும் அம்மா அல்லது அப்பா விளக்கு பிடித்தபடி வருவார்கள்.

அக்கா சொன்ன அன்றிரா என் காணிக்குள் பேய்களுடன் நான் தென்னங்கன்றுகள் நட்டேன்...

அம்மா ஒரு காணி வாங்கினா. அந்தக் காணிக்குள் அப்பா தென்னங்கன்றுகள் நட்டார். அது நட நானும் அக்காவும் போனோம். பின்னேரம் தான் என்றபடியால் சுடலையை நான் பயப்படாமல் பார்த்தேன். அப்பா ஆழக்கிடங்கு வெட்டினார். கடகத்தினுள் கொண்டு வந்த எருவைக் கொட்டினார். 'இது ராசாவுக்கு' 'இது பிள்ளைக்கு' என்று பன்னிரண்டு தென்னங்கன்றுகள் நட்டார். ஒன்றை விட்டொன்றாக எனக்கு ஆறு தென்னங்கன்றுகள்.

'வேண்டாம்' என்றேன். வளவின் வடக்குப் பக்கம் உள்ள ஆறு தென்னங்கன்றுகள் எனக்கு என்றேன்.

வடக்கு என்றால் எனக்கு நல்ல விருப்பம். இலங்கையிலும் வடக்கு மாகாணம். வடக்கு மாகாணத்திலும் வடக்குப்பகுதி வலிகாமம். வலிகாமத்திலும் வலிகாமம் வடக்கு. வலிகாமம் வடக்கிலும் வடக்குப்பகுதி எனது ஊர். அளவெட்டியிலும் வடக்கு அளவெட்டி.

வடக்கு என்றால் வயிரம் பாய்ந்தது.

அக்காவிற்கு அது ஒன்றும் விளங்காது. சாடையான பேச்சியும்தான். மூத்ததுகள் எப்பவும் பேயடைகள். ஆனால் என்னவோ அக்காவிற்கு பேய்கள் என்றால் பயமில்லை. அக்காவிடம் நான் தோற்பது இரவில் பேய் விசயத்தில் மாத்திரம்தான். பேய்க்குப் பயந்து அக்காவுடன் குடங்கிக்கொண்டு படுத்துவிடுவேன்.

தென்னங்கன்றுகள் நட்டபிறகு அப்பா சுடலைக் கிணற்றுக்குப் போய், தண்ணீர் அள்ளிவந்து எல்லாக் கன்றுகளுக்கும் வார்த்தார். வரிச்சு மட்டையால் தென்னங்கன்றைச் சுற்றி சின்னச்சின்ன வேலி வரிந்தார். பிறகு பொழுதுபட்டுப் போயிற்று. அப்பாவின் கை பிடித்து, பேய் தொற்றிவிடாதபடி, அம்மாள் கோயில் வடக்கு வீதிதாண்டி கவனமாக வீடுவந்தேன்.

அம்மா வாங்கின காணிக்குள் மாங்கன்றுகள் நடவும் நானும், அக்காவும் அப்பாவும் போனோம். வெள்ளைக்கொழும்பான் நல்லது என்று நான் சொன்னேன். அது காயிலேயே இனிக்கும். கறுத்தக் கொழும்பான் நல்லது என்று அக்கா சொன்னா. அது பழுத்தால் நல்ல இனிப்பு. அப்பா எது நட்டாரோ தெரியாது. ஒவ்வொரு நாளும் அவற்றுக்கு தண்ணீர் அள்ளி ஊற்ற அப்பா போவார். பிறகு பின்னேரம் நித்திரையால் எழும்ப உளுத்தம்மா கரைத்துத்தர அப்பா வந்துவிடுவார்.

அன்று வரவில்லை. மண்டையிலிருந்து இரத்தம் வழிய அப்பரண்ணை கூட்டிக்கொண்டு வந்ததுதான்.

அப்பரண்ணை சொன்னார்:

அப்பரண்ணை ஆட்கள் உயனைக் கிறவுண்டிலை பந்தடித்துக்கொண்டு நிற்கிறார்கள். அப்பா சுடலைக் கிணத்தில் தண்ணி அள்ளுகிறார். துலா சடாரென அப்பாவின் மண்டையில் விழுகிறது. அப்பா அப்படியே கிணற்றுக் கட்டில் விழுகிறார். பந்தடித்தவர்கள் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்க்கிறார்கள்...

அப்பா அரும்பொட்டில் தப்பினார். கொஞ்சமென்றால் கிணற்றுக்குள் விழுந்திருப்பார். என்றை அப்பா செத்துப்போயிருப்பார். நல்ல காலம்

பெரிய மாமி சொல்கிறா:

'உது பெரியதம்பியின்றை வேலை'

பெரிய தம்பி என்றது பெரியையாவை. அப்பாவின் ஒரே அண்ணன். பெரியையா செத்துப்போய் மூன்று மாதம் ஆய்விட்டது.

பெரியையா செத்துப்போனார் என்று அறிந்தபோது அப்பா மண்டையில் அடித்துக் குழறிக்கொண்டு ஓடினார். உடம்பில் ஒரு உடுப்பும் இல்லாமல் நானும் அப்பாவின் பின்னால் அழுதுகொண்டு ஓடினேன். பெரியையா சவமாய்க் கதிரையில் வளர்த்திக்கிடக்கிறார். பக்கத்து யன்னலில் அப்பா தலையைப்போட்டு அடித்து அடித்து அழுகிறார். 'அப்பா அடிக்காதையுங்கோ, அடிக்காதையுங்கோ' என்று அப்பாவைத் தடுத்து அழுகிறேன். பெரியையா பாவமாய்க் கண்மூடி இருக்கிறார்.

பெரியையாவை இட்டு எனது ஞாபகம் இது ஒன்றுதான். சார்மனைக் கதிரையில் இருந்து, தன் கால்களை நீட்டி, அதில் என் இரு கால்களையும் வைக்கச் சொல்வார். பின் என்னை உயரத்தூக்குவது; ஊஞ்சலாய் ஆட்டுவது.

இந்தப் பெரியையாவா அப்பாவின் மேல் துலாவை விழுத்தியிருப்பார்? நான் நம்பவில்லை..யாரும் நம்பவும் மாட்டார்கள்.

பெரியமாமி திருத்தமாகச் சொன்னார். 'துலாவை விழுத்தினது மற்றதுகளின்றை சேட்டை. அவனைக் கிணத்துக்கை விழாமல் தடுத்தது பெரிய தம்பியின்றை வேலை'

அப்பாடா! அதுதானே! பெரியையா அப்பாவிற்கு கொடுமை செய்வாரா? என்றாலும் பெரியையா மீது ஒரு பயம் வந்தது. என்னதான் பெரியையாவா இருந்தாலும் அவர் பேய்தானே?

காங்கேசந்துறை ஆஸ்பத்திரிக்கு அடுத்த நாள் பஸ் ஏறிப்போனோம். கடற்கரையில் அப்பாவின் வார்ட் இருந்தது. தூரத்தில் பெரிய கப்பல் தெரிந்தது; மற்றும் வெளிச்சவீடும் தெரிந்தது. அப்பா தலையில் பெரிய கட்டுடன் படுத்திருந்தார். அம்மாவையும், அக்காவையும், என்னையும் கண்டவுடன் அப்பா அழுதார். இல்லை, என்னைக் கண்டவுடன்தான் அழுதார். நான்தானே தடவிவிடவேண்டும். ஆனால் அப்பா என் முதுகைத் தடவினார்.

அம்மா முட்டை அவிச்சு சோறுகொண்டுவந்திருந்தா. அப்பா முட்டையைப் பிச்சு எனக்குத் தீத்தினார். 'அங்கை நான் பிள்ளையளுக்கு முட்டை அவிச்சு வைச்சிருக்கிறன். நீங்கள் தின்னுங்கோ' என்றார் அம்மா.

அப்பா லாச்சி திறந்து காலமை ஆஸ்பத்திரி குடுத்த ஜாம் பூசின பாணை எடுத்துத் தந்தார். நல்ல இனிப்பா இருந்தது.

அடுத்த நாள் நாகராசண்ணையின் காரில் அப்பா வீடு வந்தார்...

பிறகு... பிறகுதான் அப்பா தலையில் சால்வையை இறுக்கிக் கட்டிப்படுக்கத் தொடங்கினார். பேய்களின் சேட்டை செய்தவேலை.

அப்பா பிறகெல்லாம் என் வளவுக்குப் போவதை நிறுத்திவிட்டார். பேய் ஆட்சி செய்யும் நிலத்தில் மா முளைத்தென்ன, தென்னை விளைந்தென்ன?

பற்றை தடவி, புல்மேயும் மாடுகள் வரிச்சுமட்டை வேலி மிதித்து, மாங்கன்றையும், தென்னங்கன்றையும் மேய்ந்தன.

பிறகு ஒரு காலம். உலகம் எங்களுக்கான காலம். கதை, கவிதை என்று எழுதுகிற காலம். என்மீது மையல் கொள்ளாப் பெண்ணால் மனம் வாட்டமுற்ற காலம். உயனைப் பனங்கூடல் பக்கம் பின்னேர உலாத்தலுக்குப் போவோம். சேரன் சொன்னான்: 'இந்த வளவுக்கை ஒரு குடில்போட்டு நாங்கள் இருப்பமோ? கவிதை எழுத அருமையான இடமெடா'

அப்படிச்சொல்லி அதிக காலம் ஆகவில்லை. அந்த வளவு தாண்டி கீரிமலைக்கு குளிக்க நாங்கள் போனபோது எந்தன் வளவின் பக்கத்தில் இரண்டு ட்ரக்குகளும், மூன்று ஜீப்புகளும் நின்றன. ஆமிக்காரர் நின்றனர். அயலில் கையில் விலங்குமாட்டி தமிழ் ஆண்மகன் நின்றான்.

அச்சம் வர நாங்கள் அருகில் செல்லவில்லை. பிறகு அறிந்தோம் ஒரு சேதி. அது குட்டிமணி என்றனர். அது போகட்டும்.

அதிலும்விட முக்கியமான சேதி எந்தன் வளவில் எனக்குத் தெரியாமலே ஆயுதங்கள் முளைக்கத் தொடங்கிவிட்டன.

அதுவே வலிய செய்தி.

இரவி. அருணாசலம்.




# ரதி ஜுவலர்ஸ்



28, Ealing Road, Wembley,
Middx HA0 4TL

'எப்பொழுதுமே மலிவு விலை'

Tel: 0181-9033063-Fax: 0181-9039711

OPEN: 7 Days a Week

Mon -Sat: காலை 10 முதல் மாலை 6.30 வரை
Sun: மதியம் 12 முதல் மாலை 6.30 வரை.

Pub

# சரித்திர வெற்றியை சாதித்தது இந்தியா

தொடர்ச்சியாக 16 வெற்றிகளைப் பெற்று உலக சாதனையை தொடர்ந்து கொண்டிருந்த அவுஸ்திரேலிய கிரிக்கட் அணியினை கல்கத்தா ஈடன்காடன் மைதானத்தில் வெற்றிகொண்டுள்ளது இந்தியா. அதுமட்டுமன்றி இரண்டு இந்தியசாதனைகளையும் இந்திய அணி புதிதாக்கியுள்ளது. இதுவரை இந்திய பந்து வீச்சாளர்கள் எவராலும் ஏற்படுத்த முடியாதிருந்த மூன்று விக்கட்டுக்களை (Hat Trick) தொடர்ச்சியாக வீழ்த்தும் சாதனையை உருவாக்கியுள்ளார் சுழல்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங். அடுத்து துடுப்பாட்டத்தில் பல சாதனை புரிந்த சுனில் கவாஸ்கர் 1983ம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிராக பெற்ற 236 ஓட்டங்களே இதுவரை இந்திய வீரர் ஒருவரால் பெறப்பட்ட அதிகூடிய இனிங்ஸ் ஓட்டங்களாக விளங்கியது. இதனை ஹைதராபாத் துடுப்பாட்டவீரரான V.V.S லஷ்மன் முறியடித்து 281 ஓட்டங்களை பெற்றார்.

முதலில் துடுப்பாடிய அவுஸ்திரேலியா, ஹர்பஜன் சிங்கின் பந்துவீச்சில் சற்று தளம்பிய போதும் அணித்தலைவர் ஸ்ரிவ் வோவ், பந்து வீச்சாளர் கிஸ்பையுடன் இணைந்து 9 ஆவது விக்கட்டுக்காக 133 ஓட்டங்களைப் பெற்று அணியின் நிலையை 445 வரை உயர்த்தினார். அவுஸ்திரேலியா தரப்பில் கைடன் 97, லங்கர் 58, ஸ்ரிவ் வோவ் 110, கிஸ்பை 46 என பெற்றனர். இந்திய வீச்சாளர் 7 விக்கட்டுக்களை சாய்த்தார். பதிலுக்காடிய இந்தியா, அவுஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளரிடம் மாட்டி 171 உடன் ஆட்டம் கண்டது. லஷ்மன் மட்டும் ஓரளவு நிதானித்து 59 ஓட்டங்களை பெற்றார். குறைந்த ஓட்டங்களைப் பெற்றதால் மீண்டும் Follow In அடிப்படையில் இந்தியாவை ஆடப்பணித்தது அவுஸ்திரேலியா. இவ்வாறு பின்தள்ளிய இந்தியாவை உயர்த்த அபாரமாக மட்டைபிடித்தாடிய லஷ்மன், ராவிட் சோடி, 5ம் விக்கட்டுக்காக 376 ஓட்டங்களை பெற்றதோடு, லஷ்மன் தனதுசாதனை கணக்காக 281 ஓட்டங்களையும், ராவிட் 180 ஓட்டங்களையும் பெற்றனர். இவ்விருவரின் ஆட்டம் நிலைமையை மாற்றி இந்தியாவை 657/7 என்ற நிலைக்கு உயர்த்த, '384 ஓட்டங்கள் வெற்றி இலக்கிற்காக' அவுஸ்திரேலியா ஆட அழைக்கப்பட்டது. ஆரம்பசோடி சிறப்பாக ஆரம்பித்தும் ஹர்பஜன் சிங்கின் பந்துவீச்சு, கங்காரு தேசத்தை 212 உடன் உலுக்கிவிட்டது. கைடன் மட்டும் சிறப்பாக ஆடி 67 ஓட்டங்களைப் பெற, ஹர்பஜன் சிங் 6 விக்கட்டுக்களை சாய்த்தார். 15.03.01 நிகழ்ந்த இந்த அதிசய முடிவால் இந்தியா 171 ஓட்டங்களால் வெற்றிபெற்றதோடு சரித்திரத்தில் 3 ஆவது தடவையாக, Follow in ஆடிய அணிஒன்றும் வெற்றி


லஷ்மன்

பெற்றுள்ளது. இந்த மூன்று சிறப்பான போட்டிகளிலும் அவுஸ்திரேலியாவே தோல்வியுற்றது. பல புதிய திருப்பங்களை ஏற்படுத்திய இப் போட்டியில் லஷ்மன் சிறப்பு ஆட்டக்காரனாகியுள்ளார். Follow in இவ் வெற்றி பெற்ற அணிகள் பற்றிய விபரம் பின்வருமாறு.

*1. இங்கிலாந்து (325, 437) எதிர் அவுஸ்திரேலியா (586,166) 10 ஓட்டங்களால் இங்கிலாந்து வெற்றி*

*2. இங்கிலாந்து (174,356) எதிர் அவுஸ்திரேலியா (401/9, 111) 18 ஓட்டங்களால் இங்கிலாந்து வெற்றி*

*3. இந்தியா (171,657/7) எதிர் அவுஸ்திரேலியா (445,212) 171 ஓட்டங்களால் இந்தியா வெற்றி*

# தொடரில் தோல்வியை சுமக்கிறது சிறீலங்கா

மூன்றே மூன்று நாட்களில் இங்கிலாந்திடம் மற்றொரு தோல்வியை எதிர்கொண்டு தொடரையும் இழந்தது சிறீலங்கா. 17.03.01 கொழும்பில் முடிவுற்ற மூன்றாவது டெஸ்ட்போட்டியில் முதலில் ஆடிய சிறீலங்கா 241 ஓட்டங்களைப் பெற்றது. ஜெயவர்த்தனே மட்டும் ஓரளவு ஆடி 71 ஓட்டங்களைப் பெற்றார். பதிலுக்காடிய இங்கிலாந்து, 'தோர்ப்'பின் சிறப்பான 113 உடன் 246ஐப் பெற்றது. மீண்டும் ஆடிய சிறீலங்கா இங்கிலாந்து வீச்சாளர்களிடம் 81 உடன் சுருண்டது. 74 ஓட்டங்களுக்காக ஆடிய இங்கிலாந்து 6 விக்கட் இழப்புடன் தனது இலக்கை பூர்த்திசெய்து தொடரையும் 2:1 என தனதாக்கியது. இப்போட்டியின் நாயகனாக 'தோர்ப்பு'ம், தொடரின் நாயகனாக பந்துவீச்சாளர் 'கூத்'தும் இங்கிலாந்து அணியிலிருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.


தோர்ப்

# அகஸி, செரினா வெற்றி


கலிபோர்னியாவில் நடைபெற்ற 'Indian Wells' டெனிஸ் போட்டியில் அமெரிக்கர்களான அகஸி, செரினா இருவரும் வெற்றிபெற்றுள்ளனர்.

ஆண்கள் பிரிவில் அமெரிக்காவின் முதன்மைவீரர்களான அகஸி, சம்பிராஸ் இருவரும் இறுதிப்போட்டியில் சந்தித்துக்கொண்டனர். இப் போட்டி கடுமையாக இருந்தபோதும் முடிவுகள் அகஸிக்கு சார்பாகவே அமைந்தன. முடிவில் அகஸி 7:6, 7:5, 6:1 என சம்பிராஸ்சை வெற்றி கொண்டார்.

பெண்கள் பிரிவில் பெரும் வளர்ச்சியை அடைந்துள்ள வில்லியம்ஸ் சகோதரிகள் இப்போட்டியிலும் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட முடிந்தது. இம்முறை தங்கை சரினா வில்லியம்சின் வெற்றியை பெல்ஜிய வீராங்கனி கிம் சிலியெஸ்ரால் தடுக்க முடியவில்லை. முதன்மை வீராங்கனை கிங்கிஸ்சை அரையிறுதியில் தோற்கடித்த சிலியெஸ்ரர் இறுதியாட்டத்தில் செரினாவிடம் 4:6. 6:4.6:2 என தோல்வியுற்றார்.


செரினா

# வீர வணக்கம்



## மேஜர் லக்ஷனா

(ஆனந்தராசா கௌரி)

*(அச்சுவேலி - தமிழீழம்)*

**வீரச்சாவு:**
**02.04.2000**

வேகம்கொண்ட வேங்கை மேஜர் லக்ஷனா வெற்றி எமக்கே என்று முகமாலையில் முகாமிட்டிருந்த சிங்களப்படைக்கு எதிராக போராடினார். சோகம் எது வந்தாலும் சொந்த மண் மீட்க களம் பல கண்டார் தாகம் எல்லாம் தலைவன் காட்டிய பாதையில் தமிழீழம் தான் என்றார்.

இறமையும் உரிமையும் எமக்கு உண்டு என்று மறவர் குலம் நாம் என்று மண்மீட்பு போரில் மாவீரர் ஆகிவிட்டாய். உறவினரும் உற்றாரும் ஓராண்டு அல்ல ஓராயிரம் ஆண்டானாலும் மாறாத நினைவோடு மாவீரராய் உன்னை வாழ்த்தி வணங்குகிறோம்.

இவரது திதி தமிழீழத்தில் 23ம் திகதியும், சுவிசில் 31ம் திகதியும் நடைபெறும். மேஜர் லக்ஷனாவின் வீரமரணம் கேட்டு தொலைபேசியிலும், தபால் மூலமும் தொடர்புகொண்டு அனுதாபத்தைத் தெரிவித்தோருக்கும் எமது நன்றிகள்.

**தகவல் தருபவர்கள்:**
தமிழீழம் அப்பா, அம்மா, தங்கை, தம்பி
மற்றும் சுவிசில் வசிக்கும் தங்கை, மச்சான்,
அண்ணன்மார்கள், மச்சாள், மாமா,
மாமிமார்கள் மற்றும் எமது உறவுகள்

**தொடர்புகளுக்கு:**
*தங்கை ரமணன் ஆனந்தி*
*சுவிஸ் 041 7108750*

Pub.Sw.

# வெட்டவெளியாகும் வாழைச்சேனை வீதி

(19.03.01)

சிறீலங்காப் படையினர் தமது பாதுகாப்பிற்காக மரங்களை அழித்து வருவது தெரிந்ததே. தற்போது மட்டக்களப்பிற்கும் வாழைச்சேனைக்கும் இடைப்பட்ட வீதியின் இரு பக்கங்களிலும் உள்ள மரங்கள் மற்றும் பற்றைகள் வெட்டி அழிக்கப்பட்டும், பாரிய மரங்கள் புல்டோசர் கொண்டு வீழ்த்தப்பட்டு அப்பகுதி முழுவதையும் வெட்டவெளியாக மாற்றி வருகின்றனர்.

கடந்த இரு வாரங்களாக படையினர் இந்த வேலையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். விடுதலைப் புலிகள் போர் நிறுத்தம் மேற்கொண்டும் வரும் இவ்வேளையில், சமாதானப் பேச்சுக்களின் போது போர் நிறுத்தம் முறிவடைந்து மட்டக்களப்பில் உள்ள இராணுவ முகாம்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தக் கூடும் என்ற அச்சம் காரணமாகவே படையினர் இந் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

## ஐந்தாவது...

ளைக் கொண்டிருந்தது. தற்போதைய அரசும் அநேகமாக அதே விதமான கொள்கைகளைத்தான் கொண்டுள்ளது. இக் கட்டுரை எழுதப்பட்டுக்கொண்டிருக்கும் வேளை ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சர் பல்கன் பிராந்தியத்தில் சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளுகின்றார். குறிப்பாக யுகோஸ்லாவியாவில் அவர் நீண்ட பேச்சுக்களைத் தலைவர்களுடன் மேற்கொண்டுள்ளார். அவர் தனது பயணத்தின் முன் வெளியிட்ட அறிக்கையொன்று முக்கியத்துவம் வாய்ந்தது. நவீன ஆயுதத் தளவாடங்களை யுகோ-ஸ்லாவியா பெற்றுக்கொள்ள அனுமதிக்க வேண்டும். பல்கன் பிராந்தியத்தில் சமநிலையைப் பேணுவதற்கு யுகோஸ்லாவியாவின் பலம் அவசியமானதாகும். அந்நாட்டிற்கு இராணுவ பொருளாதார உதவிகளை வழங்க தமது அரசு எப்போதும் தயாராக உள்ளது என அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இப்போது பரவிவரும் அல்பேனிய தீவிரவாதமானது ஐந்தாவது பல்கன் யுத்தத்திற்கு வழி வகுக்கக்கூடும் என்ற அச்சமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. யுகோஸ்லாவியாவின் விசேட படையணிகள் கொசோவோ எல்லை நோக்கி நகர்வதுவும் மொண்டிநீக்ரோ தனது பாதுகாப்பை அதியுச்ச தயார் நிலையில் வைத்திருப்பதுவும் மசிடோனியா எல்லையில் நிலைகொண்டிருந்த கொசோவோ பாதுகாப்புப் படைகள் விலக்கிக்கொண்டு வருவதுவும் தேவையேற்படின் தனது படைகளை மசிடோனியாவிற்கு அனுப்ப தயாராக இருப்பதாக யுகோஸ்லாவியா அறிவித்திருப்பதுவும் பிராந்தியத்தில் ஓர் யுத்தத்திற்கான நகர்வினையே எடுத்துக்காட்டுவதாக இர்ாணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர். அடுத்துவரும் வாரங்களில் பல்களின் யுத்த நிலைவரம் எந்த வடிவ-த்தை எடுக்கின்றன என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

### நாணயமாற்று விகிதம்

| | $ | DM | £ | FFr | S.Fr |
|---|---|---|---|---|---|
| நியூயோர்க் | – | 2.18 | 0.69 | 7.31 | 1.71 |
| பிராங்பேட் | 0.45 | – | 0.32 | 3.35 | 0.78 |
| லண்டன் | 1.43 | 3.11 | – | 10.46 | 2.44 |
| பாரிஸ் | 0.13 | 0.29 | 0.09 | – | 0.23 |
| சூரிச் | 0.58 | 1.27 | 0.41 | 4.27 | – |
| பம்பாய் | 46.75 | 21.45 | 66.99 | 6.39 | 27.34 |
| கொழும்பு | 85.80 | 39.37 | 122.96 | 11.73 | 50.19 |

புதிய நிர்வாகத்தின் கீழ்
AMIRTHAAM
முற்பணமாக £20 செலுத்துபவர்கட்கு ஒரு நேர உணவு ஏழு நாட்களுக்கும்.
OPENING HOURS:
Monday-Thursday - 12 noon- 3.00 pm 6.00 pm 11.00 pm
Friday/Saturday - 12.00 noon- 12.00 midnight
Sunday - 12.00 noon - 11.00 pm
200B Alexandra Avenue, South Harrow, Middlesex HA2 9BU,
Tél: 020 8423 9666/ 020 8864 3636

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

## நசிந்து கிடக்க...

றுக்கு மிகச் சிறந்த உதாரணங்களே. இன்று வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்கள் ஒன்றிணைந்து நடாத்த முற்படும் பொங்குதமிழ் நிகழ்வுகளை அரசாங்கம் ஆயுதங்களை காட்டி அடக்க முற்படுகின்றது. தடைகளைப் போட்டு இளைஞர்களைக் கைது செய்கின்றது. இவ்வாறு பெருந்தொகையான சம்பவங்கள் வடக்கு கிழக்கில் நடைபெறுகின்றது. புலிகள் செய்கின்ற சிறுசிறு தவறுகளைப் பூதக் கண்ணாடி ஊடாக உலகிற்கு அம்பலப்படுத்தும் உலக வல்லரசுகளின் புலனாய்வுத் துறைகளிற்கு மேற் கூறப்பட்டவாறான நிகழ்வுகள் கண்ணுக்குத் தெரியாமற் போவதையிட்டு நாம் ஆச்சரியமடையும் அதே வேளையில் மன வேதனையும் அடைகின்றோம்.

சிறீலங்கா அரசாங்கமானது எமது உணர்வுகளை இதுவரை காலமும் ஆயுத பலங்களைக் கொண்டு அடக்கி வருகின்றது. தமிழ் பேசும் மக்களால் இனியும் பொறுக்க முடியாது என்ற ஒரு கட்டத்தில் தான் எதிர்கால சந்ததியினர் வளமாக வாழ வேண்டுமென்ற ஒரே நன்நோக்கோடு தமக்கு ஏற்படக்கூடிய உயிர் ஆபத்துக்களையும் பொருட்படுத்தாது மரபுவழித்தாயகம், சுயநிர்ணய உரிமை, ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே என்ற கோரிக்கைகளை முன்வைத்து குனிந்து கிடந்த தலைகளை மெல்ல நிமிர்த்தி வருகின்றனர். அந்த வகையில் நிமிர முற்படும் எம் தலைகளிற்கு பேசப்படும் விலைகளையும் பொருட்படுத்தாது பல்கலைக்கழக சமூகங்களின் குரல்களுடன் எமது குரல்களையும் இணைத்துக் கொள்கின்றோம். நசிந்து நாம் இங்கு கிடக்க மாட்டோம், நாமெல்லாம் நிமிர்ந்து நிற்போம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

## ரஷ்ய...

களை அவர்கள் தோற்றுவிப்பதைத் தடுக்கவேண்டியது சமாதானப் படையின் கடமை என்றும் ரஷ்ய அமைச்சர் தெரிவித்தார்.

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

## அங்கோலா...

தலைநகர் லுவான்டாவில் இரு-ந்து பயணம் மேற்கொண்ட மேற்படி விமானம் இறங்க முற்படுகையில் கடும் மழைகாரணமாக மலைப் பகுதியில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. கட-ந்த நான்கு வருடங்களில் அங்கோலாவில் பத்து இராணுவ, பொதுப் போக்குவரத்து விமானங்கள் விபத்துக்குள்ளாகியதில் 150 பேர்வரை கொல்லப்பட்டுள்ளனர்.

(32-ம் பக்கத் தொடர்ச்சி)

## பெர்னாண்டஸ்...

ஜஸ்வந்த சிங் கடந்த ஞாயிறன்று ஏற்றுக்கொண்டார். ஜஸ்வந்த் சிங் பாதுகாப்பு பொறுப்பிற்கு நியமிக்கப்பட்டதை பெர்னாண்டஸ் நல்ல முடிவு என வரவேற்றுள்ளார்.

இந்திய அரசியலில் ஏற்பட்டுள்ள இப்பெரும் நெருக்கடிக்கு காங்கிரஸ் கட்சியும், பாகிஸ்தானும் தான் காரணம் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன. போபர்ஸ் ஊழல் வழக்குளில் சிக்கியுள்ள காங்கிரஸ் அதில் இருந்து தப்பித்து மக்களை திசை திருப்புவதற்காக திட்டமிட்டு மேற்கொண்ட ஒரு நாடகம் இது என பா.ஜ.க வட்டாரச் செய்திகள் கூறுகின்றன.

இதேவேளை, இச் செய்தியை வெளியட்ட டெஹல்கா. கொம் நிறுவனத்தின் நிருபர் தெரிவிக்கையில்,

இந்தியப் பத்திரிகைத்துறை தனது திறமையை எடுத்துக்காட்டுவதற்கு இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது என்றும், பத்திரிகைத்துறை செய்தி தருவதோடு மட்டுமல்லாது ஒரு கண்காணிப்பு அமைப்பாகச் செயல்பட முடியும் என்பதையும் காட்டவே இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. இத்தகைய நடவடிக்கைகள் பத்திரிகைத்துறைக்கு புதிய பரிமாணம் அளிக்கப்பட்டு மேலும் பலர் இத்துறைக்கு வர வழிவகுக்கும் எனவும் கூறியுள்ளார்.

## மரண அறிவித்தல்

தோற்றம்
01.05.1926



மறைவு
16.03.2001

### திருமதி சரஸ்வதி சற்குணசிங்கம்

அளவெட்டியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. சற்குணசிங்கம் சரஸ்வதி அவர்கள் 16.03.2001 ல் இலங்கையில் காலமானார். இவர் காலஞ்சென்ற அப்பச்சி அன்னப்பிள்ளை - தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சற்குணசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், கந்தையா, செல்லையா, நற்குணசிங்கம், இ்ராசரத்தினம் (கனடா), கோபாலசிங்கம் (கனடா), ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற மனோன்மணி, காலஞ்சென்ற பொன்னம்மா, றோசம்மா, சிவபாக்கியம் (கனடா), தவமணி (கனடா) ஆகியோரின் மைத்துனியும், குலசிங்கம் (கனடா), ஜெயபாலசிங்கம்(என்றும் அம்பாள் பிரான்ஸ்), குமாரகுலசிங்கம் (இலங்கை), சறோசா (இலங்கை), வனஜா (பிரான்ஸ்),ரவி (என்றும் அம்பாள் பிரான்ஸ்), லலிதா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், பவளசிங்கம்(இலங்கை) செல்வரட்ணம் (பிரான்ஸ்), மோகனதாஸ்(ஜேர்மனி) இராஜேஸ்வரி (கனடா), இந்திராதேவி (பிரான்ஸ்), ரஜனி(பிரான்ஸ்), ஸ்ரீதேவி(இலங்கை), ஆகியோரின் அன்பு மாமியாரும், குமணராஜ், விஜிதா, பொபிதா, ஜனராஜ் (கனடா), இந்துஜா, றஜிந்தியா(பிரான்ஸ்), சதீஸ்(பிரான்ஸ்), லிபோஸ் (இலங்கை), வினோஜன், மேகலன், கீர்த்தனா, கீர்த்திகா, தனுஜன், லக்சலன் (இலங்கை) கௌதம், ரிசி (பிரான்ஸ்), ரஜீவன், மாதங்கி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் 43/7 இராமநாதன் வீதி, நாச்சிமார் கோவிலடியில் உள்ள இல்லத்தல் 18.03.2001 ல் நடைபெறும்.

இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை கவலையுடன் வேண்டுகின்றோம்.

*தகவல்: பிள்ளைகள்*
*குலம்(கனடா) – 00 19 05 94 74 339*
*திருமதி மோகனதாஸ் – 00 11 41 80 237(ஜேர்மனி)*
*ஜெயபாலசிங்கம்(பிரான்ஸ்) – 06 09 58 55 48*
*ரவி(பிரான்ஸ்) – 01 48 21 58 86*
*திருமதி செல்வறட்ணம் – 47561932*

10, Rue de Paris
93800 Epinay S/Seine.
என்றும் அம்பாள்.

Pub Fr

Book a Flight
கொழும்பு, சென்னை சென்றுவர இந்திய விசா வசதிகளுடன் மிகக் குறைந்த விலையில் விமானச் சீட்டுக்கள்!
மிகக் குறைந்த விலையில் விமானச் சீட்டுக்கள்
Tel: 031 318 44 60
Natel 079 622 46 61
Fax: 031 318 44 61
Eamil: info@sivatravel.ch
Siva Travel
Worldwide Travel Service
பிரயாண காப்புறுதி! தமிழ் நாட்டு சுற்றுலா ஒழுங்குகள், மற்றும் விசா ஒழுங்குகளும் செய்து தரப்படும்
SIVA TRAVEL AND FINANCE (PVT) LTD
Spitalgasse- Passage 16,
3011 BERN
Pub

உங்கள் வீடுகள், வர்த்தக நிலையங்களில் சகல விதமான திருத்த வேலைகளுக்கும் காத்திருக்கின்றார்கள்
VICTOR Sarl
கட்டட, மின்சார, தண்ணீர், கழிப்பறை திருத்த வேலைகளை மிகக் குறைந்த கட்டணத்துடன் திறமையான தொழிலாளர்களைக்கொண்டு அமைத்துக்கொள்ள
VICTOR SARL - 25bis, Rue des Chaufourniers, 75019 Paris. Tel: 01 42 06 59 19 Fax: 01 42 06 61 19

ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The Broadway, Southall, Middx. T.P: 0181/813 91 26
Pub

# பேர்னாண்டஸ் பதவி விலகல் ஜஸ்வந்த் சிங் பாதுகாப்பு பொறுப்பு


(19.03.01)

இந்திய மத்திய பாதுகாப்பு அமைச்சர் பதவியில் இருந்து ஜோர்ஜ் பெர்னாண்டஸ் பதவி விலகியமையை அடுத்து, அப் பொறுப்பினை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த் சிங் ஏற்றுக்கொண்டுள்ளார்.

இராணுவத்தினருக்கான ஆயுத பேர ஊழலில் ஆட்சியிலுள்ள பாரதிய ஜனதா கட்சி இடம்பெற்றுள்ளதாகவும், பா.ஜ.க தலைவர் பங்காரு இலட்சுமணன் மற்றும் இராணுவ அதிகாரிகள் ஆயுத வியாபாரிகள் போல் நடித்த பத்திரிகையாளரிடம் இருந்து இலஞ்சமாக பணம் பெறுவதை டெஹல்கா.கொம் எனும் இணையத் தளம் படக்காட்சியுடன் வெளியிட்டிருந்தது. இச் செய்தி இணையத்தளம் ஊடாக வெளிவந்ததை அடுத்து, தன் மீதான குற்றச்சாட்டை மறுத்து அக்கட்சியின் தலைவர் பங்காரு இலட்சுமணன் தனது பதவியை இராஜினாமாச் செய்தார்.

இதேவேளை, ஆட்சியிலுள்ள பா.ஜ.க.விற்கு ஆதரவு வழங்கிவந்த திரிணாமூல் காங்கிரஸ் தனது ஆதரவை விலக்கிக் கொண்டது. பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் பதவி விலக வேண்டும் என்பதை வலியுறுத்தி திரிணாமூல் காங்கிரஸ் கட்சியின் தலைவியும் தொடருந்து போக்குவரத்து அமைச்சருமான மம்தா பனர்ஜி தனது பதவியிலிருந்து விலகியதுடன் ஆதரவையும் விலக்கிக்கொண்டார்.

இந்நிலையில், தொலைக் காட்சியில் தோன்றி உரையாற்றிய பாதுகாப்புத்துறை அமைச்சரும், சமதா கட்சியின் தலைவருமான ஜோர்ஜ் பெர்னாண்டஸ், பாதுகாப்புத்துறை அமைச்சர் பதவியில் இருந்து தான் விலகிக்கொள்வதாக தெரிவித்ததுடன், தம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் பொய்யானவை எனவும் தான் இதற்கு விளக்கமளிக்க முயன்ற போதும் எதிர்க்கட்சியினர் பாராளுமன்றத்தை மூன்று நாட்களாக முடக்கியதால் தன்னால் விளக்கம் அளிக்க முடியவில்லை எனவும் தெரிவித்ததோடு தனது பதவி இராஜினாமாக் கடிதத்தை பிரதமர் வாஜ்பாயிடம் ஒப்படைத்தார். வாஜ்பாய் இராஜினாமாவை ஏற்றுக் கொண்டதையடுத்து, பெர்னாண்டஸ் மீதான விசாரணைகள் முடிவடைந்து அவர்




குற்றமற்றவர் என நிரூபிக்கப்படும் வரை தற்காலிகமாக பாதுகாப்பு பொறுப்பினை வெளியுறவுத்துறை அமைச்சர்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# நசிந்து கிடக்க மாட்டோம் நிமிர்ந்து நிற்போம்

## – வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி

(19.03.01)

மரபு வழித்தாயகம், சுயநிர்ணய உரிமை, தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே என்ற கோரிக்கைகளை முன்வைத்து வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி மாணவர்கள் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர். இன்று வெளியிடப்பட்டுள்ள அவ் அறிக்கையின் விபரம் வருமாறு:

நாட்டை எரித்துக் கொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்கு முடிவு காணப்பட்டு வளமான எதிர்காலமொன்றை நோக்கி நாங்கள் அனைவரும் தூய மனங்களுடன் இந்த நாட்டை இட்டுச் செல்ல வேண்டும் என்ற நன்நோக்கின் அடிப்படையில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சமூகம் பல்வேறு நெருக்குவாரங்களுக்கு மத்தியில் பொங்குதமிழ்—2ஐ முன்னெடுத்து செல்வதையறிந்து நாமெல்லாம் மனப்பூரிப்பு அடைவதுடன் எமது பூரண ஆதரவையும் வெளிப்படுத்துகின்றோம். அந்த வகையில் அமெரிக்கத் தூதர் திரு.அஸ்வி வில்ஸ் அவர்கள், விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் அல்ல எனத் தெரிவித்த கூற்றிற்கு நாமும் கடும் கண்டனத்தை தெரிவிப்பதுடன் அவர் அந்தக் கூற்றைத் திருப்பப் பெறவேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறோம்.

இனப்பிரச்சினை என்பது புலிகளால் தோற்றம் பெற்றதல்ல, இனப்பிரச்சினையே புலிகளை பிரசவித்தது என்ற உண்மையையும், தமிழ் மக்களின் விடுதலையை நோக்கி விடுதலைப் புலிகளே தொடர்ந்தும் சென்று கொண்டிருக்கின்றனர் என்பதையும், புலிகள் பலமாக இருக்கின்ற ஒரே காரணத்தினாலேயே 1983ற்கு முன்னர் நடந்தது போன்ற பெரியளவான இனக்கலவரங்களை அரசாங்கம் கட்டவிழ்த்து விடாது புலிகளைச் சர்வதேச ரீதியிலும் உள்நாட்டிலும் ஒழிப்பதில் தீவிர கவனம் செலுத்தி வருகின்றது என்ற யதார்த்தத்தையும் உலக நாடுகள் உட்பட அனைவரும் அறிந்திருந்தாலும் ஏன் அறியாதது போல் செயற்படுகின்றார்கள் என்பது எமக்குப் புரியாத புதிராக உள்ளது. இவ்வளவிற்கும் மத்தியில் சந்திரிக்கா அரசானது உலகத்தின் கண்களில் சமாதானத்திற்கான யுத்தமென்றும், பயங்கரவாத ஒழிப்பென்றும் மண்ணைத் தூவியபடி எந்தளவிற்கு தமிழ் மக்களை ஒடுக்க முடியுமோ அந்தளவிற்கு ஒடுக்கி வருகின்றது. பிந்துனுவெவ, மிருசுவில் சம்பவங்கள் அவற்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

# புலிகள் மீதான தடை துரதிஷ்டவசமானது

## – பிரித்தானியத் தூதர்

(19.03.01)

இனப்பிரச்சனைக்கு தீர்வு காண பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் போது பிரித்தானியாவில் விடுதலைப் புலிகளை தடை செய்யும் சட்டம் கொண்டுவரப்பட்டமை துரதிஷ்டவசமானது என சிறீலங்காவிற்கான பிரித்தானியாத் தூதர் லிண்டா டுபீள்ஸ் தெரிவித்துள்ளார். விடுதலைப் புலிகள் மீதான தடை குறித்து கொழும்புத் தமிழ்க்கட்சி ஒன்று கடந்தவாரம் தூதரைச் சந்தித்துப் பேசிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். இச் சந்திப்பின்போது, தடைப் பட்டியலில் இருந்து விடுதலைப் புலிகளின் பெயரை நீக்க தூதர் முயற்சி செய்ய வேண்டும் எனவும் அக்கட்சியினர் கோரிக்கை விடுத்ததாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# வரவு செலவுத் திட்டம் நிறைவேறியது

(19.03.01)

சிறீலங்கா அரசின் இவ்வருடத்திற்கான வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் 9 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இவ்வரவு செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 115 வாக்குகளும் எதிராக 106 வாக்குகளும் கிடைத்தன. எதிராக ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, தமிழர் விடுதலை கூட்டணி, ரெலோ, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஆகியன வாக்களித்தன.

Southharrow Food & Wines
234 & 236 Northolt Road, South Harrow, HA2 8DU
Tel: 02084236321
உங்கள் அன்றாட அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்துகொள்ள நாடவேண்டிய ஒரே நிறுவனம் Southharrow Food & Wines
★ வாரம் ஏழு நாட்களும் இரவு 11 மணி வரையும் திறந்திருக்கும்
Pub